நிலா காமிக்ஸ்

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்



5

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்

நிலா காமிக்ஸ்

www.nilacomics.com



வணக்கம்!
திருக்கோவிலூர் மலையமான் கூறியதை கேட்டீர்கள் அல்லவா! பாட்டன் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும். வாருங்கள், இளவரசர் கடம்பூர் கோட்டை வாசலை நெருங்கிவிட்டார். ஆதித்த கரிகாலருக்கு, கடம்பூர் அரசர் தரும் வரவேற்பைப் பார்க்கலாம் வாருங்கள். மக்கள் திரள், திரளாக கடம்பூரை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். நாமும் அவர்களுடன் சேர்ந்து கொள்வோம்.


கொம்பு, எக்காளம் போன்ற ஊதும் இசைக் கருவிகள் ஆதித்த கரிகாலரை வரவேற்கும் விதமாக இசைக்கப்படுகின்றன.
க்ளக்
க்ளக்
க்ளக்
தொம்டர
தொம்
பன்னிரெண்டாம் பிராயத்தில் போர்க்களம் புகுந்த வீராதி வீரர்! வீர பாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரி!


இரட்டை மண்டலத்தார் சொப்பனத்தில் கண்டு அஞ்சும் சிங்கம்! தொண்டை மண்டலாதிபதி! வடதிசை மாதண்ட நாயகர்! மூன்று உலகையும் ஆளும் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருமகனார்! ஆதித்த கரிகால சோழ மகாராஜா வருகிறார்! பராக்!! பராக்!!
கொல்லி மலை மன்னன் வல்வில் ஓரி - அவனுடைய பரம்பரை வழி வந்த ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, வீர கம்பீர சம்புவரையர். சோழ குலத்திற்கு என்றும் துணைவன், வீர நாராயண ஏரியின் காவலன், ஐயாயிரம் வீரப் படையின் தண்ட நாயகன்....
அரண்மனையில் வசிக்கும் ராணிமார்களும், இளவரசிகளும் மாவீரர் ஆதித்த கரிகாலரை பார்க்க ஆவலாக அரண்மனை மேல் மாடத்தில் வந்து காத்திருக்கிறார்கள்.


மாவீரர் கரிகாலர் வாழ்க!
மாவீரர் கரிகாலர் வாழ்க!
மாவீரர் கரிகாலர் வாழ்க!
மேல் மாடத்திலிருந்த அரசகுலப் பெண்கள் மலர் தூவி பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலரை வரவேற்கின்றனர்.
நான் நினைத்தது போல் வந்துவிட்டீரா! உமக்காக அல்லவா வெகு காலமாக காத்திருக்கிறேன்.
அண்ணன் கந்தமாறனுடனும் இளவரசருடனும் சேர்ந்து அவரும் வந்திருக்கிறாரே!
மகிழ்ச்சியில் மேலும் மலர்களை அள்ளி வருகிறாள் மணிமேகலை.
மணிமேகலை! அதை இப்படி காட்டு.


மணிமேகலை கொண்டு வந்த மலர்களிலிருந்து ஒரு மலரை மட்டும் எடுத்து அதை சரியாக ஆதித்த கரிகாலரின் மேல் படுமாறு வீசுகிறாள் நந்தினி.
அது சரியாக கரிகாலரின் தலையில் பட்டு விழுகிறது.
ஆகா! உன் ஆட்டத்தை தொடங்கிவிட்டாயா?
இளவரசர் நிமிர்ந்து பார்க்க நந்தினியும் அவரைப் பார்க்கிறாள்.
யார் தடுத்தாலும் நீர் வருவீர் என்று எனக்கு தெரியும்.


அதே வேளையில், மணிமேகலை வந்தியத்தேவன் மீது, தான் கொண்டு வந்த மலர்கள் முழுவதையும், அவன் மேல் தூவுகிறாள்.
ஆகா! யார் நம் மேல் இத்தனை கரிசனம் காட்டுவது!
மணிமேகலையா! என்னை மன்னித்துவிடு. மேலும் இவளுடைய ஆசை வளர நாம் காரணமாக இருக்க கூடாது.
நான் வேறொரு பெண்ணுக்கு என் மனதை பறிகொடுத்து விட்டேன் என்பதை எப்படி இவளிடம் எடுத்துக் கூறுவது.
இனியும் நாம் இங்கிருப்பது நல்லதல்ல!
என்று நினைத்து கூட்டத்தோடு கூட்டமாக பதுங்கி விடுகிறான் ஆழ்வார்க்கடியான்.



இளவரசர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
இளவரசரை நாங்கள் பார்க்க வேண்டும். அவரிடம் பேச வேண்டும்.
இளவரசரிடம் பேச வேண்டும் எங்களை உள்ளே விடுங்கள்.
அவரிடம் எங்கள் குறைகளை கூற வேண்டும். எங்களை உள்ளே விடுங்கள்.
எங்களை உள்ளே விடுங்கள்.
இளவரசர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
மக்களின் குரல் ஒலியால் கோட்டையே அதிர்கிறது.
மக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் காவலர்கள் கோட்டைக் கதவை சாத்துகிறார்கள்.


கோட்டைக் கதவு சாத்தும் சத்தம் கேட்டு இளவரசர் கரிகாலர் திரும்பி பார்க்கிறார்.
என்ன பழுவூர் பாட்டா! என்ன கடம்பூர் மாமா! என்னையும் சக்கரவர்த்தியை சிறையில் வைத்தது போல், சிறை வைக்கப் பார்க்கிறீர்களா?
இதை கேட்டு இருவரும் அதிர்ந்து போகிறார்கள். அதை பொருட்படுத்தாமல் இளவரசர் இருவரையும் கடந்து செல்கிறார்.
ஹா ஹா...!
என்ன இது? வந்ததும் வராததுமா இப்படி பேசிவிட்டு செல்கிறார் இளவரசர்!
வழியோடு போகிற சனியனை விலைக்கு வாங்கியது போல் ஆகிவிட்டதே நம் கதை!
நீர் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். அவன் நண்பன் பார்த்திபேந்திரன், அவனை கட்டுக்குள் வைத்திருக்க நமக்கு உதவியாக இருப்பான்.


நந்தினி கரிகாலன் வருகைக்காகவும், மணிமேகலை வந்தியத்தேவன் வருகைக்காகவும், மேல் மாடத்தில் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.
மணிமேகலை மற்றும் மற்ற தோழிப் பெண்கள் இளவரசரைக் கண்டதும் அங்கிருந்து ஓடிவிடுகிறார்கள்.
என்ன பழுவூர் பாட்டி... நலமா?
பழுவூர் பாட்டி நலம்தான். ஆனால், அர்ச்சகர் வீட்டு பெண்தான் பாவம்!
நீ அர்ச்சகர் வீட்டு பெண் என்பதை இன்னும் என்னை நம்ப சொல்கிறாயா நந்தினி?
என்று கேட்டுக் கொண்டே பெரிய பழுவேட்டரையரையும், சம்புவராயரையும் பார்க்கிறார் கரிகாலர்.


தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டிருந்த இருவரும் இளவரசர் தங்களை பார்க்கிறார் என்பதை உணர்ந்து, இளவரசரை திரும்பிப் பார்க்கிறார்கள்.
எனக்கென்னமோ நிமித்தம் சரியாகப்படவில்லை.
அப்போது கோட்டைக்கு வெளியே மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.
இளவரசரை பார்க்க வேண்டும்.
இளவரசரை பார்க்க வேண்டும்.
ஆதித்த கரிகாலர் வாழ்க!
இளவரசரை பார்க்க வேண்டும்.



ஆதித்த கரிகாலர் காவலனிடம்.....
மக்களிடத்தில் அறிவியுங்கள். நான் இன்னும் சில காலம் இங்கு தங்க இருப்பதாகவும், அதே போல் நானும் மக்களை சந்திக்க விரும்புவதாகவும் அறிவியுங்கள்.
டுடும்... டுடும்...
இதனால் மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால்.


அன்றிரவு நந்தினியும், இளவரசி மணிமேகலையும் ஆடு புலி ஆட்டம் ஆடுகிறார்கள். மணிமேகலை புலியை தனது காய்களாகவும் நந்தினி ஆடுகளை தனது காய்களாகவும் வைத்து ஆடுகிறார்கள்.
நந்தினியை கண்காணிக்க கோட்டானை அனுப்பியிருக்கிறான் ரவிதாசன்.
அதுவும் அவர்களை கண் கொட்டாமல் நோட்டமிடுகிறது.
அக்கா! உங்களை மிகவும் பிடித்துவிட்டது. பெண்கள் பெண்களை திருமணம் செய்து கொள்வதாக இருந்தால், நான் உங்களுக்குத்தான் மாலை சூடுவேன்! (மணிமேகலை)
அப்படி என்னடி கண்டாய் என்னிடம்!?
அது என்னவென்று சொல்லத் தெரியவில்லை. உங்களை பார்த்ததுமே எனக்கு பிடித்து போய்விட்டது.


முதலில் பெரிய பழுவேட்டரையரை தன் வசப்படுத்தியவள், அதன்பின் ஒவ்வொருவராக மதுராந்தக தேவர், கந்தமாறன், பார்த்திபேந்திரன் இப்போது மணிமேகலை இன்னும் யாரையெல்லாம் தன் வசப்படுத்தி என்ன செய்யப் போகிறாளோ!? இந்த நந்தினி.
சோழநாட்டின் வருங்கால மகாராணிக்கு, என்னை பிடிக்கிறது என்றால் அது என் பாக்கியம்தான்!
ஒரு பெண்ணின் மனதை ஒரு பெண் புரிந்து கொள்ள முடியும். ஆனால், ஆண்கள் அதை புரிந்து கொள்ள மாட்டார்கள். வாணர்குலத்து வீரனிடம் உன் மனம் சென்றிருக்கிறது என்பதை கரிகாலர் அறிந்தால் போதும்.
அக்கா! நான் எத்தனை முறை தங்களிடம் சொல்வது. கரிகாலர் மாவீரராய் இருக்கலாம். சோழநாட்டின் சக்கரவர்த்தியாக இருக்கலாம், பேரழகனாகவும் இருக்கலாம். ஆனால் அவரை என்னால் திருமணம் செய்து கொள்ள முடியாது.
உன்னுடையவரின் உடம்பில் தலை இருக்காது.
அக்கா! அவருக்கு ஒன்று என்றால், நான் எதையும் செய்ய தயங்க மாட்டேன்.


ஆடு புலி ஆட்டத்தில் தனது காயை (ஆட்டை) நகர்த்தி...
மணிமேகலை! உன் புலி என்னிடத்தில் சிக்கிக் கொண்டது.
அக்கா! இந்த ஆட்டத்தில் என் மனம் செல்லவில்லை.
இந்த ஆட்டம் உன்னுடையது அல்ல கண்மணி, இது என்னுடைய ஆட்டம்! (நந்தினி)
குழந்தை மனம் கொண்ட மணிமேகலைக்கு, நந்தினியின் வஞ்சகப் பேச்சின் உட்பொருள் விளங்கவில்லை. அப்போது மணிமேகலைக்கு சட்டென்று ஒரு யோசனை வந்தது.
அக்கா! என் அண்ணன் கந்தமாறன் தாங்கள் இட்ட கோட்டை தாண்டமாட்டான். நீங்கள் அவனிடம் பேசி அவர்கள் இருவருக்கும் (கந்தமாறனுக்கும் - வந்தியத்தேவனுக்கும்) உள்ள விரோதத்தை போக்கிவிடலாம் அல்லவா?


அடி பெண்ணே! நான் எந்த நோக்கத்தோடு இங்கே வந்தேனோ அதற்கு விரோதமாக என்னை செய்ய சொல்கிறாய். நீ வெகு கெட்டிக்காரிதான்.
நீ சொல்றபடி வேண்டுமானால் உன் அண்ணனை சரி கட்டிவிடலாம். கரிகாலரையும் கூட இதிலிருந்து விலகிவிட செய்ய முடியும். ஆனால், அவன் (வந்தியத்தேவன்) மனதில் நீ இருக்கிறாய் என்பது என்ன நிச்சயம்?
அந்த காஞ்சிபுரத்து வாலிபனின் மனதில் நீ இருக்கிறாய் என்பது என்ன நிச்சயம்? (நந்)


மறுநாள் காலை விசாலமான அறையில் பெரிய பழுவேட்டரையர், சம்புவரையர் உடன் கந்தமாறனும், பார்த்திபேந்திரனும் கூடி பேசி கொண்டிருக்கிறார்கள். அங்கு ஆதித்த கரிகாலனும், வந்தியத்தேவனும் வருகின்றனர்.
பழுவூர் பாட்டா! கடம்பூர் மாமா!
தாங்கள் இங்குதான் இருக்கிறீர்களா? உங்களை தேடித்தான் வந்தேன்.
உங்களிடம் முக்கியமான ஒன்று கேட்க வேண்டும்.
பாட்டா! நான்கு மாதங்களுக்கு முன் கடம்பூர் மாளிகையில் உங்கள் தலைமையில் ஏதோ கூட்டம் நடந்ததாக கேள்விப்பட்டேன். அதற்கு பல சிற்றரசர்களை அழைத்திருக்கிறீர்கள். அந்த விருந்துக்கு என்னை ஏன் அழைக்கவில்லை? என் பாட்டன் மலையமானை ஏன் அழைக்கவில்லை?


அது... அது வந்து...!
இளவரசே! இந்த ராஜ்யத்தில் கண்டராதித்தர் புதல்வர் மதுராந்தகருக்கு பாத்தியம் இருக்கிறது அல்லவா!
யார் இல்லை என்று கூறினார்கள்!
என் தந்தை எனக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடத்தியபோது, நீங்கள் எல்லோரும் அதில் கலந்து கொண்டீர்கள் அல்லவா?
அப்போது ஏன் மதுராந்தகதேவரின் உரிமையைக் கோரவில்லை? அப்போது எங்கு சென்றிருந்தார் என் சிற்றப்பன்?
இப்போது மதுராந்தகனுக்கு உங்கள் தம்பி மகளை கொடுத்திருப்பதால் மதுராந்தகனின் உரிமையைக் கோருகிறீர்களா? பாட்டா!


சோழ ராஜ்யம் இப்போது முன்னை போல் இரண்டு வெள்ளாறுகளுக்கு மத்தியில் குறுகிக் கிடக்கவில்லை! குமரி முனையிலிருந்து கிருஷ்ணா நதி வரையில் பரவிப் படர்ந்திருக்கிறது.
கொள்ளிட நதிக்கு தெற்கு உள்ள ராஜ்யத்தை மதுராந்தகத் தேவருக்கும் வடக்கேயுள்ள பகுதியை தங்களுக்கும் என்றும்.....
இராஜ்யத்தை பிரிப்பதில் எனக்கு சிறிதும் விருப்பமில்லை.
வழிவழியாக வந்த இராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான். தாலி கட்டிய மனைவியைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான்! கிழவர்களாகிய உங்களுக்கு அது சம்மதமாயிருக்கலாம்! எனக்கு சம்மதம் இல்லை! (கரிகாலர்)


மேல் மாடத்திலிருந்து நந்தினியும், மணிமேகலையும் இவர்களுக்குள் நடக்கும் போராட்டத்தை பார்க்கிறார்கள். கரிகாலனின் பேச்சு நந்தினிக்கு கோபத்தை உண்டாக்க, அங்கிருந்து அவள் சென்று விடுகிறாள்.
கரிகாலன் பேசியதை கேட்டு கோபமடைந்து பழுவேட்டரையரின் கை தானாகவே உறை வாளுக்கு செல்கிறது.
பாட்டா! என்ன இதற்குள் எழுந்து போக பார்க்கிறீர்கள்? என்னுடைய யோசனையை முழுவதும் கேட்டுவிட்டு போங்கள்.
இவனுடைய போக்கே சரியாக இல்லை. சின்னவங்க, பெரியவங்க என்றும் பாராமல் அதிகபிரசங்கியாக இருக்கிறான் ! இந்த வார்த்தையை வேறொருவர் பேசியிருந்தால் அவன் தலை இந்நேரம் தரையில் உருண்டிருக்கும் !
நீங்களும் உங்கள் முன்னோர்களும் ஐந்து தலைமுறையாக பாடுபட்டு, எத்தனையோ வீராதி வீரர்களின் உயிர்களை பலி கொடுத்துச் சோழ இராஜ்யம் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. இதை இரண்டாக பிரித்து சிறிய பகுதிகளாக்குவது பாவமாகும். (கரிகாலர்)


அந்த யோசனையை விட்டு விடுங்கள். இந்த பெரிய சோழ இராஜ்யம் முழுவதையும்........
மதுராந்தகனுக்கே விட்டுக் கொடுத்துவிட நான் ஆயத்தமாயிருக்கிறேன்.
!
ஒரு நொடிப் பொழுதில் இவ்வளவு பெரிய இராஜ்யத்தை இழக்க துணிந்துவிட்டாரே கரிகாலர்! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது சரியாகத்தான் இருக்கிறது!
ஆனால், ஒரு நிபந்தனை!
எனக்கு வட திசை மீது படையெடுத்துச் செல்ல மூன்று லட்சம் போர் வீரர்கள் கொண்ட சைன்யம் வேண்டும்.


அந்த மாபெரும் சைன்யத்துக்கு வேண்டிய தளவாட சாமான்களும், சாமக்கிரியைகளும், ஒரு வருஷத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் வேண்டும். அது போதும்! (கரிகாலர்)
என்னுடைய வாள் வலி கொண்டும் எனக்கு துணை வரும் வீரர்களின் தோள் வலி கொண்டும், கிருஷ்ணா நதிக்கு வடக்கே நானாக கைப்பற்றும் நாடுகளுக்கு சக்கரவர்த்தி ஆவேன்! அப்படி இல்லையென்றால் சோழ குலத்தின் வீரப் புகழை நிலை நாட்டினோம் என்ற மகிழ்ச்சியுடன் வீர சொர்க்கம் அடைவேன்!
அதற்கு தாங்கள் முதலில் தஞ்சை சென்று, மதுராந்தகத் தேவனை இங்கே அழைத்து வாருங்கள்.
நாம நினைச்சது ஒன்னு, நடக்கிறது ஒன்னாயில்ல இருக்கு. இளவரசரை நம்ம அரண்மனைக்கு அழைச்சதே மணிமேகலையை திருமணம் செய்து வைக்கலாம் என்றுதானே! இளவரசர் என்னடானா இந்த இராஜ்யமே வேண்டாமுன்னு சொல்றாரே!
இவன் பேச்சை எந்த அளவுக்கு நம்புவது? மதுராந்தகனை இங்கே வரவழைத்த பிறகு, ஏதேனும் விபரீத காரியம் செய்ய உத்தேசித்திருந்தால்!


என்ன பழுவூர் பாட்டா! கடம்பூர் மாமா! சம்மதமா?
என்ன சொல்வதென்று ஒன்றும் புரியாமல் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.
என்ன பாட்டா! உங்கள் விருப்பப்படி, உங்கள் தர்மப்படி மதுராந்தகனுக்காக இந்த இராஜ்யத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டேன். பிறகு எதற்கு இந்த யோசனை? (கரிகாலர்)
இளவரசே! தங்களுடைய நிபந்தனையை ஒப்புக்கொள்ள நாங்கள் யார்? எங்களுக்கு என்ன உரிமை இருக்கு? சக்கரவர்த்தியை அல்லவா கேட்க வேண்டும்!
பாட்டா! சக்கரவர்த்தியின் பெயரைச் சொல்லி யாரை ஏமாற்றலாம் என்று பார்க்கிறீர்கள்? என்னை ஏமாற்ற முடியாது. எனக்கு தெரியாது என்றா எண்ணினீர்கள்? (கரிகாலர்)


சின்ன பழுவேட்டரையர் அனுமதியின்றி யாராவது என் தந்தையை பார்க்க முடியுமா?
ஈழத்திலிருந்து என் தம்பியை சிறைபடுத்திக் கொண்டு வருவதற்கு, சக்கரவர்த்தி கட்டளை போட்டது தன் சொந்த விருப்பத்தினாலா?
ஒன்று தெரியுமா? தாங்கள்தான் அருள்மொழியை கடலில் மூழ்கடித்துக் கொன்றுவிட்டதாக, பலர் தாங்கள் பேரில் ஆத்திரப்பட்டு கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்.
இளவரசே! அத்தகைய அபாண்டமான பழியை சொன்னது யார்? கூறுங்கள். சொன்னவனுடைய நாவைத் துண்டித்து, அவனையும் கண்டதுண்டமாக வெட்டிப் போடுகிறேன்!
பழி சொல்கிறவர்களை எல்லாம் கண்டதுண்டமாக வெட்டுவதாக இருந்தால், இந்த சோழ நாடே சுடுகாடாகிவிடும். வேண்டுமானால் சிவபக்தனாகிய மதுராந்தகன் ஆட்சி புரிவதற்கு சோழ நாடு தகுந்த இராஜ்யமாக இருக்கலாம்!


பாட்டா! நான் அதை நம்பவில்லை. சோழ குலத்துக்கு பரம்பரை துணைவர்களான நீங்கள் அத்தகைய பழுபாதகத்தை ஒரு நாளும் செய்திருக்க மாட்டீர்கள்.
அது ஒரு வேளை பாண்டிய நாட்டு மந்திரவாதிகளின் காரியமாயிருக்கலாம்! ஆகையால் அருள்மொழியின் கதிக்கு நீங்கள் பொறுப்பாளி இல்லை. ஆனால், சக்கரவர்த்தியை கேட்டுச் சொல்ல வேண்டும் என்று மட்டும் இனி என்னிடம் சொல்லாதீர்கள். வேண்டுமானால் பழுவூர் பாட்டி இளையராணி நந்தினி தேவியைக் கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்லுங்கள்.
இளவரசர் கூறியதைக் கேட்டு பழுவேட்டரையருக்கு கோபம் தலைக்கேறியது. ஹூம்...
ஆறு தலைமுறையா சோழ குலத்துக்கு உண்மையா உழைச்சதற்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்!


கரிகாலன் கூறியதைக் கேட்டு அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சி அடைகிறார்கள்...!
ஐயா! தாங்கள் எங்கள் வீட்டு விருந்தாளியை...
என்று தடுமாற்றத்துடன் குளறினான் கந்தமாறன்.


என்ன கந்தமாறா! இது உங்கள் வீடா? மறந்துவிட்டேன்!
கொல்லி மலை வல்வில் ஓரியின் வம்சத்தில் பிறந்த வீராதி வீரன் அல்லவா நீ? அதுவும் நீ இருக்கும் இடத்தில் பயந்து பேச வேண்டும்.
ம்...
சம்புவரையர் தன் மகன் கந்தமாறனுக்கு கண் ஜாடையில் அமைதியாக இருக்கும்படி உணர்த்துகிறார்.
அப்படி தவறாக என்ன சொல்லிவிட்டேன்? பாட்டா! நீங்கள் என் பாட்டன் முறை ஆகையால் இளையராணி எனக்கு பாட்டிதானே? அப்படி நான் அழைப்பதில் என் பாட்டிக்கும் வருத்தமில்லை. தங்களுக்கும் வருத்தமில்லை. இந்த சிறு பிள்ளைகளுக்கு எதற்காக ஆத்திரம் பொத்துக் கொண்டு வருகிறது? (கரிகாலர்)
பழுவேட்டரையர் தன் கோபத்தை கட்டுப்படுத்துவதைக் கண்டு...


பாட்டா! இளங்காளைகள் அப்படித்தான் துள்ளிக் குதித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்.
ஆங்! நான் ஆரம்பித்த விஷயத்தை விட்டு விட்டு எங்கேயோ போய்விட்டேன்.
என் தந்தை சக்கரவர்த்தியின் பேரில் தாங்கள் பாரத்தை சுமத்த வேண்டாம். தாங்கள் சம்மதித்தால் என் தந்தையும் சம்மதித்தார் போலதான்!


பழுவேட்டரையர் சிறிது யோசித்துவிட்டு...
கோமகனே! தாங்கள் அதிசயமான விருப்பத்துக்கு நான் சம்மதித்தாலும் மதுராந்தகத் தேவரின் சம்மதம் எப்படியும் வேண்டுமல்லவா?
அப்போது அதற்கு பதிலேதும் கூறாமல் தலை அசைக்கிறார் ஆதித்த கரிகாலர்.
அது மட்டுமில்லாமல் சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுக் கொள்ளாமல் படையெடுப்புக்கு தாங்கள் புறப்பட முடியுமா?


அது மட்டும் முடியாது பாட்டா! அங்கே என் அன்னையும், என் சகோதரி இளைய பிராட்டி குந்தவையும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் முடிதுறந்து தேசாந்தரம் செல்வது சம்மதமாயிருக்காது. அவர்கள் பேச்சை நான் மீறுவதும் கஷ்டம்.
தாங்கள் உடனே சென்று மதுராந்தகத் தேவனை இங்கே அழைத்து வாருங்கள். இந்த விஷயம் இந்த கடம்பூர் மாளிகையில்தான் முடிவாக வேண்டும்.
முதலில் மதுராந்தகனை இங்கு அழைத்து வாருங்கள். கூடி பேசி முடிவு செய்து விடுவோம்!
மதுராந்தகனுக்கு பட்டம் கட்டிய பின் நான் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் என் பெற்றோர்களை இருக்கச் செய்துவிட்டு, அப்படியே அவர்களிடம் ஆசி பெற்று நான் புறப்படுகிறேன்.
என்று கூற பழுவேட்டரையர் சிந்தனையில் ஆழ்கிறார்.
ம்... நாம் இருக்கும் போது நம்மை மீறி அப்படி என்ன செய்துவிட முடியும்! அதையும்தான் பார்த்து விடுவோம்!


கோமகனே! தங்களுடைய கட்டளைக்கு மாறாக நான் என்ன சொல்ல முடியும்.
கட்டளை என்று சொல்லாதீர்கள் பாட்டா! சோழ சாம்ராஜ்யத்தின் சேவையில் தலை நரைத்துப் போன தங்களுக்கு இந்த சிறுவனா கட்டளையிடுவது? என்னுடைய பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பதாகச் சொல்லுங்கள்.


ஆகட்டும்!
ஆகட்டும்! என்று கூறி பழுவேட்டரையர் புறப்பட்டு சிறிது தூரம் சென்றதும்....


பாட்டா!
இம்முறை மதுராந்தகனை பகிரங்கமாகவே யானை மீது ஏற்றி வைத்து இவ்விடத்துக்கு அழைத்து வாருங்கள். (கரிகாலர்)
அல்லது பொன்னாலான ரதத்தில் ஏற்றி அழைத்து வாருங்கள். இளையராணியின் மூடு பல்லக்கில் மட்டும் இந்த தடவை வேண்டாம்.
ஹா..ஹா..
ஹா..ஹா..


பழுவேட்டையரை தஞ்சை சென்று மதுராந்தகனை இங்கு அழைத்து வரும்படி கரிகாலர் கூற, அவர் நேராக நந்தினி இருக்கும் அறைக்கு வருகிறார். கீழே அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் நந்தினி இருக்கும் அறையிலிருந்து சிரிப்பு சத்தம் வந்தது. அது அவருக்கு கோபத்தை ஏற்படுத்திவிட்டது.
சீ.. சீ..! துஷ்டப் பெண்! அவளோடு சேர்ந்து நீயும் சிரித்தாயே!
ஆம்! அவளோடு சேர்ந்து சிரித்தேன். அவள் அப்பால் போனதும் அழலாம் என்று இருந்தேன். அதற்குள் தாங்கள் வந்துவிட்டீர்கள்.
ஆகா! உன்னை இப்பேர்ப்பட்ட மூடர்களின் மத்தியில், நான் அழைத்து வந்தது என் தவறு!
நாளை பொழுது விடிந்ததும் நாம் தஞ்சாவூருக்கு புறப்பட்டுப் போகலாம். இன்றிரவு மட்டும் பொறுத்துக் கொள். (பழுவேட்டரையர்)


சுவாமி! தாங்கள் தஞ்சாவூருக்கு போய் வாருங்கள். நான் வர மாட்டேன். ஆதித்த கரிகாலருக்கு புத்தி கற்பிக்காமல் நான் இங்கிருந்து வர மாட்டேன்.
இது என்ன பிடிவாதம்?


அந்த கர்வம் பிடித்த இளவரசர்! ஒன்று தங்கள் காலில் விழுந்து, அவன் பேசியதற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும். அல்லது தங்கள் கத்திக்கு அவன் இரையாக வேண்டும்.
இது என்ன பேச்சு? இல்லை நந்தினி, இல்லை! இதை கேள், எங்கள் குலம் சோழ குலத்தோடு ஆறு தலைமுறையாக நட்புரிமை கொண்டது. அந்த அறியாச் சிறுவன் ஏதோ உளறினான் என்பதற்காக அக்குலத்திற்கு எதிராக நான் கத்தி எடுக்க முடியுமா?



சுந்தர சோழரின் புதல்வனை,
இன்று வரையில் பட்டத்து
இளவரசராக இருப்பவனை என்
கையினால் கொல்வதா?
ஐயா! தாங்கள் சோழ
குலத்தோடு ஆறு
தலைமுறையாக நட்பு
கொண்டவர்கள். உறவும்
கொண்டவர்கள்.
ஆகையால்....
தாங்கள் கத்தி எடுக்க
தயங்குவது இயல்பு. ஆனால்
எனக்கு அத்தகைய உறவு
ஒன்றுமில்லை. நான் எந்த
விதத்திலும் சோழ குலத்துக்கு
கடமைபட்டவள் அல்ல.
ஒன்று ஆதித்த கரிகாலன்
தங்களை அடிபணிந்து
மன்னிப்பு கேட்க வேண்டும்.
அல்லது என் கையில்
இருக்கும் இந்த கத்திக்கு
இரையாக வேண்டும்!


இது என்ன பிடிவாதம்?
சுவாமி! நான் சொல்வதைக் கேளுங்கள். இப்போது தங்களுடன் என்னை அழைத்து போனால், கிழவருக்கு இளைய ராணியிடம் அவ்வளவு நம்பிக்கையில்லை என்று சொல்வார்கள்.
சுவாமி! அதுவும் இல்லாமல் தாங்கள் இல்லாத சமயத்தில் இவர்கள் இங்கே என்ன சதி செய்வார்களோ? கடம்பூர் அரசரை பார்த்தீர்களா, பழைய ஏற்பாடுகளை எல்லாம் மறந்துவிட்டார்! தன் அருமை மகள் தஞ்சாவூர் தங்க சிம்மாசனத்தில் ஏறப் போவது பற்றி கனவு காண துவங்கிவிட்டார். (நந்தினி)
ராணி! நான் சொல்வதைக் கேள். உன்னால் கரிகாலனுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தாலும் அந்த குற்றம் என்னையே வந்து சேரும்.
அப்படியானால் தாங்கள் உடனே இந்த ஊரை விட்டு போக வேண்டியதுதான்!
நந்தினி கூறியதைக் கேட்டு, அவரால் சமாதானம் அடைய முடியவில்லை.


அவனுடைய மரணம் என்னுடைய கரத்தினால் நேராது. தங்களுக்கு என்னால் ஒரு பழியும் ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்வேன்!
நாதா! என் பேச்சில் நம்பிக்கை உள்ளது அல்லவா?
என்று கேட்டுவிட்டு பழுவேட்டரையரின் நெஞ்சை ஊடுருவி பார்க்கிறாள்.


பெரும் புயல் மழை அடிக்கிறது. அதைப் பொருட்படுத்தாமல் கொள்ளிடம் நதியில், படகில் பயணம் செய்கிறார் பழுவேட்டரையர்.
ஆதித்த கரிகாலனை கடம்பூர் மாளிகைக்கு வரவழைத்தால் சம்புவராயருடன் சேர்ந்து அவனை நயத்தினாலும், பயத்தினாலும் நம் விருப்பப்படி நடக்க வைக்கலாம் என்று நினைத்தோம்! ஆனால், நாம் எதிர்பார்த்தபடி அவன் இல்லை. பெரியவர்களிடம் அடங்கி நடப்பான் என்று பார்த்தால் அதிக பிரசங்கியாக இருக்கிறான். வேண்டுமென்றே நந்தினியின் மனம் புண்படும்படி பாட்டா, பாட்டி என்று கூறி வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுகிறான். அவன் மட்டும் சக்கரவர்த்தியின் பிள்ளையாக மட்டும் இல்லையென்றால் அவனுக்கு சரியான பாடம் புகட்டியிருக்கலாம். என்ன செய்வது?
ஒருவேளை மதுராந்தகனை கரிகாலன் கூறியபடி இங்கு அழைத்து வருவதாக இருந்தாலும், எல்லாவற்றிற்க்கும் ஆயத்தமாக வர வேண்டும். காலாந்தக கண்டனை பெரிய படை திரட்டி கொள்ளிடக் கரையில் வந்து காத்திருக்க செய்ய வேண்டியதுதான்.
எதற்கும் தஞ்சைக்கு போவது நல்லதுதான்! காலாந்தகன் நல்ல மதியூகி! அவனிடம் யோசனை கேட்டு செயல்படலாம்.
அந்த மூடர்களிடம் தனியாக விட்டுவிட்டு வந்துவிட்டோம். நாம் என்ன செய்வது? நாம் எத்தனை எடுத்துக் கூறியும் நந்தினி தஞ்சை வர மறுத்துவிட்டாளே!


இப்படியெல்லாம் அவர் மனதில்
பல எண்ணங்கள் ஓடின.
வெளியில் பெரும் புயலும் மழையும் அடிக்கின்றன. அதெல்லாம்
அவர் பொருட்படுத்தவில்லை. ஏனென்றால் அதைவிட பெரும்
புயல் அவர் மனதில் அடித்துக் கொண்டிருக்கிறது.
அதனால் வெளியில் அடிக்கும் புயல்
அவருக்கு தெரியவில்லை..!


புயல் காற்றில் கொள்ளிடம் நதியில் அலைகள், கடல் அலைகள் போல் ஆர்ப்பரித்து பழுவேட்டரையர் வந்த படகு கவிழ்கிறது.



நதியின் கரை உடைந்து அதில் அடித்து செல்லப்படுகிறார் பழுவேட்டரையர். போர்க்களத்தில் பல சாகசங்கள் புரிந்தாலும் இயற்கைக்கு முன்னால் யார்தான் என்ன செய்ய முடியும்? அவர் என்ன ஆனார்? சோழநாடு பெரும் மாவீரரை இழந்துவிட்டதா!?


ஐப்பசி மாதம் என்பதால் மழை கொட்டோ கொட்டு என்று கொட்டுகிறது. தஞ்சைக்கு செல்லும் ராஜவீதியில் உள்ள மண்டபத்தின் பின் கட்டில் ஒதுங்கியிருக்கிறான் ஆழ்வார்க்கடியான்.
அப்போது மண்டபத்தின் முன்கட்டில் பேச்சு குரல் கேட்கிறது. ஆனால், மழையின் இரைச்சலில் தெளிவாக கேட்கவில்லை! அது யாருடைய குரல் என்று பார்க்கிறான் ஆழ்வார்க்கடியான்.
அமுதா! நான் சக்கரவர்த்தியை பார்க்க நேர்ந்தால் என் பெரிய அத்தைக்கு நேர்ந்த அநீதிக்கு நியாயம் கேட்காமல் விடப்போவதில்லை.
நம்மை போன்றவர்கள், சாதாரண மனிதர்கள் அவ்வளவு எளிதில் சக்கரவர்த்தியை சந்தித்துவிட முடியாது பூங்குழலி!


அப்போது அதே ராஜ வீதியில் பல்லக்கை, நனைந்தபடி தூக்கிக் கொண்டு ஓடி வருகிறார்கள் பழுவூர் வீரர்கள்.
இதுக்கு மேல எங்களால தூக்கிட்டு ஓட முடியாது.
வாங்க, வாங்க! இன்னும் கொஞ்சம் தூரந்தான். இதோ தஞ்சை கோட்டையை நெருங்கிவிட்டோம்!
இடி தாக்கி ஒரு மரம் அப்படியே வீதியில் சாய்கிறது!
டம, டமா
அந்த மண்டபத்திற்கு பல்லக்கை கொண்டு வாருங்கள்.


பல்லக்கை அப்படியே இறக்குங்கள். மழை நின்றவுடன் போகலாம்.
காவலர்கள் மழையை பார்த்தபடி நிற்கிறார்கள். பல்லக்கு அவர்களுக்கு சற்று பின்னால் இருக்கிறது.
யாராவது என்னை காப்பாற்றுங்கள். (பினகபாணி)
அங்கே யாரோ அந்த மரத்தடியில் சிக்கியுள்ளார்கள்!
அது நம்முடன் வந்த வைத்தியர் மகன்தான்!
அமுதா! அந்த பல்லக்கை நினைவிருக்கிறது அல்லவா?
ஆமாம்! அதே பல்லக்குதான் பூங்குழலி!


மின்னல் வெளிச்சத்தில் ஒரு பெண்ணின் நிழல் உருவம் தெரிகிறது.
பூங்குழலி அவசரப்படாதே!
நீ கொஞ்சம் சும்மாயிரு! நான் பார்த்துக் கொள்கிறேன்.
என்று தனது இடுப்பிலிருந்த சிறிய கத்தியை எடுத்துக் கொண்டு அந்த பல்லக்கில் தெரியும் நிழல் உருவத்தை நோக்கி செல்கிறாள் பூங்குழலி.
இந்தப் பெண்ணுக்குத் தான் எத்தனை துணிச்சல்!
ரகசிய குரலில் சேந்தன் அமுதன்...
பூங்குழலி, ஜாக்கிரதை!


சோழ நாட்டு முதன் மந்திரியின் அரண்மனை.
சோழ நாட்டு முதன் மந்திரிக்கு, கொடும்பாளூர் வேளார் பூதி விக்கிரம கேசரி எழுதிக் கொள்வது என்னவென்றால், இளவரசர் அருள்மொழிக்கும், கொடும்பாளூர் இளவரசி வானதி தேவிக்கும் உடனே திருமணம் நடத்தியாக வேண்டும். ஆதித்த கரிகாலர் தமக்கு இராஜ்யம் வேண்டாம் என்று சொல்வதால் அருள்மொழி சோழரையே அடுத்து பட்டத்துக்கு உரியவராக யுவராஜ பட்டாபிஷேகம் செய்ய வேண்டும். இதற்கெல்லாம் சம்மதிக்காவிட்டால் தஞ்சாவூர் கோட்டையை மூன்றே நாளைக்குள் தரைமட்டமாக்கி விடுவோம், சோழ நாட்டு மக்களின் ஆதரவுடன்.
இப்படிக்கு,
பூதி விக்கிரம கேசரி,
சோழ நாட்டின் தென்திசை சேனாதிபதி.


அந்த ஊமை ராணி மட்டும் வந்து சேர்ந்துவிட்டால், முதல் வேளையாக சக்கரவர்த்தியின் முன் அவளை கொண்டு போய் நிறுத்திவிட வேண்டும். அவள் இறக்கவில்லை என்று அறியும் போதுதான் அவர் மனம் நிம்மதி அடையும்.
அந்த முரட்டு கிழவர் வேறு, தனது தம்பி மகளை அரியணை ஏற்றாமல் விடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறார்.
பல்லக்கை அப்படி இறக்குங்கள்.
எங்கே அந்த வைத்தியர் மகன்?
ஐயா! நேற்று நாங்கள் தஞ்சை கோட்டையை நெருங்கி வந்த போது, பலத்த காற்று மழையில், மரம் முறிந்து வைத்தியர் மகன் மேல் விழுந்துவிட்டது. அவரை ஆதுரசாலைக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள்.


சரி! நீங்கள் புறப்படுங்கள்.
ம்...! அந்தப் பெண்ணை வெளியே அழையுங்கள்.
பல்லக்கை விட்டு பூங்குழலி வெளியே வருகிறாள்.


யார் இவள்? ஆனால், முகஜாடை கொஞ்சம் அந்த பெண்மணியை போலவும் இருக்கிறது? எங்கோ குழப்பம் நடந்திருக்கிறது


பெண்ணே! நீ யார்?
ஐயா! நான் சமுத்திர குமாரி.


சமுத்திர குமாரியா? சமுத்திர குமாரிக்கு இங்கு என்ன வேலை?


என்னுடைய அத்தையை தேடி வந்தேன். என் அத்தைக்கு நேர்ந்த அநீதிக்கு சக்கரவர்த்தியிடம் நியாயம் கேட்கலாம் என்று வந்தேன்.
பெண்ணே! யார் உன்னுடைய அத்தை? என்ன உளறுகிறாய்?
யாரை உங்கள் ஆட்களை வைத்து தூக்கி வரச் சொன்னீர்களோ? அவர்தான் என் அத்தை! மந்தாகினி!
அப்படியென்றால் தியாக விடங்கர் கரையரின் மகளா நீ!
ஆம் ஐயா! ஆம்!
பெண்ணே! உன் அத்தை இப்போது எங்கிருக்கிறாள்?


ஐயா! அதை தங்களிடம் கூற இயலாது.
குருவே! அந்த மாதரசி இருக்கும் இடம் எனக்கு தெரியும்.
எங்கே இருக்கிறார்?
கோட்டைக்கு வெளியே தளிக்குளத்தார் கோயிலுக்கு கைங்கர்யம் செய்யும், சேந்தன் அமுதனின் வீட்டில் இருக்கிறார்.


அப்போது இளைய பிராட்டி குந்தவையும், வானதியும் அங்கு வருகிறார்கள்.
சுந்தர சோழரின் திரு குமாரியே வர வேண்டும்! வர வேண்டும்! வேளிர் குல விளக்கே வர வேண்டும்!
சோழ நாட்டு முதன் மந்திரிக்கு அடியேன் குந்தவையின் வணக்கம்!
வாருங்கள் தாயே! இப்படி அமருங்கள்.
தேவி! சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருக்க மாட்டேனா! இவ்வளவு அவசரமாக வந்த காரணம் என்ன? சக்கரவர்த்தி சௌக்கியமாக இருக்கிறார் அல்லவா? (அநிருத்தர்)
ஐயா! சக்கரவர்த்தியின் தேக சுகம் எப்போதும் போலிருக்கிறது. நேற்று அடித்த புயலால் மனதுதான் கொஞ்சம் சரியாக இல்லை. பொழுது விடிந்ததும் தங்களை போய் பார்க்கும் படி கூறினார். குடிசையில் வாழும் ஏழை, எளிய மக்கள் என்ன கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதை எண்ணி அடிக்கடி புலம்பினார்.


தேவி! இந்த எளியவனால் என்ன செய்ய முடியும்? முதன் மந்திரி என்ற பெயர்தான் எனக்கு என்பது தங்களுக்கு தெரியாதா? இச்சமயம் பெரிய பழுவேட்டரையர் வேறு ஊரில் இல்லை. பொக்கிஷ அறையை அவர் பூட்டிக் கொண்டல்லவா சென்றிருப்பார்!
ஐயா! அதை பற்றி தாங்கள் கவலைப்பட வேண்டாம். என்னுடைய உடமைகள் அனைத்தையும் தருகிறேன்.
என் அன்னையும் அவ்விதமே கொடுக்க சித்தமாயிருக்கிறார். சக்கரவர்த்தியின் அரண்மனையில் உள்ள எல்லா பொருள்களையும் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம்.
ஐயா! இந்த பெண் இங்கே எப்படி வந்தாள்? கோடிக்கரை தியாக விடங்கரின் மகள் பூங்குழலி அல்லவா இவள்!
அரச குடும்பங்களை பற்றி நாம் என்னவோ நினைத்தோம்! ஆனால், இவர்கள் குணத்தில் மேம்பட்டவர்களாக அல்லவா இருக்கிறார்கள்!


ஆமாம்! அதே பொல்லாத பெண்தான் இவள்!
பிறகு நடந்தவற்றை சுருக்கமாக கூறினார் முதன்மந்திரி அநிருத்தர்.
அப்படியானால் ஏன் வீண் கால தாமதம்? நாமே போய் அழைத்து வருவோம். தாங்கள் வருவதற்கு இல்லாவிட்டால் நான் போய் வருகிறேன். வானதி! புறப்படு, போகலாம்!


ஆழ்வார்க்கடியான் குறுக்கிட்டு..
தேவி! சற்று யோசித்து செய்ய வேண்டும். புதிய மனிதர்கள் கூட்டமாக வருவதைக் கண்டால், அந்த அம்மாள் ஓடத் தொடங்கி விடுவாள். பிறகு புயலை பிடித்தாலும் அந்த அம்மாவை பிடிக்க முடியாது.
ஆம்! திருமலை சொல்வது சரிதான்.
திருமலை, நீ என்ன யோசனை சொல்கிறாய்?
இந்த பெண்ணை போய் அழைத்து வரும்படி சொல்லுங்கள்.


முடிவாக பூங்குழலியும், ஆழ்வார்க்கடியானும் ஊமை
ராணியை அழைத்து வரச் செல்கின்றனர்.


அந்நேரத்தில், அந்த மூதாட்டியை பற்றி குந்தவைக்கு ஏன் இந்த ஆர்வம்? எந்த அளவுக்கு அந்த ஊமை பெண்ணை பற்றி இளைய பிராட்டிக்கு தெரியும்? என்று கேட்கிறார் முதன் மந்திரி. அதற்கு குந்தவை, தன் தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி அந்த பெண்ணரசிக்கும், தனக்கும் உள்ள உறவை பற்றி முழுவதும் தன்னிடம் கூறியிருப்பதை அநிருத்தரிடம் எடுத்துக் கூற... ஆனால், அந்த ஊமை பெண் இறந்துவிட்டதாகவும், இரவில் கனவிலும், சில சமயம் ஆவி வடிவத்திலும் வந்து துன்புறுத்துவதாகவும் கூறியதாக கூறுகிறாள்.
ஒரு நாள் சுந்தர சோழர் அறையிலிருந்து வந்த ஓலக் குரல் கேட்டு வானதி ஓடிச் சென்று பார்த்ததையும், சக்கரவர்த்தியை ஆவி வடிவமாக வந்து பயமுறுத்திய உருவம் இளையராணியை போல் தோன்றியதாகவும் கூறினாள்.

அதை வைத்து பார்க்கும் போது நந்தினிக்கும், மந்தாகினிக்கும் உருவத்தில் ஒற்றுமை இருப்பதையும், இதையே வாணர்குலத்து வீரனும் கூறியதாக முதன் மந்திரியிடம் கூறுகிறாள். அதன்பின் தனக்கு தெரிந்த விவரங்களை குந்தவையிடம் கூறுகிறார் முதன் மந்திரி அநிருத்தர்.

அந்த ஊமை பெண் கலங்கரை விளக்கத்திலிருந்து குதித்து இறந்துவிட்டதாக கூறினார்கள். ஆனால் அவள் இறக்கவில்லை. கடலில் வந்த வலைஞன் ஒருவன் அவளை காப்பாற்றி கரை ஒதுக்கினான். அதை கண்டதும் நான் சக்கரவர்த்திக்கு நன்மை செய்வதாக நினைத்து, அந்த வலைஞனிடம் பணம் கொடுத்து அந்த பெண்ணை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு தீவில் கொண்டு போய் விடும்படி சொன்னேன், என்று தான் செய்த தவறை ஒப்புக் கொண்டார்.

மேலும், சில விவரங்களை கூறுகிறார். தான் ஊரில் இல்லாத சமயம், அந்த பெண் பழையாறை வந்திருந்ததாகவும், பெரிய பிராட்டியின் அரண்மனைத் தோட்டத்தில் வந்து சில காலம் தங்கியிருந்ததாகவும், அப்போது இரட்டை குழந்தைகள் பெற்றுப் போட்டுவிட்டு ஓடிப் போனதாகவும், ஆனால் அக்குழந்தைகள் என்ன ஆனார்கள் என்பதை பற்றி தனக்கு தெரியவில்லை என்றும், அக்குழந்தையின் தந்தை யார் என்பது தனக்கு தெரியாது என்றும், ஆனால் அந்த ரகசியம் தெரிந்தவர்கள் மூன்று பேர். ஒருவர் பெரிய பிராட்டி, இன்னொருவர் சேந்தன் அமுதனின் அன்னை, மற்றொருவள் ஊமை பெண் என்று கூறுகிறார். அதிலிருந்து இளைய பிராட்டி ஒரு யூகத்துக்கு வருகிறாள். அக்குழந்தைகள் இரண்டும் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மூலம் பிறந்திருக்கலாம் என்று.


மந்தாகினியை, ஆழ்வார்க்கடியானும், பூங்குழலியும் தேடி தஞ்சை கோட்டைக்கு அழைத்து வருகிறார்கள். அந்நேரம் வேளக்காரப்படை வழக்கமாக வெளியேறும் நேரம்.
டும்..
டும்..


வேளக்காரப் படைக்கு வழிவிட்டு, மக்கள் வேளக்காரப் படை செல்வதை வேடிக்கை பார்க்கிறார்கள்.


அந்த சந்தர்ப்பத்தில் ரவிதாசனும் அவனுடைய கூட்டாளி சோமன் சாம்பவனும் ரகசியமாக கோட்டைக்குள் நுழைகிறார்கள். அதை மந்தாகினி பார்த்துவிட, அவர்களை பின் தொடர்ந்து மந்தாகினியும் செல்கிறாள்.
சட்டென்று வேளக்காரப்படையினுள் மந்தாகினி நுழைந்து சென்றதால் ஆழ்வார்க்கடியானாலும், பூங்குழலியாலும் அவளை பின் தொடர முடியாமல் தவிக்கிறார்கள்.


ஆனால், அவள் ஒரே பாய்ச்சலாக பாய்ந்து சென்றுவிடுகிறாள்.
சாய்ந்து கிடக்கும் அந்த மரத்தின் மேலேறி குதித்தால் பழுவேட்டரையரின் அரண்மனை வந்துவிடும்.



புயல் காற்றில் மரங்கள் விழுந்து கிடக்கின்றன.




இருட்டில் எப்படி இரண்டு மூணு நாள் அந்த நிலவறையில் இருக்கிறது? சின்ன விளக்காவது கொண்டு வந்திருக்கலாம்.
அதை பற்றி ஒன்றும் கவலைப்படாதே! இரண்டு நாளைக்கு தேவையான சாப்பாடு முதற் கொண்டு உனக்கு தேவையானவற்றை ஏற்பாடு செஞ்சிட்டுத்தான் போவேன்.
ரவிதாசனும், சோமன் சாம்பவனும் பழுவேட்டரையரின் அந்தபுரத்துக்கு வருகிறார்கள்.


ரவிதாசன் வாசுகியிடம் முத்திரை மோதிரத்தை காண்பிக்கிறான்.


அந்த விளக்கை இப்படி கொடு. ஒரு ஆளுக்கு இரண்டு நாளைக்கு தேவையான சாப்பாட்டை எப்படியாவது ஏற்பாடு செய்து கொண்டு வா, போ! (ரவி)


அவர்கள் பேசுவது ஏதும் மந்தாகினிக்கு கேட்கவில்லை என்றாலும், அவர்கள் என்ன செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்கிறாள்.


தேவராளா!
வெள்ளிக்கிழமை இரவுதான் நீ காரியத்தை முடிக்க வேண்டும். அதற்கு முன் அவசரப்பட வேண்டாம்.
இருவரும் விளக்கை எடுத்துக் கொண்டு ரகசிய கதவின் வழியாக நிலவறைக்குள் செல்கின்றனர். அவர்களை பின் தொடர்ந்து மந்தாகினியும் பதுங்கி பதுங்கி செல்கிறாள்.
அப்போது ஒரு அறையின் சன்னல் வழியாக எதையோ காண்பிக்கிறான் மந்திரவாதி. அதை உற்று பார்த்து தலை அசைக்கிறான் சோமன் சாம்பவன்.


அதையெல்லாம் ஒரு தூணின் மறைவிலிருந்து கவனிக்கிறாள் மந்தாகினி.
மந்திரவாதி, வேலை கையில் பிடித்துக் கொண்டு குறி பார்த்தபடி எதையோ காண்பிக்கிறான்.


அவர்கள் சென்ற பின் மந்தாகினி சுந்தர சோழரின் அறையின் மேல் மச்சிலிருந்து மெதுவாக ஓசையிடாமல் இறங்கி வருகிறாள்.


சக்கரவர்த்தியின் முகத்தை பார்க்கும் எண்ணம் கொண்டு சக்கரவர்த்தியின் கட்டிலின் பின் பக்கமாக இங்கும் அங்கும் மந்தாகினி நின்று எட்டிப் பார்க்கிறாள்.
இது என்ன? நம்முடைய தலைமாட்டில் புலி நடமாடுவது போல் கேட்கிறதே. யாராயிருக்கும்!


யார் அது?
யார் அது? இப்படி எதிரே வா?
ஒரு வேளை அவளாக இருக்குமோ! இல்லை அவளுடைய ஆவியாக இருக்குமோ? கனவிலே தோன்றியவள், இப்போது நேரிலே வந்து விட்டாளா? கிராதகி!
அடிப்பாவி! உண்மையில் நீயாக இருந்தால் என் முன்னால் வந்து தொலை! ஏன் தலைமாட்டில் உலாவி என் பிராணனை வாங்குகிறாய்?
வேண்டுமானால் என்னை கொன்றுபோட்டு போய்விடு. என் மக்களை மட்டும் ஒன்றும் செய்யாதே. நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்? நானா உன்னை கலங்கரை விளக்கத்திலிருந்து குதித்து சாகும்படி சொன்னேன்.


சுந்தர சோழரின் வெகு சமீபமாக மந்தாகினி வருகிறாள். அவர் முகத்தை உற்றுப் பார்க்கிறாள்.
யார் அங்கே? எல்லோரும் எங்கே போனீர்கள்?
என்ற போது மந்தாகினி தலைவிரி கோலமாக அவர் எதிரில் வந்து நிற்கிறாள். அவள் நெற்றியில் ரத்தம் வடிகிறது.
எதற்காக வந்தாய்? ரத்த பழிவாங்க வந்திருந்தால், என்னை பழி வாங்கிவிட்டு போ! ஏன் சும்மா நிற்கிறாய்? அடி ஊமைப் பேயே! நீ உயிரோடிருந்த போதும் வாய் திறந்து பேசாமல் என்னை வதைத்தாய். இப்பொழுதும் ஏன் என்னை வதைக்கிறாய்?
ஐயையோ! விம்மி அழுகிறாயா என்ன?.... என்னால் பொறுக்க முடியவில்லையே. அடிப்பாதகி! இன்னும் எதற்காக என் நெஞ்சை பிளக்கிறவள் போல் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? (சுந்தர)
அவ்வாறு சுந்தர சோழர் பேசும் போது, மந்தாகினியின் கண்களில் கண்ணீர் ததும்புகிறது.


போ! போ! போகமாட்டாயா? போ!
இப்படி சொல்லிக்கொண்டே தன் அருகில் இருந்த அகல் விளக்கை எடுத்து மந்தாகினியின் முகத்தை நோக்கி வீசுகிறார்.
சுந்தர சோழர் எறிந்த அகல் விளக்கு மந்தாகினியின் மேல் படவில்லை. சற்று முன்னதாக விழுந்து "டணாங்" "டணாங்" என்று சத்தமிட்டது.
ஆனாலும், அவள் அசையாமல் இன்னும் அங்கேயே நிற்கிறாள்.


இவள் சாகவில்லையா? இன்னும் உயிரோடுதான் இருக்கிறாளா!
மந்தாகினி திரும்பி போக எத்தனிக்கிறாள். அப்போது....
பெண்ணே! நில்! நீ கரையர் மகள் மந்தாகினியா? அல்லது அவளுடைய ஆவியா? போகாதே! உண்மையை சொல்லிவிட்டு போ.
சக்கரவர்த்தியின் குரல் கேட்டு தட தடவென்று பலர் அந்த அறைக்குள் வந்துவிடுகிறார்கள்.
மந்தாகினி அந்த அறையை விட்டு ஓட எண்ணுகிறாள்.
பிடியுங்கள் அவளை! (சுந்தர)
தன் அத்தையை அங்கிருந்து ஓட வேண்டாம், நில் என்பது போல் கை காட்டுகிறாள் பூங்குழலி.


அவளை விடாதீர்கள்! அவளைப் பிடித்து நிறுத்துங்கள். அவள் எதற்காக வந்தாள்? யாரை பழிவாங்க வந்தாள்? என்று கேளுங்கள்.
அப்போது குந்தவை கீழே இருந்த அகல் விளக்கை பார்க்கிறாள்.
அப்பா! பெரியம்மாவின் பேரில் தாங்கள்தான் விளக்கை எடுத்து எறிந்தீர்களா?
ஆம் மகளே! அந்த பேய் என்னைப் பார்த்த பார்வையை என்னால் சகிக்க முடியவில்லை. (சுந்தர)
என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போதே மந்தாகினியை நோக்கி சென்றாள் குந்தவை.
மகளே! அவளிடம் போகாதே. அந்த ராட்சஷி உன்னை ஏதாவது செய்துவிடுவாள்.


குந்தவை மந்தாகினியின் கால்களில் விழுந்து நமஸ்கரிக்கிறாள்.
தந்தையே! பேயுமல்ல, ஆவியுமல்ல. உயிரோடிருக்கும் மாதரசிதான் அவள்.
அப்பா! பெரியம்மா சாகவே இல்லை.


வானமாதேவியும், குந்தவையும் மந்தாகினியை அங்கிருந்து வேறு அறைக்கு அழைத்துச் செல்கின்றனர்.


அவர்கள் போனதும் முதன்மந்திரியும், சக்கரவர்த்தியும் பேசுகிறார்கள்.
அநிருத்தரே! மலையமான் மகளுக்கு அவள் யார் என்று தெரியுமா?


தெரியும் சாமி! அவர் என் குல தெய்வம். என் அருமை மகன் காவேரியில் மூழ்கி போய்விடாமல் காப்பாற்றிக் கொடுத்த தெய்வம்.
என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்று விடுகிறார் வானமாதேவி.


முதன் மந்திரி! இப்போது எனக்கு புரிகிறது. கோடிக்கரையிலிருந்து நீர் பலவந்தமாக பிடித்துக்கொண்டு வரச் சொன்னது இவளைத்தானே.
அவள் கடலில் விழுந்து இறந்துவிட்டதாக வந்து சொன்னீரே, அது பொய்! இருபத்தைந்து வருடங்களாக அந்தப் பொய்யை நீர் சாதித்து வந்திருக்கிறீர். நானும் அதை உண்மை என்று நம்பி வந்திருக்கிறேன்.
மன்னர் மன்னா! அடியேனை மன்னிக்க வேண்டும்.


மன்னிக்க வேண்டுமா?... சக்கரவர்த்தி, மன்னர் மன்னா என்று கூறி உலகம் தோன்றிய காலம் தொட்டு என்னைப் போல் ஏமாற்றப்பட்டவன் ஒருவனும் கிடையாது!
அரசே! நான் செய்த குற்றத்துக்கு மன்னிப்பு இல்லைதான். ஆனால், அதற்கு நான் மட்டுமே பொறுப்பாளி அல்ல. அதற்கு கரையர் மகளும் பொறுப்பாளிதான்.
அவள் கடலில் விழுந்தது என்னமோ உண்மை. அதனால் அவள் இறந்துவிட்டதாக எண்ணினேன். ஆனால், அவள் இறக்கவில்லை. அந்த உண்மை தெரிய வந்தபோது அதை தங்களிடம் சொல்ல வேண்டாமென்று வாக்குறுதி வாங்கிக் கொண்டாள்.
வாக்குறுதியை கொடுக்காவிடில் மறுபடியும் உயிரை விட்டுவிடுவேன் என்று சொன்னார். இவையெல்லாம் உண்மையா என்பதை தாங்களே அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.


இவ்வாறு அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே
வானமாதேவியும், குந்தவையும் மந்தாகினியை அலங்கரித்து
சக்கரவர்த்தியின் அறைக்கு அழைத்து வருகிறார்கள்.


ஹா ஹா..! காட்டு மிராண்டியாய் காணப்பட்டவளை, தேவலோகத்து இந்திராணியாக மாற்றி விட்டாயே!
ஆனால், அதற்கெல்லாம் இந்த கிழவிதானா கிடைத்தாள்.


எப்போதோ ஒரு காலத்தில் மனித சஞ்சாரமற்ற தீவில் நான் தன்னந்தனியே தங்கியிருந்தபோது இந்த ஊமைப் பிச்சியை பார்த்தேன். அச்சமயம் இவளிடத்தில் பிரியம் கொண்டதும் உண்மைதான். இல்லை என்று நான் சொல்லவில்லை. அதனாலேயே இன்னமும் நான் இவளை நினைத்து ஏங்கித் தவிப்பதாக நீங்கள் எண்ணினால் அதைவிட பெரிய தவறு ஒன்றும் இல்லை.


நீயும், உன் குடும்பத்தாரும் தலைமுறை தலைமுறையாக எனக்கு வேண்டியவர்கள். ஆகையால் உன்னை நான் எச்சரிக்கிறேன். உன்னுடைய அரண்மனையில் நீ கொண்டு வந்து வைத்திருக்கிறாயே, அந்த நந்தினி, அவள் மனித உரு கொண்ட ராட்சஸி! உன்னுடைய குலத்தையும், சோழர் குலத்தையும் வேரோடு அழிப்பதற்கு வந்தவள். அதற்குச் சரியான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளை அரண்மனையிலிருந்தும், உன் உள்ளத்திலிருந்தும் அப்புறப்படுத்திவிட்டு மறு காரியம் பார்!


அலறி எழுந்திருக்கிறார் பழுவேட்டரையர்.
கனவுதான்!
சுற்றும் முற்றும் பார்க்கிறார்.
எப்படியிருந்தாலும் இனி சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவளின் அந்தரங்கம் என்னவென்று கண்டுபிடித்தேயாக வேண்டும்.
பழுவேட்டரையர் இருக்கும் கோவிலைச் சுற்றி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. கோயில் எப்போது விழுமோ தெரியாது.
மழையும், காற்றும் ஓய்ந்தபாடில்லை. துர்கா பரமேஸ்வரியின் மேல் பாரத்தை போட்டுவிட்டு வெள்ளம் வடிவதற்காக காத்திருக்கிறார் பழுவேட்டரையர்.


பலத்த காற்றினாலும், வெள்ள அரிப்பினாலும் அக்கரையில் இருந்த வேப்ப மரம் ஒன்று வேரோடு சாய்ந்து விழுகிறது. அது அக்கரைக்கும் கோவிலுக்கும் ஒரு பாலம் போல் அமைந்துவிட்டது.
ஆனாலும், கொள்ளிடத்து வெள்ளத்தில் சிக்கி படகு கவிழ்ந்ததில் பழுவேட்டரையர் களைப்படைந்துள்ளார். ஆகையால் அவருக்கு சிறிது ஓய்வு தேவைப்படுகிறது. அவர் கோவிலில் இருந்த பிரசாதத்தை சாப்பிட்டுவிட்டு அந்த மண்டபத்திலே படுத்துகிடக்கிறார்.


மந்திரவாதி ஏன் இங்கு படுத்துக்கிடக்கிறான்! கொள்ளிட உடைப்பில் சிக்கி செத்து கித்துப் போய்விட்டானா?
மந்திரவாதி! மந்திரவாதி....!
என்று கூப்பிட்டுக் கொண்டே, விழுந்து கிடக்கும் வேப்ப மரத்தின் மீது ஏறி வருகிறான் தேவராளன்.
பழுவேட்டரையர், அவன் வருவதை பார்த்து தூங்குவது போல் பாசாங்கு செய்கிறார்.


அருகில் வந்த தேவராளன் பழுவேட்டரையரை புரட்டி....
மந்திரவாதி! மந்திரவாதி....!
ஆ! இவனா! கடவுளே! மந்திரவாதின்னு நினைச்சு இந்த எமன் கிட்ட வந்து தனியா மாட்டிக் கொண்டேனே!
இந்த எமன் எப்போது இங்கு வந்து தொலைந்தான்?


ஏய்! நில்.
பழுவேட்டரையர் கொள்ளிட உடைப்பில் விழுந்து காயப்பட்டிருப்பதால், அவரால் துரிதமாக செயல்பட முடியவில்லை. அதற்குள் அவன் சுதாரித்துக் கொண்டு தப்பி ஓடி விடுகிறான்.
நல்ல சந்தர்பத்தை நழுவ விட்டு விட்டோமே!
இன்னொரு சந்தர்பத்தில் என்னிடம் அகப்படாமலா போய்விடுவாய்! அப்போது பார்த்துக் கொள்கிறேன்.


கடம்பூர் மாளிகை.
வந்தியத்தேவன் பாதாளத்திலிருந்து ஒரு கதவை திறக்க, அவன் எதிரில், அவனை சுற்றி காட்டு மிருகங்கள் வாயை பிளந்து கொண்டு காத்திருக்கின்றன.
ஆ! என்ன இது? எல்லா மிருகங்களுமே எனக்காக காத்திருப்பது போல் இருக்கிறதே! (வந்தி)
இது எந்த இடம்? பாதை மாறி ஏதாவது காட்டுக்கு வந்துவிட்டோமா! கையில் ஆயுதம் கூட இல்லை. அதுவும் ஆற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்விட்டது. இந்த நரிக் கூட்டம் வேறு நாம் எங்கு சென்றாலும் நம்மை விடுவதாக இல்லை!


ஓகோ! இதுதான் கந்தமாறன் கூறிய வேட்டை மண்டபமோ!
அறை முழுவதும் ஒரே இருட்டாக இருக்கிறதே!
அந்த துவாரத்திலிருந்து மேலே வருகிறான் வந்தியத்தேவன்.
இங்கிருந்து வெளியே செல்லும் வழி எங்கே இருக்கிறது?


பெரிய கதவு அவன் கையில் தட்டுப்படுகிறது.
இது என்ன கதவு போல் அல்லவா இருக்கிறது! ஆம், கதவேதான்! ஆனால், வெளிப் பக்கம் பூட்டியிருக்கிறார்கள். வேறு ரகசிய வழி இருக்கா என்று பார்க்க வேண்டியதுதான்.


அங்கு ஒரு யானையின் தலை சுவற்றில் பொறுத்தியிருக்கிறார்கள். அதன் தந்தம் கையில் அகப்படுகிறது.
ஆ! யானை! யானையின் தந்தம். யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்களே! இருந்தாலும் உன்னால் எனக்கு ஒரு பயனும் இல்லை.
என்று கூறியபடி அதன் தந்தத்தை கோபத்தில் திருக, அப்போது திடீரென்று சுவற்றிலிருந்து வெளிச்சம் உள்ளே பாய்கிறது. அங்கே வழி தோன்றுகிறது.
அட! வழி கிடைத்துவிட்டது. அங்கே இருக்கும் அந்த பெண் கந்தமாறனின் தங்கை மணிமேகலைதானே!


அவள் நம்மை கண்டதும் சத்தம் போட்டு ஊரைக் கூட்டிவிட்டால், நம் கதி, அதோ கதிதான்!


அப்போது மணிமேகலை, அந்த மாளிகையில் உள்ள பளிங்கு கல்லினால் ஆன தூணில் தெரியும், தன் உருவத்தை பார்த்துக் கொண்டிருக்கிறாள்.
அண்ணன் கந்தமாறன் கூறியது உண்மையாக இருக்க முடியுமா? அவர் அவ்வாறு சிநேகிதனின் முதுகில் குத்த கூடியவரா? அவரை பார்த்தால் அப்படி தோன்றவும் இல்லை!


இது என்ன அவருடைய முகம் மாதிரி தெரிகிறதே! ஒரு வேளை நம் மன பிரம்மையோ? இல்லை, அவர் முகம்தான்!
உடனே உருவம் தெரிந்த இடத்திலிருந்து அதற்கு எதிர் திசையை பார்க்கிறாள். ஆனால் அங்கு ஓவியம் மட்டும்தான் இருக்கிறது.
உண்மையில் இது என் மன பிரம்மையாகத்தான் இருக்க வேண்டும்! அவர் இந்த வழியாக ஏன் வரப்போகிறார்?
ரவிதாசனும் அவனுடைய ஆட்களும் வந்தியத்தேவன் வந்த அதே சுரங்க வழியாக, கடம்பூர் வேட்டை மண்டபத்திற்கு வருகிறார்கள்.


அப்போது அவன் வந்த சுரங்க வழியிலிருந்து மனிதர்களின் காலடி சத்தம் கேட்கிறது.
ஒரு வேளை அந்த வைஷ்ணவன் நம்மை தேடி வருகிறானோ? இல்லை, ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் வரும் சத்தம் அல்லவா கேட்கிறது!
தேவராளா! இரும்பன்காரி நமக்காக காத்திருப்பது உறுதிதானே! அதில் குழப்பம் ஏதும் இல்லையே?
மந்திரவாதி! இரும்பன்காரி அவ்வாறு உறுதி அளித்தபின்தான் நான் புறப்பட்டு வந்தேன். எதற்கும் நமது ரகசிய ஒலியை எழுப்பு.
மந்திரவாதி ஆந்தையை போல் ஒலி எழுப்புகிறான்.
க்ஊஊ...
க்ஊஊ....
இது அந்த மந்திரவாதி கூட்டத்தின் சங்கேத ஒலி அல்லவா! இல்லை, உண்மையான ஆந்தை ஏதாவது கத்துகிறதா?
ஒரு வேளை அவர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்களின் கண்ணில் படாமல் இருப்பதுதான் நல்லது!


என்று எண்ணி, ஓடி மறைந்து கொள்கிறான். அப்போது வேட்டை மண்டபத்தின் கதவை திறந்து கொண்டு இரண்டு பெண்கள் வருகிறார்கள்.
இளவரசி! எல்லாம் உங்கள் மன பிரம்மையாகத்தான் இருக்கும். இந்நேரத்தில் இந்த வேட்டை மண்டபத்திற்குள் யார் வரப் போகிறார்கள்?
அதையும்தான் பார்த்துவிடுவோமே!
என்று தோழி பெண்ணிடம் கூறுகிறாள் மணிமேகலை.


இரும்பன்காரி! நீதானா? இந்நேரத்தில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
அட! இந்த சமயம் பார்த்து இந்த பெண்கள் எங்கே இங்கு வந்து தொலைந்தார்கள்.
தாயே! இது என்ன? இந்த வேளையில் இங்கு எதற்காக வந்தீர்கள்?
இந்த அறையில் ஏதோ சத்தம் கேட்கவே, சந்திரமதியிடம் கூறி என் தந்தையை அழைத்து வர சொல்லிவிட்டு, துணைக்கு இவளை அழைத்துக் கொண்டு வந்தேன்.



இந்நேரத்தில் இங்கு யார் வரப் போகிறார்கள்? சின்ன எஜமான் காஞ்சிக்கு போகும் போது சொல்லிவிட்டு போனார், விருந்தாளிகள் வரப் போகிறார்கள் வேட்டை மண்டபத்தை சுத்தம் செய்து வை என்று.
மணிமேகலை போகும் போது, வெளியில் தாழ் போடாமல் சென்றால் நன்றாக இருக்கும்! (வந்தி)
மணிமேகலை, தான் கொண்டு வந்திருந்த விளக்கை தூக்கி பிடித்து சுற்றும் முற்றும் பார்க்கிறாள், யாரையோ தேடுவது போல்.
தாயே! எஜமானுக்கு எவ்வளவோ அலுவல், தாங்கள் போய் தந்தையை வர வேண்டாம் என்று கூறுங்கள். (இரும்பன்)



நீங்களும் நிம்மதியாக சென்று படுத்துக் கொள்ளுங்கள். எல்லா வேலைகளையும் நானே பார்த்துக் கொள்கிறேன்.
என்று கூறியபடி தூசு துடைக்கும் துணியை வேண்டுமென்றே உதறுகிறான்.
இதற்குப் பிறகும் இவர்கள் போகாவிட்டால் திருகு கத்தியை உபயோகிக்க வேண்டியதுதான்!
அச்ச்...
ஆ...


இளவரசி! தாங்கள் செல்லுங்கள். வேட்டை மண்டபம் ஒரே தூசியாக உள்ளது. சுத்தம் செய்தபின் நானே உங்களை அழைக்கிறேன்.
இவன் முழியே சரியில்லையே! குந்தமாறன் நல்ல ஆளை பார்த்து, வேட்டை மண்டபத்திற்கு காவல் வைத்துள்ளான்.
இருவரும் வேட்டை மண்டபத்தை விட்டு வெளியே செல்கின்றனர்.


நல்ல வேளை! அவர்கள் என் திருடு கத்திக்கு வேலை வைக்கவில்லை.
மீண்டும் ஆந்தையின் குரல்!
இது அந்த மந்திரவாதியின் குரலேதான்! சந்தேகமில்லை.
அந்த கதவை அடைய வேண்டுமென்றால் எப்படியும் அவனை தாண்டித்தான் செல்ல வேண்டும். ஆபத்தான காரியங்களில் நாம் ஈடுபடுவது ஒன்றும் நமக்கு புதிதில்லை. யார்தான் ரகசிய வழியாக வருகிறார்கள் பார்த்துவிடுவோம்.


டிங்
டிங்
டிங்
கூட இருந்தே குழி பறிப்பது! என்பார்களே, அது இதுதானா?
ஏன் இவ்வளவு நேரம்? எங்கே போய் தொலைந்தாய்?


ஆபத்து ஒன்றுமில்லையே!
இல்லை! அவளை நான் சமாளித்து அனுப்பிவிட்டேன்.
இளையராணியும் கிழவனும் வந்து சேர்ந்தாகிவிட்டதா?
இல்லை! இன்னும் வரவில்லை!


நேரம் கூடி வந்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. மீண்டும் ஒரு சந்தர்ப்பம் இது போன்று நமக்கு வாய்க்க போவதில்லை. நாம் புலியின் குகைக்குள்ளே வந்திருக்கிறோம்! எச்சரிக்கையாக செயல் பட வேண்டும்.


வந்தியத்தேவன், தான் ஏற்கனவே கண்டுபிடித்த ரகசிய துவாரத்தின் வழியாக தப்ப முயல்கிறான். அப்போது துவாரத்திலிருந்து வெளியில் வரும்போது மணிமேகலையிடம் அகப்பட்டுக் கொள்கிறான்.


இந்த பெண்ணிடம் என்ன சொல்லி விட்டு, எப்படி தப்பிச் செல்வது? ம்....
மணிமேகலை அவனை எரித்து விடுவது போல் பார்க்கிறாள்.
அம்மா! என்னை அழைத்தீர்களா? (பணிப்பெண்)
இல்லையடி, உன் வேலையை பார்!
ஐயா! உண்மையை சொல்லும். நீர் கள்ளத்தனமாக இங்கு வந்ததின் காரணத்தை சொல்லும். இல்லாவிடில் உடனே என் தோழியிடம் சொல்லி என் தந்தையை அழைப்பேன்.
இளரவசி! என்னை கொலைகார பாதகர்கள் கொல்லுவதற்கு துரத்திக் கொண்டு வந்தார்கள். அவர்களிடமிருந்து தப்பி ஓடிவந்த போது...


பூமியில் ஒரு துவாரம் தெரிந்தது. அதில் நுழைந்து தப்பிக்கலாம் என்று வந்தபோது, அந்த வழி இங்கே கொண்டு வந்துவிட்டது.
உண்மையை சொல்லும்! கொலைகாரர்களிடமிருந்து தப்புவதற்காக ஓடி வந்தீரா? இல்லை, கொலை செய்வதற்காக இங்கு வந்தீரா?
சிவ சிவா! நாராயணா! நான் யாரையும் கொலை செய்வதற்காக வரவில்லை. இது சத்தியம்!
அம்மா! அம்மா! தஞ்சாவூர்காரர்கள் கோட்டை வாசலில் வந்து விட்டார்கள். மகாராணி உடனே தங்களை வரச் சொன்னார்கள். (பணிப்பெண்)


இளையராணியின் அழகும், அவளின் நாகரீக தோற்றமும் சோழநாடு முழுவதும் பிரசித்தம் பெற்றிருந்தது. அதனால் கட்டியம் கேட்ட திசையை ஆர்வத்துடன் பார்க்கிறாள் மணிமேகலை.
இதுதான் நல்ல சந்தர்ப்பம்! காவலர்களின் கவனம் முழுவதும் நந்தினியின் பக்கம் சென்றுவிடும். இந்த சந்தர்ப்பத்தில் தப்பினால்தான் உண்டு.


நான் வரும்வரை தாங்கள் இங்கேயே காத்திருக்க வேண்டும்! புரிகிறதா?
மணிமேகலை! (மகாராணி)
இதோ வந்துட்டேன் மா...!
இனி ஒரு நிமிடம் கூட இங்கு தாமதிக்கக் கூடாது!


வந்தியத்தேவன் தப்பித்து இந்த வழியாகத்தான் வர வேண்டும் என்று யூகித்து, அவன் தப்பி வருவதற்கு ஏதுவாக ஒரு நீண்ட மரத்தை சுவற்றில் சாய்த்து வைத்து தயாராக காத்திருக்கிறான் ஆழ்வார்க்கடியான்.


சோழ நாடெங்கும் மழையும், புயல் காற்றும் அடித்து சோழ நாடே வெள்ளக் காடாக மாறிப்போனது. சக்கரவர்த்தியின் தேக சுகத்திலும் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை. இதில் சிற்றரசர்களுக்குள் உட்கட்சி பூசல் வேறு!
இவையெல்லாம் எப்போதுதான் சரியாகும்? எப்போது சோழநாட்டிற்கு நல்ல காலம் பிறக்கும்? என்று அறிந்து கொள்ளவே தங்கள் வீடு தேடி வந்திருக்கிறேன்.
தாயே! நானும் அதற்கான விடையை தேடிக் கொண்டுதான் இருக்கிறேன். எல்லாம் கூடிய விரைவில் சரியாகிவிடும். தூமகேதுவின் வால் குறைந்து கொண்டே வருகிறது.
தூமகேதுவை பற்றி மக்கள் கூறுவதெல்லாம் உண்மையாக இருக்க முடியுமா?
அம்மா! அப்படி நான் படித்த எந்த சாஸ்திரத்திலும் குறிப்பிடவில்லை. ஆனால், மக்கள் அவ்வாறு நம்பி வருகிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் என்னால் உறுதியாக கூற முடியும். சோழ குலம் இன்னும் பல நூறு ஆண்டுகள் தழைத்தோங்கி வளரும் என்பதில் எனக்கு எந்த ஒரு சந்தேகமும் இல்லை.
இது பாட்டனின் கனைப்பு சத்தமாயிற்றே! இந்நேரத்தில் எதற்காக இங்கு வருகிறார்?
தட,தட...
அப்போது கதவை யாரோ அவசரமாக தட்டும் சத்தமும், கூடவே தொண்டை கனைக்கும் சத்தமும் சேர்ந்தே கேட்டது.


ஐயா! இங்கு வருபவரிடம் நான் இங்கு வந்திருப்பதை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டாம். நான் அடுத்த அறையில் சென்று மறைந்து கொள்கிறேன்.
இந்நேரத்தில் எதற்காக இங்கே வருகிறார்! ஒரு வேளை ஜோதிடத்தில் அவருக்கு நம்பிக்கை வந்துவிட்டதா?
ஐயா! வர வேண்டும்! வர வேண்டும்! சொல்லி அனுப்பியிருந்தால் நானே தங்களை நாடி வந்திருப்பேனே!


ஓய் ஜோதிடரே! உம்மிடம் ஜோதிடம் பார்ப்பதற்காக நான் வரவில்லை. அவசரமாக நீர் ஓர் உதவி செய்ய வேண்டும்.
ஐயா! முதலில் உள்ளே வாருங்கள். (சோதிடர்)
பழுவேட்டரையரின் பரபரப்பையும், அவரின் கோலத்தையும் கண்ட சோதிடர் ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டும் என்று அனுமானித்தார்.
பழுவூர் இளையராணி சௌக்கியமாக இருக்கிறார்கள் அல்லவா?
அந்த சண்டாளிக்கு என்ன? சௌக்கியமாக கடம்பூர் அரண்மனையில் இருக்கிறாள். ஆனால், நாளை இந்த நேரம் வரை உயிரோடு இருப்பாள் என்று சொல்ல முடியாது. அவளை என் கையினாலேயே நெறித்து கொன்றுவிடுவேன். (பழு)
ஜோதிடரே! முதலில் எனக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வாரும். சாப்பிட்டு இரண்டு நாள் ஆகிறது.
ஜோதிடரே! சக்கரவர்த்தியின் ஆயுள் பலம் எப்படி இருக்கிறது? நீர் சொல்ல மாட்டீர், எனக்கு தெரியும். நான் சொல்வதை நீர் கேளும்.


சக்கரவர்த்திக்கும் அவருடைய குமாரர்கள் இருவருக்கும் இன்றைக்கு பெரிய கண்டம் காத்திருக்கிறது. அவர்களை யமன் நெருங்கி வந்து கொண்டிருக்கிறான்.
சக்கரவர்த்தியின் யமன் பழுவூர் மாளிகையைச் சேர்ந்த பொக்கிஷ நிலவறையில் மறைந்திருக்கிறான். அருள்மொழியின் யமன் யானை பாகனின் அங்குசத்தில் ஒளிந்திருக்கிறான். அவர்கள் இருவரையும் தடுத்து நிறுத்தி சக்கரவர்த்தியையும், பொன்னியின் செல்வனையும் காப்பாற்றுவது உம்முடைய பொறுப்பு.
என் முத்திரை மோதிரத்தை எடுத்துக் கொண்டு உம் சீடன் தஞ்சைக்கு போகட்டும். நீர் திருவாரூர் சென்று இளவரசருக்கு எச்சரிக்க வேண்டும். செய்வீரா...?
நான் சோழ நாட்டின் பட்டத்து இளவரசரை காப்பாற்றுவதற்காக கடம்பூர் போகிறேன். வெளியில் உள்ள ரதத்தை எடுத்துச் செல்லப் போகிறேன். துர்கா தேவி அதற்கு சம்மதம் தருவாள். (என்று உரக்க கூறினார் பழுவேட்டரையர்)
பழுவூர் பாட்டனுக்கு எல்லா உண்மையும் எப்படியோ தெரிந்திருக்கிறது. ஆகா! அவர் நந்தினியை ஏதும் செய்துவிடாமல் தடுத்து நிறுத்த வேண்டும். இனியும் நாம் இந்த அறையில் ஒளிந்திருப்பது முறையாகாது.
என்று எண்ணி அந்த அறையை விட்டு வெளியே வருகிறாள். இளைய பிராட்டியின் பாத சிலம்பொலியைக் கேட்டு, பழுவேட்டரையர் திரும்பி அவளை நோக்கி நடந்தபடி...
தாயே! நான் ஊகித்தது சரிதான். அடுத்த அறையில் நீ இருக்க வேண்டும் என்று கருதினேன். உன் முகத்தை பார்த்து பேசுவதற்கு எனக்கு தைரியம் இல்லை. (பழுவேட்டரையர்)


நான் உன்னிடம் மன்னிப்பு கேட்க தகுதியுடையவனா? என்பதே எனக்கு சந்தேகமாக இருக்கிறது. மூன்று வருடங்களாக இந்த கிழவனின் கண்கள் மோகாந்தகாரத்தினால் மூடியிருந்தன. என் கண்களை திறப்பதற்கு நீ எவ்வளவோ முயற்சி செய்தாய். எத்தனையோ குறிப்புகள் சொன்னாய். அது என் காதில் ஏறவில்லை. என் சகோதரனும் என் கண்களை திறக்க முயன்றான். அவன் முயற்சியும் பலிக்கவில்லை!
நேற்றிரவு துர்கா பரமேஸ்வரியின் அருளால் பாண்டிய நாட்டு சதிகாரர்களில் இருவரின் சம்பாஷணையை ஒட்டு கேட்க நேர்ந்தது. அதன் பலனாகவே உண்மை அறிந்தேன். அந்த விஷநாகத்தை பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வந்திருக்கிறேன். அவள் என்னை குல துரோகியாக்க எண்ணியிருக்கிறாள். அவள் என்னை ராஜ துரோகியாக்க திட்டமிட்டிருக்கிறாள்.
அந்த பாதகி நந்தினியை இன்று இரவே என் கையினாலேயே கொன்றாலொழிய என் மனம் ஆறுதல் அடையாது.


இளைய பிராட்டி குந்தவை சட்டென்று பெரிய பழுவேட்டரையரின் காலில் விழுந்து வணங்குகிறாள்.
தாயே! எழுந்திரு. என்னை சோதிக்க வேண்டாம்.
ஐயா! தாங்கள் என் பாட்டனாரின் ஸ்தானத்தில் உள்ளவர்.
என் தந்தையின் போற்றுதலுக்கு உரியவர். நான் உங்களிடம் ஒரு வரம் கேட்கிறேன்.
தாயே! என்னை சோதிக்க வேண்டாம். உனக்கும் உன் குடும்பத்துக்கும் நான் செய்துவிட்ட துரோகத்துக்கு நான் ஈடுச் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. நீ என்ன கேட்டாலும் கொடுக்கிறேன். சீக்கிரம் கேள், தாயே!

இளையராணிக்கு பழுவேட்டரையர் எந்த தீங்கும் செய்யக் கூடாது என்றும், அவள் எங்களின் சகோதரி. சக்கரவர்த்திக்கும் இலங்கை காடுகளில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் ஊமை பெண்ணுக்கும் பிறந்தவளாக இருக்கக் கூடும் என்றும் கூறுகிறாள். அதை கேட்ட பழுவேட்டரையர், பழைய சம்பவங்களை தொடர்புபடுத்தி பார்த்தபோது, அப்படி இருக்க வாய்ப்பு இருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வருகிறார். அதனால் நந்தினி சகோதர ஹத்தி தோஷத்திற்கு ஆளாகாமல் அவளைத் தடுக்க வேண்டும் என்று கூறி, மேலும் இது கரிகாலனுக்கு தெரியுமா? நந்தினிக்கு தெரியுமா? என்று கேட்டு விட்டு,






வீரநாராயண ஏரிக்கரை காட்டுக்கு வேட்டையாட வருகிறார்கள் இளவரசர் ஆதித்த கரிகாலரும் அவரது நண்பர்களும். வேட்டை துவங்குகிறது.
இளவரசர் ஆதித்த கரிகாலர் முதலில் நரி கூட்டத்தை வேட்டையாடுகிறார்.


அம்பு, ஈட்டி, வாள் என அனைத்து ஆயுதங்களையும் வேட்டைக்கு பயன்படுத்துகிறார் ஆதித்த கரிகாலர்.
அடுத்து ஒரு சிறுத்தை புலியை வேட்டையாடுகிறார். பிறகு மானை வேட்டையாடுகிறார். அப்புறம் கரடி, முயல் என பல விலங்குகளை வேட்டையாடுகிறார். மிருகங்கள் காணாத போது பறவைகளை வேட்டையாடுகிறார்.


ஆதித்த கரிகாலர் ஆவேசமாக ஒரு ஆண் கரடியை துரத்துகிறார். அதை பார்த்து கோபமுற்ற பெண் கரடி இளவரசர் கரிகாலரை தாக்க தயாராகிறது.


அய்யோ! மரத்தின் மீது இருக்கும் கரடியை இளவரசர் பார்க்கவில்லையே.


வேறு வழியில்லை என்று எண்ணி தனது அம்பாரத் தோணியிலிருந்து ஒரு அம்பை எடுக்கிறான் கந்தமாறன்.


சரியாக கரடிக்கு குறி வைத்து அம்பை விடுகிறான் கந்தமாறன்.
கந்தமாறன் விட்ட அம்பிலிருந்து கரடி தப்பிவிட்டது. ஆனால், அந்த அம்பு ஆதித்த கரிகாலரின் அருகாமையில் செல்ல....
அட! கொஞ்சம் அசைந்திருந்தாலும் இந்த அம்பு நம் உயிரை அல்லவா வாங்கி இருக்கும்.


என்ன கந்தமாறா! குறி
தவறிவிட்டதா? எனக்கு குறி
வைத்து அது கரடி மீது பட்டுவிட்டதா?
நீ வல்வில் ஓரியின் வம்சா வழி
வந்தவனாயிற்றே! ஹா.... ஹா....!
என்று சிரித்துவிட்டு முன்னோக்கி
சென்றுவிடுகிறான் கரிகாலன்.
அப்போது கந்தமாறன் பார்த்திபேந்திரனை திரும்பி
பார்க்கிறான். அவன் தன் வாயை பொத்தி பொறுத்துக்
கொள்ளும்படி சமிக்ஞை செய்கிறான்.
வந்தியத்தேவனும், கரிகாலனும் இணைந்து வருகின்றனர்.
பார்த்திபேந்திரனும், கந்தமாறனும் கூட்டு சேர்ந்து அவர்களை
பின் தொடர்ந்து செல்கின்றனர்.


அம்பில் அடிபட்டு விழுந்த மிருகங்களை எல்லாம் ஒரு நீண்ட தடியில் தொங்க விட்டபடி தூக்கி வருகிறார்கள் வேட்டைகாரர்கள். அப்போது கந்தமாறன்...
வேட்டையாடியது போதாதா? ஏன் இப்படி காட்டையே அழித்து விடுவது போல் வேட்டை ஆடுகிறார்! இளவரசரிடம் இன்றைக்கு வேட்டை போதும் என்று கூறுங்கள்.
தம்பி! நீ கொஞ்சம் அமைதியாய் இரு. அவரின் கோபத்தையெல்லாம் வேட்டையில் காண்பிப்பதே நல்லது! அதை தடுத்தோமானால் அந்த கோபம் உன் மேலேயும், என் மேலேயும் திரும்பும். புரிகிறதா?
அச்சமயம் அங்கு இரண்டு காட்டுப் பன்றிகள் வருகின்றன.
இளவரசே! ஜாக்கிரதை! அதன் மீது அம்பு விட வேண்டாம். அதன் உடம்பில் அம்பு பாயாது. (கந்தமாறன்)


கரிகாலர் அதைக் கேளாமல் ஒரு காட்டு பன்றியின் மேல் அம்பை விடுகிறார்.
அது காட்டு பன்றியின் முதுகில் போய் குத்திக் கொள்கிறது.
எல்லோரும் அதை ஆச்சரியத்துடன் பார்க்கிறார்கள்.


அப்போது அது தன் உடம்பை ஒரு சிலுப்பு சிலுப்ப, அம்பு உடம்பில் இருந்து விழுகிறது.
அதைக் கண்டு கந்தமாறன் கொள் என்று சிரிக்கிறான்.
ஹா..ஹா..
இரண்டு பன்றிகளும் வெவ்வேறு திசையில் ஓடுகின்றன.


நானும், வந்தியத்தேவனும் சென்று அந்த பன்றியை வேட்டையாடி வருகிறோம். நீங்கள் இருவரும் மற்றொரு காட்டு பன்றியை வேட்டையாடி வாருங்கள் பார்ப்போம்.
ம்....! புறப்படுங்கள்....
என்று கூறி கரிகாலர் செல்ல அவரைப் பின்தொடர்ந்து வந்தியத்தேவன் செல்கிறான்.


ஒரு காட்டு பன்றியை வேட்டையாட வேண்டுமானால், நான்கைந்து வேட்டை நாய்கள் இல்லாமல் வேட்டையாட முடியாது! புலி, சிறுத்தை இதையெல்லாம் கூட எளிதாக வேட்டை ஆடிவிடலாம். ஆனால், காட்டு பன்றியை வேட்டையாடுவது கடினம்.
கந்தமாறா! அவர் யார் சொல்லையும் கேட்க கூடியவர் அல்ல. தான் நினைத்ததைத்தான் செய்வார்.


ஆதித்த கரிகாலரும், வந்தியத்தேவனும் காட்டு பன்றியைத் தேடிக் கொண்டே வர, அது அவர்களை வீராண ஏரிக்கு நீர் வரும் வாய்க்காலில் கொண்டு வந்து சேர்க்கிறது.


அப்போது வானத்தில் ஒரு பறவையின் அபயக் குரல் கேட்கிறது. கரிகாலன் ஆகாயத்தை பார்க்கிறான். அங்கு ஒரு ராஜாளி தன் காலில் ஆண் புறாவை பிடித்து செல்ல, அதை பின் தொடர்ந்து ஒரு பெண் புறா கெஞ்சியபடி கத்திக் கொண்டே வருகிறது.
வல்லவரையா! அந்த ராஜாளியை பார்த்தாயா? என்ன ஒரு கல் நெஞ்சம். அதை ஒரு பெண் புறா அவ்வளவு பின் தொடர்ந்து கெஞ்சியும், அதற்கு மனம் இறங்கவில்லை. அதற்கு சரியான பாடத்தை நாம் புகட்டத்தான் வேண்டும்.
என்று கூறி வில்லில் அம்பை பூட்டி, அதை சரியாக வட்டமிட்டுக் கொண்டிருந்த ராஜாளிக்கு குறி வைக்கிறான். அப்போது வந்தியத்தேவன்...
இளவரசே! ராஜாளியின் காலில் அகப்பட்டிருப்பது ஆண் புறா என்பதை எப்படி தெரிந்து கொண்டீர்கள்? (வந்தி)
தெரியும் வல்லவரையா! தெரியும்! எனக்கு தெரியாமல், வேறு யாருக்கு தெரியும்.


ராஜாளி அம்பு பட்டு வீராண ஏரியில் விழுகிறது. ஆண் புறா ராஜாளியின் காலிலிருந்து விடுபட்டு பெண் புறாவுடன் பறந்து செல்கிறது.


வந்தியத்தேவா! இப்போதுதான் என் மனம் ஆறுதல் அடைந்தது. (கரி)


அந்த நேரம் படகு ஒன்று வீராணம் ஏரியில் செல்கிறது. ஆனால், அடுத்த கணம் அது அருகில் உள்ள புதரில் மறைந்து விடுகிறது.


வல்லவராயா! அந்த படகில் சென்றது யார் என்று கவனித்தாயா?
இல்லை பிரபு! சரியாக கவனிப்பதற்குள் அது மறைந்து விட்டது.
வல்லவராயா! அந்த காட்டு பன்றி எங்கேயாவது போய்த் தொலையட்டும். வா என்னோடு, படகில் சென்றது யார் என்று பார்ப்போம்.
என்று கூறி அந்த படகை தேடி குதிரையை ஏரியில் விடுகிறார்கள். ஆழம் குறைவான பகுதி.


ஏரியின் நடுவில் தீவு போல் அமைந்திருக்கும் இடத்தில் ஒரு மண்டபம் இருக்கிறது. மண்டபத்தின் உட்பகுதியில் சமையல் தயாராகிறது. (உடன் வந்த தோழி பெண்கள் சமையல் செய்கிறார்கள்.) படகு, படித்துறையில் நிற்கிறது. நந்தினியும், மணிமேகலையும் படித்துறையில் நீராடியபடி...
கரிகாலனை போன்றும், பெரிய பழுவேட்டரையர் போன்றும், தன் அண்ணன் கந்தமாறனை போன்றும் குரல் மாற்றி பேசிக் காட்டுகிறாள் மணிமேகலை. கடைசியாக கரிகாலனை போன்று,
என்ன பழுவூர் பாட்டி நலம்தானே? எப்படி?
அருமை!
அப்போது, வேட்டையில் அடிபட்டு தப்பி வந்த சிறுத்தை புலி ஒன்று, படித்துறைக்கு பக்கத்தில் வளைந்து இருக்கும் மரத்தின் மேலிருந்து பெண்களின் மேல் பாய்வதற்கு தயாராக இருக்கிறது.


மணிமேகலை தனது இருப்பிலிருந்து சிறிய கத்தியை எடுக்கிறாள்.
அக்கா! சற்று இப்படி வாருங்கள்.
என்று கூறியபடி சிறுத்தை புலியை குறி பார்க்கிறாள்.
க்ர்ர்ர்,,,
அதற்குள் எங்கிருந்தோ ஒரு அம்பு சிறுத்தை புலியை தாக்க, சிறுத்தை புலி பெண்களின் மேல் விழுகிறது.
ஆ
ஆ


நந்தினியை தொட்டு தூக்க தயங்கிய கரிகாலர், வந்தியத்தேவனிடம் கண் ஜாடையிலே நந்தினியை தூக்கி வரும்படி கூறிவிட்டு மணிமேகலையை அவர் நீரிலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறார். மணிமேகலையோ வந்தியத்தேவன் தன்னை தொட்டு தூக்கி வருகிறான் என்று நினைத்து வெட்கத்தில் கண்ணை மூடியபடி இருக்கிறாள்.
கரை ஏறியதும் தன்னை தொட்டு காப்பாற்றியவர் கரிகாலர் என்றதும் அருவருப்பும், கோபமும் அடைகிறாள். அதை கரிகாலர் புரிந்து கொள்கிறார். ஆனால், இளையராணி நந்தினிக்கு வந்தியத்தேவன் தன்னை தூக்கி வருவது குறித்து எந்தவித தயக்கமும் இல்லை.
அடிப்பாவி! கட்டிய புருஷனை தஞ்சாவூருக்கு அனுப்பிவிட்டு, இவனோடு சல்லாபம் செய்கிறாயா!? (தேவராளன்)
மணிமேகலை! இவர்களும் மதியம் நம்முடனே உணவு அருந்தட்டும். அவர்களுக்கும் சேர்த்து சமைக்கச் சொல்.
இதோ ஒரு நொடியில்..
என்று கூறி சமையல் செய்யும் இடம் நோக்கி ஓடுகிறாள்.


அடிபட்ட புலி ஆபத்து என்பதால் அதை கொன்றுவிட்டு வர, வந்தியத்தேவன் சிறுத்தை புலியை தேடிச் சென்றிருக்கிறான்.
கோமகனே! தாங்கள் என்னிடத்தில் மன்னிப்பு கேட்பது எந்த வகையிலும் தகுதியற்றதுதான். தாங்கள் புலி ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரர்! நான் தாய், தந்தையரால் கைவிடப்பட்ட அநாதை பெண்.
இல்லை நந்தினி! நீ அநாதை பெண் அல்ல. நீ சக்கரவர்த்தியின் குமாரி! நீ என்...
ஐயா! தாங்கள் என் முகத்தை பார்த்துச் சொல்லுங்கள். என்னை பார்த்தால் சக்கரவர்த்தியின் திருக்குமாரி என்று தோன்றுகிறதா? சக்கரவர்த்தியின் குமாரியாக பிறந்து நான் இந்த கதியை அடைந்திருக்க முடியுமா? இவ்வளவு கொடுமையான துன்பங்களுக்கு உள்ளாகியிருக்க முடியுமா? தங்கள் நண்பர் கூறியது உண்மையாகவே இருக்கட்டும். இது மட்டும்தான் அவர் சொன்னாரா! வேறு ஒன்றும் சொல்லவில்லையா?
ஆம்! சொன்னான். நீ பாண்டிய நாட்டு சதிகாரர்களோடு சேர்ந்திருப்பதாகச் சொன்னான்.


அதையெல்லாம் நீ இனி மறந்துவிடு. சோழர் குலத்தின் பெருமைக்கெல்லாம் என்னை போல் உரிமையுள்ளவள் நீ! சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி! எங்கள் அருமை சகோதரி! உனக்கு இதுவரை செய்த அநீதிகளுக்கெல்லாம் பரிகாரம் செய்வதே எனது முதற் கடமை.
இதோ வருகிறானே உங்கள் நண்பன், ஒரு நாள் இவன் என்ன செய்தான் தெரியுமா? ஒரு நாள் தஞ்சையில் என்னை பார்த்தான். என் பாதம் அவன் பேரில் பட்டால் அதை பாக்கியமாகக் கருதுவேன் என்று சொன்னான். (நந்தினி)
அப்போது தூரத்தில் வந்தியத்தேவன், கையில் வாள் ஏந்தியபடி இவர்களை நோக்கி வருகிறான்.
நான் விரும்பினால் தங்களுடைய தலையை கொண்டு வந்து என் காலில் போடுவதாக கூறினான். அவனை என் காலால் தொட்டு உதைக்கவும் நான் இஷ்டப்படவில்லை. காவலர்களை அழைப்பதாகச் சொன்ன பிறகு ஓடி விட்டான்.


இது உண்மையாக இருக்க முடியுமா? இவ்வளவு நீசனாகவாக இருப்பான். இவனுக்கு மணிமேகலையை திருமணம் செய்விப்பது என்று எண்ணியிருந்தேனே!
ஐயா! நான் சொல்வதை மட்டும் நீங்கள் நம்பிவிட வேண்டாம். எப்போதுமே அவசரப்பட்டு தாங்கள் காரியம் செய்து விடுவீர்கள். இரண்டு நாள் அவனுடைய நடவடிக்கைகளை கவனித்து வாருங்கள், தாங்களே தெரிந்து கொள்வீர்கள்.
அக்கா! உணவு தயாராகிவிட்டதாம்.
தங்காய்! இளவரசர் உன்னுடைய அழுதகானத்தை கேட்க விரும்புகிறார்.


நீராழி மண்டபம்.
மணிமேகலை யாழ் இசைத்தபடி பக்தி பாடல்களை பாடுகிறாள்.


இளவரசர் காதல் பாட்டு பாடும்படி மணிமேகலையை கேட்கிறார். நந்தினியும் அதை வற்புறுத்த மணிமேகலை காதல் கீதம் பாட, அனைவரும் அவளின் இசை வெள்ளத்தில் மூழ்கி விடுகின்றனர். அப்போது காற்று, மழை தீவிரமாக அடிக்கிறது.


மணிமேகலை பாடப் பாட அவரவர், அவர்களின் காதலை மனதிற்குள் அசை போடுகின்றனர்.


ஆதித்த கரிகாலர் எப்பேர்பட்ட வீரர்! இப்படி நிலைகுலைந்து போய்விட்டாரே! காலம்தான் அவரை மீட்டெடுக்க வேண்டும்.


பலத்த மழை பெய்வதால், இன்னும் வேட்டைக்குச் சென்றவர்கள் காணவில்லையே? என்று பதறியடித்து ஒரு படகை எடுத்து கொண்டு வீராண ஏரிக்கு வருகிறார் சம்புவராயர்.

தனது தந்தையை காண ஈழத்திலிருந்து விரைந்து புறப்பட்ட இளவரசர், கடல் கொந்தளிப்பில் சிக்கினார். அதிலிருந்து பூங்குழலி மீட்ட போதிலும் குளிர் சுரம் அவரை தாக்குகிறது. அதனால் சூடாமணி விஹாரத்தில் தங்குகிறார். அவருக்கு புத்த பிச்சுகள் வைத்தியம் செய்து காப்பாற்றுகிறார்கள்.

தனது சகோதரி குந்தவையின் சொல்லை ஏற்று, தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் சில நாட்கள் சூடாமணி விஹாரத்தில் இருக்கிறார். ஆனால், ராக்கம்மாள் செய்த சூழ்ச்சியால் அவர் சூடாமணி விஹாரத்தை விட்டு வெளியில் வருகிறார். மக்கள் படை அவரை சூழ்ந்து கொள்கிறது. எதிரிகள் அவரை கொல்ல சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து அவரை பின் தொடருகிறார்கள். ஆனால், மக்களின் செல்வாக்கை பெற்ற பொன்னியின் செல்வரை அவர்களால் நெருங்கக் கூட முடியவில்லை. இளவரசருக்கு கிராமங்கள் தோறும் மக்கள் விருந்து உபச்சாரம் செய்கிறார்கள்.

சோழ நாடெங்கும் பெய்த பலத்த மழையால் திரு ஆரூர் (தற்போதைய திருவாரூர்) ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அன்றிரவு திரு ஆரூரில் தங்குகிறார் இளவரசர்.

படகோட்டி முருகையன் சதிகாரர்களின் சதியை அறிந்து வந்து இளவரசரிடம் கூறுகிறான். இளவரசரிடம் தன் மனைவி ராக்கம்மாள் சதிகார கூட்டத்துடன் சேர்ந்து செயல்படுவதைக் குறித்து வருத்தப்படுகிறான்.

குறிப்பு:
திரு ஆரூர் - இங்கு தியாகராஜ பெருமாளின் கோயில் உள்ளது. சோழ குலத்தினர் தில்லை நடராஜ பெருமாளின் கோயிலுக்கு அடுத்தபடியாக, திரு ஆரூரில் உள்ள பெருமாளிடம் விசேஷ பக்தி கொண்டிருந்தார்கள்.


திரு ஆரூர்.
இளவரசரின் கண்கள் யானை பாகனை தேடுகிறது.
இந்த கூட்டத்தில் யார் அந்த யானை பாகன்.
இளவரசர் கூட்டத்தை பார்த்து....
யானை பாகன் எங்கே? விரைந்து வரச் சொல்லுங்கள்.
இதோ நான் வந்துவிட்டேன். (கிராமவித்தன், ராக்கம்மாளின் தந்தை)


யானை பாகனை உற்று பார்க்கிறது யானை.
அவன் அருகில் வந்ததும் துதிக்கையால் அவனை பிடித்து தூக்கி கர, கரவென சுழற்றி வானத்தில் தூக்கி வீசுகிறது.
ஆ...


கிராமவித்தன் விஷம் தோய்ந்த அங்குசத்தோடு இளவரசரை கொல்லும் திட்டத்தோடு வந்தான். அவன் திட்டத்தை யானையின் மூலம் முறியடிக்கிறார் இளவரசர். (யானையின் மொழி இளவரசருக்கு தெரியும் என்பதை நாம் இலங்கையிலேயே பார்த்தோம்.)
யானை மதம் பிடித்தாற்போல் ஓடுகிறது...
இளவரசரை யாராவது காப்பாற்றுங்க!
யானைக்கு மதம் பிடித்துவிட்டது!


கடம்பூர் அரண்மனை.
அரசே! திருக்கோவிலூர் மலையமான் கடம்பூர் மீது படையெடுக்க, படை திரட்டி வருவதாக கேள்வி!
அப்படியா! சரி, நீ போ! நான் பார்த்துக் கொள்கிறேன்.
அந்த கிழவனுக்கு இன்னும் நம்மீதுள்ள பழைய பகை போகவில்லை போலிருக்கிறது.
அந்த கிழவன் எதற்காக நம்மீது படையெடுத்து வர வேண்டும். இதை இளவரசரிடம் நேரிடையாகவே கேட்டு விட வேண்டியதுதான்.


திருக்கோவிலூர் மலையமான் படை திரட்டிக் கொண்டு வருவதாக கேள்வி. இப்போது அவருக்கு எங்கள் மீது போர் தொடுக்க வேண்டிய அவசியம் என்ன இளவரசே?
நான் இங்கே உங்களிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன் அல்லவா!


இவரிடம் அல்லவா இந்த கிழவர் வந்து அகப்பட்டுக் கொண்டார்!
இந்த பல்லவ பார்த்திபேந்திரன் வேறு, நாம் என்ன சொன்னாலும் ஏட்டிக்கு போட்டியாக பேசுவான்.
கோமகனே! அப்படிப்பட்ட சந்தேகம் அணுவளவும் தாங்கள் மனதில் இருந்தால் இந்த கணமே...
இங்கிருந்து என்னை கிளம்பிடச் சொல்கிறீர்களாக்கும்.
ஐயா! இது தங்களுடைய ராஜ்யம். இந்த அரண்மனையின் உச்சியில் புலிக் கொடி பறக்கிறது. இங்கிருந்து தங்களைப் போகச் சொல்வதற்கு நான் யார்? நானும் என் குடும்பத்தாரும் இங்கிருந்து போய்விடுகிறோம். தாங்கள் அனுமதி கொடுத்தால்.


போய் வருவது எல்லாம் சரிதான். ஆனால், இந்தக் கோட்டையை விட்டு போகும் எண்ணத்தை மட்டும் விட்டுவிடுங்கள். நான்கு மாதங்களுக்கு முன்னால் நடந்த சதியாலோசனை பற்றிய உண்மையை அறிந்து கொள்ளும் வரையில், நானும் இந்த இடத்தை விட்டுப் போகப் போவதில்லை, நீங்கள் போவதற்கும் விடப்போவதில்லை.
சம்புவரையர் உதடுகள் துடித்தன, உடம்பு நடுங்கியது. அவருடைய கண்களில் கண்ணீர் ததும்பியது.
பார்த்திபேந்திரன்
கோமகனே! சோழர் குலத்தவர் வீரத்திற்கு புகழ் பெற்றது போலவே நீதிக்கும் பெயர் பெற்றவர்கள்.


இந்த பெரியவருக்கு தாங்கள் நீதி செய்யவில்லை.
தாங்கள் வார்த்தைகளினால் அவருடைய மனதை புண்படுத்துகிறீர்கள். இங்கு நடந்த சிற்றரசர்கள் கூட்டத்தைப் பற்றி சம்புவரையர் முன்னமே தக்க சமாதானம் சொல்லி, தாங்களும் ஒப்புக் கொண்டீர்கள்.
பார்த்திபேந்திரா!
நீயும் இவர்களுடன் சேர்ந்து கொண்டதை நான் அறியவில்லை என்றா நினைத்தாய்? என் உண்மை நண்பனாகிய இந்த வந்தியத்தேவன் மட்டும் தெய்வாதீனமாக இங்கு வந்து சேர்ந்திராவிட்டால் இதற்குள் என்னை யமனுலகத்துக்கு அனுப்பியிருக்க மாட்டீர்களா?



இவன்தான் இளவரசரின் மனதை பேசி, கெடுத்திருக்க வேண்டும்.
இந்த பல்லவன் நம்மை கண்ணாலேயே எரிச்சிடுவான் போலிருக்கிறதே!
ஐயா! இந்த பாதகன் ஏதேதோ சொல்லி தங்கள் மனதை கெடுத்து விட்டான்.
அப்போது குந்தமாறன் அவசர அவசரமாக அந்த அறைக்குள் மகிழ்ச்சியாக ஓடி வந்து..
இளவரசே! மிகவும் சந்தோஷமான செய்தி கொண்டு வந்திருக்கிறேன். சின்ன இளவரசர் கடலில் மூழ்கி சாகவில்லை.


பொன்னியின் செல்வர் லட்சக்கணக்காக ஜனங்கள் புடை சூழ இப்போது தஞ்சாவூரை நோக்கி போய் கொண்டிருக்கிறாராம். (கந்தமாறன்)
இளவரசர், நாம் கூறியதை கேட்டு மகிழ்ச்சி அடைந்ததாக தெரியவில்லையே!
என்ன வந்தியத்தேவா!
என்னுடைய கருத்தை அறிந்து கொள்ளும் வரையில் அருள்மொழி நாகைப்பட்டினத்திலேயே இருப்பான் என்று சொன்னாய்? இப்போது ஏன் தஞ்சாவூரை நோக்கி போகிறான்?


ஐயா! இளையபிராட்டி அவ்வாறுதான் உறுதியாக கூறினார். ஆதற்து பின்னால் என்ன காரணம் நேர்ந்ததோ தெரியவில்லை. நான் வேண்டுமானால் போய்....
ஆகா! நீயும் போய்விடுகிறேன் என்கிறாயா? நல்லது! எல்லோருமே என் விரோதிகள் ஆகிவிட்டீர்கள். (கரி)
அந்த கொடும்பாளூர் பெரிய வேளானின் சூழ்ச்சியிது. அவனது தம்பி மகளை என் சகோதரனின் கழுத்தில் கட்டி அவர்களைச் சோழ சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க வேண்டுமென்பது. என் சகோதரி இளைய பிராட்டியும் இந்த சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கிறாள். நீயும் ஆதற்து உடந்ழை என்று நினைக்கிறேன்.
கந்தமாறா! இவனை உடனே பிடித்து பாதாள சிறையில் அடைத்துவிடு.
அட! அவனா! அவனே எப்படா சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருக்கிறான். இதில் இளவரசர் இப்படி உத்தரவிட்டால் என் கதி அதோ கதிதான்!


ம்.... யார் அங்கே!
காவலர்கள் வந்தியத்தேவனை கைது செய்ய தயாராக இருக்கிறார்கள்.
கைது செய்யுங்கள் அவனை..!


வேண்டாம்...!
வேண்டாம்....!


நல்ல வேளை! இளவரசர் மனம் இறங்கினார். இல்லையென்றால் இந்த கந்தமாறனும், பார்த்திபேந்திரனும் சேர்ந்து இந்நேரம் என்னை சிறையில் அடைத்திருப்பார்கள்.
சோழ குலத்தவர்கள் நீதி தவறாதவர்கள். குற்றம் நிச்சயமாகிற வரையில் தண்டிக்க மாட்டார்கள்.
சரிதானே! பார்த்திபேந்திரா..
வல்லவரையா! இன்று முழுவதும் என் முகத்தில் முழிக்காதே! அதுதான் உனக்கு தண்டனை. உன்னை தஞ்சைக்கு அனுப்புகிறேனா, சிறைக்கு அனுப்புகிறேனா என்பதை பற்றி நாளைக்கு சொல்கிறேன்.
இளவரசரின் மனம் இன்று ஒரு நிலையில் இல்லை என்பது உறுதியாக தெரிகிறது.
கரிகாலர் வந்தியத்தேவனை பார்த்து இதெல்லாம் விளையாட்டு என்பது போல் ஒரு கண்ணை சிமிட்டுகிறார்...
போ! போ..! இனி ஒரு கணமும் இங்கே நிற்காதே. போய்விடு!
இளவரசர் இவ்வாறு கூறியதும் வேறு வழியின்றி வந்தியத்தேவன் அங்கிருந்து போய்விடுகிறான்.


நந்தினி பல சூழ்ச்சிகள் செய்து, மணிமேகலை, பார்த்திபேந்திரன், கந்தமாறன் ஆகியவர்களை கரிகாலருக்கு எதிராக மாற்றுகிறாள். தன் எண்ணம் நிறைவேறுவதற்கு தடையானவர்களை கடம்பூர் மாளிகையை விட்டு அப்புறப்படுத்துகிறாள். ஆதித்த கரிகாலரும், நந்தினியின் சூழ்ச்சிக்கு ஏதுவாக வந்தியத்தேவனை தனது வட்டத்திலிருந்து அப்புறப்படுத்துகிறார். பார்த்திபேந்திரனையும் தனது பாட்டன் மலையமானை சந்திக்க அனுப்புகிறார். ஆதித்த கரிகாலரும், நந்தினியும் தாங்கள் தனிமையில் சந்திப்பதற்கான திட்டத்தை வகுக்கிறார்கள்.



கடம்பூர் அரண்மனை
கரிகாலன் வானத்தில் இருக்கும் தூமகேதுவை பார்த்தபடி சிந்திக்கிறான். தூமகேது வந்தால் அரச குலத்துக்கு ஆபத்து என்று மக்கள் நம்பி வந்தனர்.


தூமகேதுவின் வால் சுருங்கி விழும் தருவாயும் வந்துவிட்டது.
தூமகேதுவிற்கு பலியாக போகும் நபர் யார்? என் தந்தையா? நானா? இல்லை அருள்மொழியா? அருள்மொழியின் ஜாதகம் மிக விசேஷ ஜாதகம் என்று பல ஜோதிடர்கள் கூறி வருகிறார்கள். ஆனால், எந்த ஜோதிடனும் என் ஜாதகத்தை பற்றி ஏதும் கூறாதது ஏன்? பனிரெண்டு வயதில் போர்க்களம் சென்று பல வெற்றிகளை பெற்று இருந்த போதிலும், எந்த ஜோதிடனோ அல்லது நம் குரும்புத்தாரோ என் ஜாதகத்தின் சிறப்பை பற்றி பேசாதது ஏன்?
மக்கள் என்னை அபிமன்யுவுடனும், ராஜாதித்தருடனும் ஒப்பிடுவதை பார்த்தால், ம்....! (கரி)


இளவரசே! அந்த சூரியன் மறைவதை பாருங்கள். எவ்வளவு அழகாக இருக்கிறது.
மறைவதைக் கண்டு ரசிக்கிறாயா? என்ன வினோதமான ரசனை உனக்கு! இளைய ராணியுடன் சில நாள் பழகி இருக்கிறாய் அல்லவா. அதுதான்!
ஐயா! நான்......
நண்பா! பதட்டப்படாதே. சும்மா விளையாட்டாக சொன்னேன். நீ ஒருவன்தான் நந்தினியின் மோகவலையில் சிக்காதவன் என்பதை நான் அறிவேன். கந்தமாறனையும், பார்த்திபேந்திரனையும் நந்தினி வெட்டி கொண்டு வாருங்கள் என்றால், அவர்கள் கட்டி கொண்டு வந்துவிடுவார்கள். (கரிகாலர்)


பார்த்திபேந்திரன் இப்படி மாறிப் போவான் என்று நான் கனவிலும் எண்ணியதில்லை.
இளவரசே! அதனால்தான் இளைய பிராட்டி தங்களை கடம்பூருக்கு வர வேண்டாம் என்று கூறினார்.
வல்லவரையா! இளைய பிராட்டியும், முதல் மந்திரியும் மிக மிக அறிவாளிகள்தான். ஆனால், விதியை அவர்களால் கூட தடுக்க முடியாது அல்லவா? (கரிகாலர்)
எல்லாவற்றையும் உத்தேசிக்கும் போது தாங்கள் இளைய ராணியைச் சீக்கிரம் சந்தித்து எல்லா உண்மைகளையும் சொல்லி விடுவது நல்லது.
நீ கெட்டிக்காரன்தான். ஆனால், பெண்களின் இயல்பு அறியாத அப்பாவிப் பிள்ளை.


இளவரசே! தாங்கள்தான் அவருடைய சகோதரர் என்பதை தெரிந்து கொண்டால்....
அடுத்த கணம், எங்கள் எல்லோரிடமும் அவளுடைய துரோகம் ஒன்றுக்கு நூறு மடங்கு ஆகும். தஞ்சை சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக அவளுக்கு பட்டம் சூட்டுவதாக சொன்னாலும், அவளுடைய கோபம் தீராது.
நானே வேண்டுமானால் நந்தினியின் உண்மை வரலாற்றைச் சொல்லி, அவள் கோபத்தை தணிக்க முயற்சி செய்கிறேன்.
அது உன்னால் முடியாது! (கரிகாலர்)


தாங்கள் மட்டும் மணிமேகலையை மணந்து கொண்டால் நம்முடைய தொல்லைகள் எல்லாம் தீர்ந்துவிடும். சம்புவராயரும், கந்தமாறனும் நம்முடன் சேர்ந்துவிடுவார்கள். பழுவேட்டரையர்கள் தனித்துப் போய்விடுவார்கள்.
எல்லாம் சரிதான் தம்பி! ஆனால், கடம்பூருக்கு நான் திருமணம் செய்து கொள்வதற்காக வரவில்லை...
நான் சொல்கிறது நடக்கிறதா இல்லையா என்று பார். பாட்டன் பழுவேட்டரையர், மதுராந்தகனோடு திரும்பி வரும் போது ஒரு பெரிய படையுடன் வரப் போகிறார்.
இளவரசே! அப்படியானால் நாமும் திருக்கோவலூர் அரசருக்கு சொல்லி அனுப்பி, படை திரட்டி கொண்டு வரச் சொன்னால் என்ன?



நண்பா! சொல்வதைக் கேள். எங்கள் சோழ குலத்தை காப்பாற்ற வேண்டுமானால் ஒன்று நான் சாக வேண்டும் இல்லை அவள் சாக வேண்டும். அல்லது இரண்டு பேருமே சாக வேண்டும்.
இளவரசே! இது என்ன பேச்சு! (வந்தி)
என் சகோதரி (நந்தினி) வீர பாண்டியன் மீது காதல் கொண்டு அவன் உயிருக்காக என்னிடம் மன்றாடினாள் என்பதை நினைத்தாலே என் நெஞ்சு உடைந்துவிடும் போலிருக்கிறது. உண்மையில் அவள் பெண் அல்ல. பெண் உருவம் கொண்ட மாய மோகினி, பேய். அவளை உயிரோடு விட்டு வைத்தால் இந்த சோழ சாம்ராஜ்யம் சின்னா பின்னமாகிவிடும்.
வீர பாண்டியனை கொன்ற வாளினால் அவளையும் கொன்று விடுகிறேன்.


கடம்பூர் மாளிகை, வேட்டை மண்டபம்.
மந்திரவாதி! நீங்கள் இங்கேயே பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். என்னுடைய அறையில் என்ன நடந்தாலும் அவசரபட்டு உள்ளே வர வேண்டாம். வந்தால் காரியம் கெட்டுப் போகும். நான் குரல் கொடுத்த பிறகு நீங்கள் வந்தால் போதும்.
ராணி! தாங்கள் எப்படி குரல் கொடுப்பீர்கள்.
மந்திரவாதி! நான் சிரித்து நீ கேட்டிருக்க மாட்டாய்? இன்றைக்கு நான் கலகலவென்று உரத்து சிரித்தால் காரியம் முடிந்துவிட்டது என்று அர்த்தம். அப்போது நீங்கள் ரகசிய கதவை திறந்து கொண்டு உள்ளே வாருங்கள்.


எதிர்பாராத தடங்கல் ஏதாவது ஏற்பட்டுவிட்டால்?
அப்போது என் அழுகைக் குரல் கேட்கும். உடனே வந்து சேருங்கள்.
அப்படியே செய்வோம் ராணி! ஆனால், தங்கள் அழுகைக் குரலை கேட்க நான் விரும்பவில்லை.


இளையராணி தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறாள்.


நேரம் நெருங்கி வரும் சமயம் என் கைகள் ஏன் நடுங்குகின்றன.
நான் ஏந்த சந்தர்பத்துக்காக காத்திருந்தேனோ, அந்த சந்தர்ப்பம் வரப் போகிறது. இன்று நிச்சயம் வீர பாண்டியனின் கொலைக்கு பழி வாங்குவேன்.


அக்கா! தனாதிகாரி பழுவேட்டரையர் இன்னும் தஞ்சாவூருக்கு போய் சேரவில்லையாம். பழுவேட்டரையர் சென்ற படகு புயலில் சிக்கி கவிழ்ந்து விட்டதாம். எங்கு தேடியும் தங்கள் கணவர் மட்டும் அகப்படவில்லையாம்.
என்று கூறிவிட்டு கதறி, கதறி அழுகிறாள் மணிமேகலை....
என் கண்ணே! என்னிடம் நீ எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாய் என்று நான் தெரிந்து கொண்டேன். ஆனால், நீ வருத்தப்பட வேண்டாம். (நந்தினி)
மணிமேகலை சிறிது வியப்புடன் நந்தினியை பார்க்கிறாள்.
என் கணவருடைய உயிருக்கு ஆபத்து ஒன்றும் வரவில்லை என்பது நிச்சயம்! அப்படி ஏதாவது நேர்ந்திருந்தால் என் நெஞ்சே எனக்கு உணர்த்தியிருக்கும். அதனால்தான் கவலைப்படவில்லை. சரி, நீ கேள்விப்பட்டதை இன்னும் விவரமாகச் சொல். என் மனதில் வேறொரு சந்தேகம் உதித்திருக்கிறது.
என்ன சந்தேகம் அக்கா?


உன் தமையனும், அந்த பல்லவ பார்த்திபேந்திரனும் சேர்ந்து என் கணவருக்கு கெடுதல் செய்ய திட்டமிட்டிருக்கிறார்களோ? என்று எண்ணுகிறேன்.
அக்கா! அவர்கள் ஏன் பழுவேட்டரையருக்கு தீங்கு செய்ய வேண்டும்?
நீ பச்சை குழந்தையாகவே இருக்கிறாய் மணிமேகலை.
உன் தமையனும் பார்த்திபேந்திரனும் என் மீது துர் எண்ணம் கொண்டிருக்கிறார்கள், என்று நான் சொல்லவில்லையா? அதற்காகத்தான் இந்த வாளை எப்போதும் அருகிலேயே வைத்துக் கொண்டிருக்கிறேன்.


அக்கா! இனி நான் தங்களைவிட்டு ஒரு கணமும் பிரிய மாட்டேன். அந்த இருவரில் ஒருவர் இங்கு வந்தாலும் என்னுடைய கைகளாலேயே அவர்களை கொன்றுவிடுவேன்.
மணிமேகலை! நீ இன்னும் உன்னுடைய நிலைமையையும், உன் அன்புக்குரியவனுடைய நிலைமையையும் உணரவில்லை.
அக்கா! அப்படி என்ன மோசமான நிலை எனக்கு வந்துவிட்டது?


பேதைப் பெண்ணே! வேண்டாத புருஷனுக்கு வாழ்க்கைப்படுவதைக் காட்டிலும் பெண்களுக்கு வேறு என்ன மோசமான நிலை வந்து விட வேண்டும்.
அது ஒரு நாளும் நடவாத காரியம்!
உன்னை யாரோ வற்புறுத்தப் போவதாக எண்ணியிருக்கிறாய். உன்னுடைய சம்மதத்தைக் கேட்கப் போகிறார்கள் என்றும் நினைத்திருக்கிறாய்.
அவ்விதம் ஒன்றும் அவர்கள் செய்யப் போவதில்லை. நீ இளவரசரை மணந்து கொள்ள தடையாக இருக்கிற காரணத்தை நீக்கிவிடப் போகிறார்கள்.
என்று கழுத்தை வெட்டுவது போல் சைகை செய்கிறாள்.
அவரை கொன்று விடுவார்கள் என்றா சொல்கிறீர்கள்?


கொல்லமாட்டார்கள். கண்டதுண்டமாக வெட்டி நரிகளுக்கும், நாய்களுக்கும் போட்டுவிடுவார்கள்.
ஐயோ! அக்கா.
தங்காய்! திருக்கோவலூர் கிழவன் ஒரு பெரிய சைன்யத்துடன் கடம்பூரை நோக்கி வந்து கொண்டிருக்கிறான். அது தெரியுமா உனக்கு?
கேள்விப்பட்டேன். அது என்னத்திற்காக என்று ஆச்சரியப்பட்டேன்!
அதுவும் உன் காரணமாகத் தானாம்!
மணிமேகலையை எனக்கு கல்யாணம் செய்து கொடுக்காவிட்டால், மலையமான் சைன்யம் வந்தவுடன் இந்த கோட்டையை தரை மட்டம் ஆக்கிவிடுவேன் என்றாராம் இளவரசர் கரிகாலர்.


அப்போது உன் தமையன், அதற்கு தடையாயிருப்பது நாங்கள் அல்ல. உங்கள் சிநேகிதன் வந்தியத்தேவன்தான் என்றானாம்.
அத்தடையை நீக்க உங்களால் முடியாதா? என்று இளவரசர் கேட்க, கட்டளையிட்டால் முடியும் என்றானாம் உன் அண்ணன்.
சரி, சரி... இப்போது முதலில் உன் காதலனை காப்பாற்ற முயல்வோம். அவர் இருக்குமிடம் உனக்கு தெரியும் அல்லவா! அவரை எப்படியாவது இங்கே அழைத்து வா. வந்தியத்தேவர் இனி இந்த கோட்டையில் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவருடைய உயிருக்கு ஆபத்து. உன் தமையன் ஏவும் கொலைகாரர்கள் எப்போது அவரை தாக்குவார்கள் என்பது நமக்கு என்ன தெரியும்?


அவர் அப்போதே சொன்னாரே, கொலைகார பாதகர்கள் துரத்துவதாக. சுரங்க வழியில் அவரை துரத்தினவர்கள் ஒரு வேளை கந்தமாறன் ஏவி விட்ட ஆட்களாக இருக்குமோ? ஐயோ கடவுளே!


இதோ போகிறேன் அக்கா!
என்று கூறிவிட்டு மணிமேகலை அங்கிருந்து ஓடுகிறாள்.
வந்தியத்தேவனை எப்படியாவது கரிகாலரை விட்டு பிரிக்க வேண்டும் என்ற தன் திட்டத்துக்கு, மணிமேகலையை பயன்படுத்திக் கொள்கிறாள் இளையராணி நந்தினி.



மணிமேகலை உடனே சென்று, வந்தியத்தேவனை நந்தினி அழைத்ததாக கூறி அழைத்து வருகிறாள்.
தங்காய்! நீ மிக்க புத்திசாலி! இவரை வேட்டை மண்டபம் வழியாக அழைத்து வந்தது நல்லதாய் போயிற்று. கந்தமாறன் ஆதித்த கரிகாலரை அழைத்து வருவதாக போயிருக்கிறான். அவர்கள் வருவதற்குள் நான் உங்களை அனுப்பிட வேண்டும்.


அக்கா! இவர்....
ஐயா! தாங்கள் உடனே இங்கிருந்து போய்விடுங்கள். தங்கள் உயிர் மேல் ஆசை இல்லாவிட்டாலும், இந்த பெண்ணை உத்தேசித்தாவது உடனே போய்விடுங்கள்.
ராணி! நான் போகச் சித்தமாயிருக்கிறேன். போவதற்கு முன் தங்களிடம் உள்ள ஒரு பொருளை யாசிக்கிறேன். அதை கொடுத்தால் உடனே போய் விடுகிறேன்.


ஐயா! என்னிடம் தாங்கள் யாசித்து பெறக்கூடிய, அத்தகைய பொருள் என்ன உள்ளது?
மணிமேகலைக்கு ஒன்றும் புரியவில்லை! முழிக்கிறாள்.
அது! மீன் அடையாளம் பொறித்த வாள் ஒன்று தங்களிடம் இருக்கிறது அல்லவா! அதை கொடுத்தால் போய்விடுகிறேன்.
என் உயிருக்கும் மேலான கற்பை காப்பாற்றிக் கொள்ள அந்த கத்தியை வைத்திருக்கிறேன்.



தேவி! வேறு நோக்கம் ஒன்றுமில்லையா?
வேறு நோக்கம் எனக்கு என்ன இருக்கக்கூடும்?
வீர பாண்டியனுடைய மரணத்துக்கு, பழிக்குப் பழி வாங்குவதற்காகவும் இருக்கலாம் அல்லவா?
மணிமேகலை இருக்கும் போது நீர் அந்த பேச்சை எடுக்க மாட்டீர் என்று நினைத்தேன்!
நானும் இனி மறைக்க வேண்டிய அவசியம் இல்லை.


நந்தினி பேசிக் கொண்டிருப்பதை பக்கத்து அறையிலிருந்து ரவிதாசனும் அவனது ஆட்களும் சுவற்றில் காதை வைத்து ஒட்டுக் கேட்கிறார்கள்.
தங்காய்! நீயும் தெரிந்து கொள். நான் வீர பாண்டியனின் தலையை கொய்த பாதகனை பழி வாங்கவே இங்கு வந்தேன்.
இது பாண்டிய குலத்து வாள்!


இதன் மேல் ஆணையிட்டு நான் சபதம் செய்திருக்கிறேன். இன்றிரவு ஒன்று என் சபதத்தை முடிப்பேன். அல்லது என் உயிரை முடித்துக் கொள்வேன்.
தேவி! தங்களுடைய காலில் விழுந்து கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் இந்த பாவ காரியத்தை செய்ய வேண்டாம்.
சகோதரஹத்தி தோஷத்துக்கு ஆளாக வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்.


இது என்ன புதுக்கதை? இந்த கற்பனைக் கதையை அந்த பழையாறை இளைய பிராட்டி கூறி அனுப்பினாளா?
அம்மணி! நான் கூறியது கற்பனை அல்ல. பழையாறை இளைய பிராட்டியின் கற்பனையும் அல்ல. ஈழ நாட்டில் நான் என் கண்ணால் பார்த்தேன்.
என்னத்தை பார்த்தீர்?


வாயினால் பேசும் சக்தி அற்ற ஒரு பெண் தெய்வத்தை பார்த்தேன்.
இவன் கூறுவது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்!
இலங்கையில், அனுராதாபுரத்தில் அந்த பெண்ணரசியை, தம் குல தெய்வம் என்று போற்றி வணங்கியதைப் பார்த்தேன். நிலவு வெளிச்சத்தில் அந்த பெண்ணரசியை நான் தூரத்திலிருந்து பார்த்த போது...


தஞ்சாவூரில் நாம் விட்டு பிரிந்து வந்த பழுவூர் இளையராணி இங்கே எப்படி வந்து சேர்ந்தாள்? என்று வியப்படைந்தேன்!
அம்மணி! தங்களுக்கும் அவருக்கும் உருவ தோற்றத்தில் அணுவளவும் வித்தியாசம் இல்லை.
நீர் சொல்வதை நான் ஏன் நம்ப வேண்டும்? இதுவும் உமது கற்பனைகளில் ஒன்றாக இருக்கலாம் அல்லவா?
ராணி! நம்ப முடியாது என்று தாங்கள் சொல்வது பொய்! நான் சொல்வது உண்மை என்பது தங்களுக்கு தெரியும்.


உண்மையைச் சொல்லுங்கள்! தாங்கள் அன்னையின் ஆவியை போல் நடித்து, சக்கரவர்த்தியை தாங்கள் பயமுறுத்தவில்லையா?
அவன் கூறியதைக் கேட்டு அதிர்ச்சி அடைகிறாள் நந்தினி. அவள் கண்களிலிருந்து கண்ணீர் வருகிறது.
அப்படியே அங்கிருக்கும் கட்டிலில் அமர்ந்துவிடுகிறாள் சோர்வாக....
நிலவறையில் நந்தினியையும் பழுவேட்டரையரையும் பார்த்ததையும், கந்தமாறனும் மதுராந்தகத்தேவரும் அங்கு வந்ததையும், பழுவேட்டரையர் கந்தமாறனை கொன்றுவிடும்படி சமிங்ஞை செய்ததையும் ஒன்று விடாமல் நந்தினியிடம் கூறுகிறான்.


தேவி! இத்தனை காலமும் இதையெல்லாம் பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை.
உங்கள் கையில் வைத்திருக்கும் வாளை என்னிடம் தாங்கள் கொடுத்துவிட்டால், இனியும் யாரிடமும் சொல்லமாட்டேன்.
வாளை கொடுக்க முடியாது! யாரிடம் வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்.
என்று நந்தினி கூறிய போது அவளுடைய கண்களில் நீர் ததும்பியது.


அக்கா! தாங்களா?
என் அன்னைக்கு சக்கரவர்த்தி பெரிய துரோகம் செய்திருக்கிறார். அவர் மேலும், அவருடைய மக்கள் மேலும் நான் ஏன் இரக்கம் காட்ட வேண்டும்.
இல்லை அரசி! இல்லை! தாங்களுடைய பழி வாங்கும் எண்ணத்தை தாங்கள் அன்னை சரியென்று ஒப்புக் கொள்ள மாட்டார். சக்கரவர்த்தியின் மக்களை அந்த மூதாட்டி தம் உயிருக்கு உயிராக கருதுகிறார். அவர்களில் ஒருவரை தாங்கள், தங்கள் கையினால் கொல்லுவதை அவர் விரும்புவாரா? என்று யோசித்து பாருங்கள்.


ஒரு நாளும் விரும்பமாட்டார். தங்களுடைய செயலை அறிந்தால், தங்களை வெறுப்பார். (வந்திய)
வந்தியத்தேவன் பேசியதைக் கேட்டு நந்தினியின் கண்களில் கண்ணீர் ததும்புகிறது.
ஐயா! இதுவரையில் யாரும் சாதிக்க முடியாத காரியத்தை நீர் சாதித்துவிட்டீர். இதோ உமது விருப்பத்தின்படி இந்த வாளை உம்மிடமே கொடுத்து விடுகிறேன்.
ரவிதாசனும் அவனது ஆட்களும் சுவற்றில் காது வைத்துபடி, நந்தினி என்ன பேசுகிறாள் என்பதை கேட்கிறார்கள்.
பார்த்தாயா! அப்போதே சொன்னேன் அல்லவா? அவள் அந்த காஞ்சி வாலிபனிடம் மனதை பறிகொடுத்துவிட்டாள் என்று.
தேவராளா! அவளின் திட்டம் இன்னதென்பதை நீ புரிந்து கொள்ளவில்லை. பொறுத்திருந்து பார்! (ரவி)


கொஞ்சம் பொறுங்கள்! வாளை எடுத்துக் கொள்வதற்கு முன் எனக்கு நீர் ஓர் உதவி செய்ய முடியுமா? என்று சொல்லுங்கள்.
என் சபதத்தை நிறைவேற்றாமல் நான் இங்கிருந்து கிளம்பினால், வேட்டை மண்டபத்தில் உள்ளவர்கள் என்னைச் சும்மா விடமாட்டார்கள். உயிரோடு சிதையில் வைத்து கொளுத்தி விடுவார்கள். அதற்கு கூட நான் அஞ்சவில்லை. ஆனால்...
நான் சாவதற்கு முன்னால் என் தாயை ஒருமுறை சந்திக்க விரும்புகிறேன். அவரை ஒரு தடவை பார்க்க வேண்டும். அவருடைய மடியிலே படுத்து விம்மி அழ வேண்டும் என்று என் உள்ளத்தில் தாபம் குடி கொண்டுவிட்டது. தாங்கள் கூறிய வார்த்தைகளினால் தாபம் பலமடங்கு அதிகமாகிவிட்டது.
என்னை என் தாயாரிடம் நீர் அழைத்துப் போவதாக இருந்தால், என் பழிவாங்கும் நோக்கத்தை விட்டு விடுகிறேன்.


வந்தியத்தேவன் சிறிது யோசித்து...
என்னால் முடிந்தால் பார்க்கிறேன்.
ஐயா! தங்களை வேண்டிக் கொள்கிறேன். அக்காவின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதாக வாக்கு கொடுங்கள்.
அப்படியானால் ஆதித்த கரிகாலர் இங்கு வருவதற்குள் கிளம்பிவிட வேண்டும். இங்கிருந்து எப்படி புறப்பட்டுச் செல்வது? வாசல் வழி அபாயகரமானது. எதிரே கரிகாலர் வந்தாலும் வருவார்!
ராணி! தங்களை நான் சுரங்கப் பாதை வழியாக அழைத்துப் போகிறேன்.
வேட்டை மண்டபத்துக்குள் போக முடியாது. ரவிதாசனும், அவனுடைய ஆட்களும் நம்மை உயிரோடு விட மாட்டார்கள்.


அம்மணி! தங்கள் கையில் உள்ள வாளை மட்டும் என்னிடம் கொடுங்கள். அவர்களை நான் சமாளித்துக் கொள்கிறேன்.
வேண்டாம்! அதனால் பல சங்கடங்கள் உண்டாகும். மணிமேகலை இங்கிருந்து வெளியேறுவதற்கு வேறு வழி ஒன்றும் இல்லையா?
அக்கா! எனக்கு வேறு வழி இருப்பதாக தெரியவில்லை.



அப்போது அரண்மனை முன் கட்டிலிருந்து அந்த அறைக்குள் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்கிறது.
சரக்... சரக்...
ஐயா! இங்கிருந்து போய்விடுங்கள். இல்லையென்றால் எங்கேயாவது மறைந்து கொள்ளுங்கள்.
அதை நான் பார்த்துக் கொள்கிறேன், தேவி! வாளை இப்படி கொடுங்கள்.


நந்தினி அவனிடம் கொடுக்க வாளை நீட்ட,
பதட்டத்தில் வாள் தவறி விழுகிறது.
ஜணஜண கணகணவென்று ஒலி எழுப்புகிறது.


கீழே விழுந்த வாளை எடுக்க முயற்சி செய்கிறான் வந்தியத்தேவன்.


வேண்டாம்! இளவரசர் காதில் வாள் விழுந்த சத்தம் கேட்டிருக்கும்.


இங்கே வாள் இல்லாவிட்டால் அவர் மனதில் சந்தேகம் உண்டாகும். (நந்தினி)


ஏற்கனவே, அவருக்கு தாங்கள் மீது சந்தேகம் உள்ளது. போய்விடுங்கள்.


வந்தியத்தேவன் வாளின் முனையை பிடித்து எடுக்க முயன்றதில் அவன் கையில் சிறு காயம் உண்டாயிற்று.


வந்தியத்தேவன் தன் கையை பார்க்கிறான், ரத்தம் கசிகிறது. அதை நந்தினியும் பார்க்கிறாள்.
போய்விடுங்கள்!
நான் உமக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றுவேன். என் கையால், என் உடன் பிறந்தவனை கொல்ல மாட்டேன். நீர் தப்பித்து கொள்ளும். உம்மை இங்கே அவர் கண்டுவிட்டால்?!
உடனே புறப்படுங்கள்!


வந்தியத்தேவன் அங்கிருந்து எழுந்து, யாழ் களஞ்சியதிற்குள் ஓடி ஒளிந்து கொள்கிறான்.


நீயும் மறைந்து கொள். கட்டிலின் திரைகளுக்கு பின்னால் மறைந்து கொள்! நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது அவருக்குத் தெரியாமல் இங்கிருந்து போய்விடு!
மணிமேகலை கட்டிலின் திரைச் சீலைக்குப் பின் மறைந்து கொள்கிறாள்.


நந்தினி இருக்கும் அறையை நோக்கி வரும் வழியில்....
நீ சொல்வதையெல்லாம் பார்த்தால், பெரும் கைகாரனாய் இருப்பான் போலிருக்கிறதே?
நானும் அவனை உற்ற நண்பன் என்றல்லவா எண்ணியிருந்தேன்!
அந்த சிநேகித துரோகிக்கு சரியான பாடம் புகட்டுகிறேன் பார்!
கரிகாலர், கந்தமாறனை அறைக்கு வெளியே நிறுத்திவிட்டு, தான் மட்டும் நந்தினி இருக்கும் அறைக்கு செல்கிறார்.


அப்போது கீழே விழுந்திருக்கும் வாளை எடுக்கிறாள் நந்தினி. அச்சமயம் அங்கு கரிகாலர் வந்ததும் அதை அவரிடம் கொடுக்கிறாள்.
இதோ பார்! உன் அந்தரங்கத்தை நான் அறிவேன். என்னிடம் இனியும் மறைக்க வேண்டாம்.
இங்கு நீ எதற்காக வந்தாய்? என்னை எதற்காக வரச் சொன்னாய்?
என்னத்திற்காக பழுவேட்டரையரை தஞ்சைக்கு அனுப்பினாய்?
என்பதெல்லாம் எனக்கு தெரியாது என்றா எண்ணுகிறாய்?


இத்தனை வருஷமாக நீ என்னை பதுத்தி வைத்த பாட்டுக்கெல்லாம் இன்றைக்கு முடிவு ஏற்படப் போகிறது.
ஒரு வேளை உன்னை நேரில் பார்த்த பிறகு என் மனம் பேதலித்து விடுமோ என்று எண்ணினேன்? அதற்கு இடமில்லாமல் நீயே வாளை என் கையில் கொடுத்துவிட்டாய்!
என்று கூறிவிட்டு வாளை ஓங்கினான் நந்தினியை வெட்டுவது போல...
ஒரு காலத்தில் தாங்கள் என் கழுத்தில் பூமாலை சூட்டப் போகிறீர்கள் என்று ஆசை கனவு கண்டு கொண்டிருந்தேன். அது நிறைவேற முடியாமற் போயிற்று.
தாங்கள் கையிலுள்ள வாளை என் கழுத்தில் சூட்டிக் கொள்ளும் பேறாவது எனக்கு கிடைக்கட்டும் ஐயா! ம்... என் கதையை முடித்துவிடுங்கள்.
என்று கூறி தன் தலையை தாழ்த்தி வெட்டுவதற்கு ஏதுவாக காட்டுகிறாள்.


கடைசியாக என்னை பார்த்து, என் கேள்விக்கு மறுமொழி சொல்!
பூமாலை சூட்ட வேண்டிய என் கையினால்...
நான் ஏன் உனக்கு வாள் மாலை சூட்ட வேண்டும்? நீ ஒரு காலத்தில் ஆசைக் கனவு கண்டது உண்மையானால்! இப்போது ஏன் அதை நிறைவேற்றிக் கொள்ள கூடாது? (கரிகாலர்)
தாங்கள் நண்பன் வந்து சொன்ன செய்திதான் காரணம்!
ஆகா! நீயும், நானும் உடன் பிறந்தவர்கள் என்று அவன் கண்டுபிடித்துக் கொண்டு வந்த செய்தியைத்தானே சொல்லுகிறாய்.
இல்லை, இல்லை! எனக்கும் உங்களுக்கும் இரத்த சம்பந்தம் ஏதுமில்லை.


பின் என்ன தடை நந்தினி?
நான், தங்களுக்கு பாட்டி முறையில் இருக்கிறேன். அது போதாதா?
நந்தினி! அந்த கதையை சொல்லி மறுபடியும் என்னை ஏமாற்றப் பார்க்க வேண்டாம்.
எதற்காக நாம் ஏதேதோ பேசி வீண் பொழுது போக்க வேண்டும்?
என்னுடன் புறப்பட்டு வருவதாகச் சொல்! நான் இந்த பெரிய சோழ ராஜ்யத்தையே தியாகம் செய்துவிட்டு வருகிறேன்.



கோமகனே! தாங்கள் ராஜ்யத்தை துறந்தாலும் துறப்பீர்கள். ஆனால்....
கீழ் குலமகள் புராதனமான சோழ சிங்காதனத்தில் ஏறுவதற்கு சம்மதிக்க மாட்டீர்கள்?
நந்தினி! நீ இதை வேறு விதமாக பார். உனக்கு என்னை காட்டிலும் சோழ சிங்காதனம் உயர்வானதா?
நீ என்னிடம் அந்த நாளிலிருந்து காட்டிய பிரியம் எல்லாம் சிங்காதனம் ஏறி மணிமதுடம் சூடும் ஆசையினால் நடித்த நடிப்புதானா?
எனக்கு அரண்மனை வாழ்வும், அரச போகமும், அரியாசனமும்தான் வேண்டும். இதற்காகவே பழுவேட்டரையரை மணந்தேன். இதற்காகவே வீர பாண்டியரை காப்பாற்றுவதற்கு முயன்றேன்.


அடி பாதகி!
உன்னுடைய சூழ்ச்சியெல்லாம் எனக்கு இப்போது நன்றாய் புரிந்துவிட்டது. வீர பாண்டியனுடைய பெயரை சொன்னால் எனக்கு ஆத்திரம் வரும், நான் உன்னை உண்மையாகவே கொல்ல வருவேன். உடனே இங்கு நீ காலால் இட்டதை தலையால் செய்ய காத்திருக்கும் வாலிப சிங்கங்களில் ஒருவன் வந்து என்னை கொன்றுவிடுவான்?
அடி சண்டாளி! அந்த வந்தியத்தேவன் எங்கே இருக்கிறான்? எங்கே அவனை மறைத்து வைத்திருக்கிறாய்?
திரை மறைவில் மறைந்திருக்கும் மணிமேகலை கரிகாலரின் செயலை கண்டு கோபமும், ஆத்திரமும் அடைகிறாள்.


பழுவேட்டரையர் காளாமுகன் வேடம் இட்டு வேட்டை மண்டபத்தின் ரகசிய வழியை திறந்து வருகிறார்.
அனைவரும் வந்தாகிவிட்டதே! இந்த காளாமுகனும் நம் கூட்டத்தைச் சேர்ந்தவனா?!
என்று எண்ணியபடி பழுவேட்டரையரை நெருங்கி வர.....
அவனை அதிரடியாக தாக்குகிறார் பழுவேட்டரையர்.


அவன் கையில் வைத்திருந்த திருகு கத்தியை எடுத்துக் கொள்கிறார்.
நீ என்னோடு வர மறுப்பதற்குக் காரணம் இப்போது நன்றாய் தெரிகிறது. ஆமாம்! எங்கே உன்னுடைய புதிய காதலன்...?
அவன்தான் காரணம். அவனோடு நீ ஓடிப்போக எண்ணியிருப்பது தான் காரணம். எங்கே அந்த பாதகன்?


வல்லவரையா!
வல்லவரையா!
வந்தியத்தேவா!
என்று கூச்சலிட்டுக் கொண்டே இங்கும், அங்கும் ஓடுகிறான்...
யாழ்களஞ்சியத்தை நோக்கி கரிகாலன் ஓட, நந்தினி கரிகாலனின் காலை பிடித்து...
வாணர் குல வீரரை பற்றி தாங்கள் கூறுவது அபாண்டம். பூமாதேவி பொறுக்கமாட்டாள். அவருக்கு ஏதேனும் தீங்கு செய்தால், என் அருமை தோழி உயிரையே விட்டுவிடுவாள்.


நந்தினி கூறுவதை பொருட்படுத்தாமல், அவனது கண்கள் வந்தியத்தேவனை தேடுகிறது...
இதோ என் நெஞ்சை பிளந்து பாருங்கள்! வீர பாண்டியருடைய வாளினாலேயே, என் நெஞ்சை கீறி பாருங்கள். அதற்குள்ளே தங்களுடைய திருவுருவத்தை தவிர வேறு எதுவும் இராது!
இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!!


அப்படியானால், என்னுடன் வருவதற்கு நீ ஏன் மறுக்கிறாய்? அதையாவது சொல்லிவிடு?
நான் எடுத்துக் கொண்ட சபதத்துடனும், தாங்கள் பேரில் கொண்ட காதலுடனும் ஓயாமல் போராடிக் கொண்டிருந்தேன். இனி அதற்கு அவசியம் இல்லை. உண்மையை சொல்லிவிடுகிறேன்.
கோமகனே! நான் சொல்லப்போகும் செய்தியினால் தாங்கள் மனம் உண்மையிலேயே அமைதி அடையட்டும். அதுதான் என் பிரார்த்தனை. ஆனால், அந்த செய்தி நான் தாங்களுடன் வருவதோ, தாங்களை மணப்பதோ முடியாத காரியம் என்பதையும் நிருபிக்கும். என் துன்பங்களுக்கு விமோசனம் - மரணம் ஒன்றுதான்.
இந்த துர்பாக்கியசாலியை மறந்துவிட்டு தாங்கள் குலத்துக்கும், பதவிக்கும் உகந்த பெண்ணை மணந்து வாழும்படி தாங்களை கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன்.


நந்தினி! நீ சொல்ல வந்த உண்மையை சொல்லிவிடு. யாராவது வந்துவிடப் போகிறார்கள். நேரம் கடந்துவிட்டது.
ஆகட்டும்! இதோ சொல்லுகிறேன், கோமகனே!
என் வாழ்க்கையே ஒரு கற்பனை! என் பிறப்பே ஒரு புனைகதை!
என் வாழ்க்கையை சிறிது காலம் நீடிப்பதற்காகவும், நான் கொண்ட கருமத்தை முடிப்பதற்காகவும் நான் பல முறை கற்பனை கதையை புனைய வேண்டியதாக இருந்தது. தாங்கள் என்னை வெறுத்துவிட வேண்டும் என்பதற்காகவே பல கற்பனைகளை புனைந்தேன். பல பயங்கரமான காரியங்களைச் செய்யும் படி கூறினேன். என் உள்ளத்தில் ஓயாத போராட்டம் நடந்து கொண்டிருந்தன.
என்னுடைய நெஞ்சில் தங்களைத் தவிர வேறு யாருக்கும் இடம் கிடையாது. இது சத்தியமான போதிலும், நான் தங்களுடன் வர முடியாது.


வாணர் குலத்து வீரன் என்னுடைய அன்னையை பற்றிய செய்தி கொண்டு வந்தான். அது உண்மை என்று நான் அறிவேன். ஈழ நாட்டில் வெறி கொண்டு அலைந்து திரிந்து கொண்டிருக்கும் மாதரசிதான் என் அன்னை என்பதை நான் அறிவேன். (நந்தினி)
வந்தியத்தேவன் யாழ் களஞ்சியத்திலிருந்து, சுவற்றில் காது வைத்து இவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்கிறான்.
என் அன்னையை அத்தகைய வெறியாக்கிய காரணம் இன்னதென்பதையும் சில காலத்துக்கு முன்பு நான் அறிந்து கொண்டேன்.
என் தந்தை யார்? என்பதை தங்களுக்குச் சொல்லப் போகிறேன்.
கருணை கூர்ந்து ஆத்திரத்திற்கும், துரோகத்துக்கும் இடங் கொடாதீர்கள்.
என்னை பெற்ற தந்தைதான்.... (நந்தினி)
நந்தினி மெல்லிய குரலில்....


என்று கூறிவிட்டு விம்மி, விம்மி அழத் தொடங்கினாள்.
இல்லை... இல்லை...! ஒரு நாளும் இல்லை! நீ சொல்வது பொய்.. (கரி)
யாழ்களஞ்சியத்தின் வழியாக பெரிய பழுவேட்டரையர் வர, அங்கு வந்தியத்தேவன் இருக்கிறான்.
அவளது தந்தை யார் என்று கூறினால் அது மட்டும் சரியாக காதில் விழவில்லையே.
சற்றும் எதிர்பாராத நேரத்தில் வந்தியத்தேவனின் கழுத்தை பின்னாலிருந்து பிடித்து நெருக்க, முழி பிதுங்கி மயக்கம் அடைகிறான் வந்தியத்தேவன்.
பொய்...! பெரும் பொய்!


ஆகா! இளையராணியின் அழுகுரல் கேட்கிறது. அவள் எடுத்துக் கொண்ட காரியத்துக்கு ஏதோ துந்தகம் ஏற்பட்டுவிட்டது.
ஆம்! அவளாள் சபதத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. அவள் அழுகுரல் கேட்டா, உடனே நம்மை வரும்படி கூறினாள் அல்லவா?


கரிகாலன் ஆவேசம் அடங்கிய நிலையில்...
ஆம் நந்தினி! ஆம்! நீ கூறியது உண்மையாகவே இருக்க வேண்டும். இப்போது எனக்கு எல்லாம் தெரிகிறது. நம் இருவருக்கும் நடுவில் உள்ள தடை நீங்க வழியே கிடையாது.


ஐயோ! இந்த பெரும் பாரத்தை, இத்தனை நாள் எப்படி உன் மனதில் வைத்து தாங்கிக் கொண்டிருந்தாய்?
எப்படி இந்த பாதகன் இப்பூமியில் உயிர் வாழ்வதை சகித்துக் கொண்டாய்?!
நல்லது! நம் இருவருடைய வாழ்க்கைக்கும் பரிகாரம் ஒன்றுதான்! விமோசனம் ஒன்றுதான். இதோ நந்தினி என் பிராயச்சித்தம்!


ரவிதாசனும், அவனது ஆட்களும் கரிகாலரின் பின் பக்கமாக ரகசியமாக வருகிறார்கள்.
மாறுவேடம் பூண்டிருக்கும் பழுவேட்டரையர் தாம் கொண்டு வந்த திருகு கத்தியை வீசுகிறார்.
அந்நேரம் வெளியில் இடியும் மின்னலுமாக இருக்கிறது. அப்போது அறையில் இருந்த விளக்கு அணைந்துவிட்டது.


தஞ்சை அரண்மனை.
முதன் மந்திரி என் உள்ளத்தில் நிம்மதி இல்லை. ஏனோ இனந்தெரியாத அபாயம் என் குலத்தை நெருங்கி கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இந்த சமயத்தில் இந்த ஊமை பிச்சி இங்கு வந்திருப்பது ஒரு அபசகுணமாகவே தோன்றுகிறது.
சுவாமி! கரையர் குல மகள் இங்கே இச்சமயம் வந்திருப்பது அபசகுணம் இல்லை, நல்ல சகுணம்தான். இவர் இங்கிருப்பது நம்முடைய குலத்துக்கே ஒரு பாதுகாப்பு.
சக்கரவர்த்தி அவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் வேளையில், சோமன் சாம்பவன் சக்கரவர்த்தியின் மார்புக்கு குறி வைக்கிறான். மந்தாகினி அதை பார்த்து விடுகிறாள்.


மற்றவருக்கு எச்சரிக்கை செய்யலாம் என்றால் அதற்குள் சோமன் சாம்பவன் ஈட்டியை சக்கரவர்த்தி மீது சரியாக குறி பார்த்து எறிந்துவிடுகிறான்.
ஓடிச் சென்று ஈட்டியை தன் மார்பில் வாங்கிக் கொள்கிறாள் மந்தாகினி.
மந்தாகினி....


மூன்று வருடங்களாக
காலை ஊன்றி நடக்க
முடியாதிருந்த
சக்கரவர்த்தி, தாம்
படுத்திருந்த
கட்டிலிலிருந்து
இறங்கி நடந்து
வந்து மந்தாகினியை
தன் மடியில்
சாய்த்துக் கொண்டு
கதறி அழுகிறார்.
என்னை
மன்னித்து விடு!
மந்தாகினி அருள்மொழியை அருகில்
அழைத்து நெற்றியில் முத்தமிடுகிறாள்.


நான் அப்போதே சொல்லவில்லை, வந்திருப்பது நம்மை காக்க வந்த குல தெய்வம் என்று!
என்று கூறி வானமா தேவி கதறி அழுகிறார்.
சோமன் சாம்பவன் தப்பி ஓடுகிறான்.
அவனை பிடியுங்கள்.


கடம்பூர் கோட்டையை முற்றுகையிருகின்றது மலையமான் படை.
பார்த்திபேந்திரா! நம்மை
எதிர் கொண்டு வரவேற்காமல்
கோட்டை கதவை தாழிட்டு
கொண்டு என்ன செய்து
கொண்டிருக்கிறான் அந்த
சம்புவராயன்?


கந்தமாறா! நான் நினைத்தது சரியாக போயிற்று. மலையமான் வம்சத்துக்கும் நமக்கும் ஏற்கனவே ஆகாது. அந்த கிழவன் நம் கோட்டையை முற்றுகையிட்டுவிட்டான். இவர்களை நான் எப்படியாவது சமாளித்துக் கொள்கிறேன். நடந்த சம்பவம் பற்றி அறிந்தால் நம் கோட்டையை தரைமட்டம் ஆக்காமல் விடமாட்டான். சூழ்நிலை வேறு நமக்கு எதிராக இருக்கிறது.
நீ உடனே புறப்படு! கரிகாலன் மரண செய்தி சுந்தர சோழருக்கு போய் சேர்வதற்க்கு முன்னால், தஞ்சையில் வேறு யாருக்கும் தெரிவதற்க்கு முன்னால் பழுவேட்டரையர்களுக்கும், மதுராந்தகருக்கும் தெரிய வேண்டும். ஆகையால், நீ புறப்படு விரைந்து.


அடே, சம்புவராயா! கோட்டை கதவை திற! இல்லையென்றால் கதவை உடைத்துவிடுவோம். (மலையமான்)
கரிகாலர் எப்படி மரணமடைந்தார் என்று அவர்கள் கேட்டால்...?
வேறு என்ன சொல்வது! வாணர் குலத்தை சேர்ந்த வந்தியத்தேவன் கரிகாலரை கொலை செய்துவிட்டான் என்று கூறு.


கந்தமாறா! தாமதிக்க நேரமில்லை. நம் வம்சம் தழைக்க நீ ஒருவனாவது உயிரோடு இருக்க வேண்டும். சுரங்க வழி தெரியும் அல்லவா!


வீரர்களே! கோட்டை கதவை தகர்த்து எறியுங்கள்.
பெண்கள், குழந்தைகள் அனைவரும் அரண்மனையை விட்டு வெளியேற தயாராகிறார்கள். சம்புவரையர் தனது உறைவாளை உருவிக்கொண்டு கம்பீரமாக நிலா முற்றத்தில் மலையமானின் வருகைக்காக காத்திருக்கிறார்.
அரசே! ஆபத்து. மலையமானின் படை நாலாபுறமும் நம்மை சூழ்ந்து கொண்டது. இன்னும் சற்று நேரத்தில் கோட்டைக் கதவை தகர்த்து விடுவார்கள்.
பெண்களும் குழந்தைகளும் இந்த கோட்டையை விட்டு ரகசிய வழியாக வெளியேறும் வரை சமாளியுங்கள்.


வரட்டும் அந்த கிழவன். அப்படி என்னதான் செய்துவிடுவான்!
மலையமானின் படை கோட்டை கதவை இடித்து தகர்த்தெறிந்து உள்ளே நுழைகிறது.
ஆ...
ஆ...


எங்கே என் பேரன் ஆதித்த கரிகாலன்? எங்கே பட்டத்து இளவரசன்? அடே சம்புவரையா! ஆதித்த கரிகாலனை உடனே கொண்டு வந்து எங்களிடம் ஒப்படைத்து விடு! இல்லாவிட்டால் உன் குலத்தையே எரித்து சாம்பலாக்கி விடுவேன்.


கரிகாலரின் உடல் தீயில் எரிந்து அழிந்துவிடாமல் இருக்க, அவருடைய உடலை தனி ஒருவனாக தூக்கி சுமந்தபடி வருகிறான் வந்தியத்தேவன்.
அந்த பாதகி, கரிகாலரை தன் கையினால் கொல்லமாட்டேன் என்று வாக்களித்தாளே?!


இப்போது பழி நம்மேல் அல்லவா வந்து விழுந்துவிட்டது.
கரிகாலரின் உடலை அப்படியே விட்டு, விட்டு நாம் மட்டும் தப்பி செல்லவும் மனம் வரவில்லை. அப்படியே தப்பி சென்றாலும் கரிகாலரை கொலை செய்தது நான்தான் என்று சொல்ல, கதை கட்டுபவர்களுக்கு வசதியாக போய்விடும். எது எப்படியானாலும், கரிகாலர் நம்மேல் வைத்திருந்த நம்பிக்கைக்கு கரிகாலரின் இறந்த உடலையாவது அவர்களின் தாய் தந்தையிடம் ஒப்படைத்து விடுவோம். நடப்பது நடக்கட்டும்.!


வருவது வந்தியத்தேவன் போல் அல்லவா இருக்கிறது. யாரது உடலையோ சுமந்தபடி வருகிறானே இந்த மடையன்!
அரசே! என்னால் கரிகாலரின் உயிரற்ற உடலைதான் தீக்கிரையாகாமல் காப்பாற்ற முடிந்தது.
என்று மலையமானிடம் கூறிவிட்டு அங்கேயே மயங்கி விழுகிறான்.


மயங்கி விழுந்த வந்தியத்தேவனின் கையில் இருந்த திருகு கத்தியை
எடுத்து பத்திரப்படுத்தி வைத்துக் கொள்கிறான் பார்த்திபேந்திரன்.
இவன் இந்த கத்தியை பயன்படுத்தித்தான் கரிகாலரை கொன்றிருக்க வேண்டும்.
ஆ! எனக்கு ஏன் இந்த கொடுமை? சாக வேண்டிய வயதில் நான் இருந்து கொண்டு என் பேரனை பலி கொடுத்துவிட்டேனே! (மலையமான்)
நான் எவ்வளவு தடுத்தும் கேளாமல் இந்த பாவியின் வீட்டிற்கு வந்தாயே. பாட்டா! நான் எதிரிகளின் வீட்டிற்கா செல்கிறேன்? என் தந்தையின் ஆத்ம நண்பர்கள் இருக்கும் இடத்திற்கு அல்லவா செல்கிறேன் என்று கூறிவிட்டு வந்தாயே! இந்த பாவிகள் உன்னை சதி செய்து கொன்று விட்டார்களே. என் கண்ணே! உன் தாய்க்கு நான் என்னடா பதில் சொல்லுவேன்.


அடே சம்புவரையா!
எத்தனை பேரடா என்
பேரன் மேல் ஏவிவிட்டாய்!
பார்த்திபேந்திரா! இந்த
கிழவனுக்கு பைத்தியம்
ஏதாவது பிடித்திருக்கா
என்ன? வீட்டுக்கு வந்த
விருந்தாளியை கொல்கிற
வம்சத்திலா நாங்க
வந்திருக்கோம்?
கிழவன் கேட்பதிலேயும்
நியாயம் இருக்கத்தானே
செய்கிறது. கரிகாலர் தங்கள்
அரண்மனையில்தானே
இறந்தார். (பார்த்தி)
பார்த்திபேந்திரா!
இந்த பாதகனை
கைது செய்.
வீரர்களே! இந்த கடம்பூர்
கோட்டையை எரித்து
சாம்பல் ஆக்குங்கள்.


மலையமான் அப்படி கூறியதுதான் தாமதம், மலையமானின் படை கடம்பூர் கோட்டைக்குள் புகுந்து கோட்டையை இடித்து, எரித்து சாம்பலாக்குகிறது.




மலையமான் தனது பேரன் கரிகாலனின் காலடியில் அமர்ந்தபடி, கடம்பூரிலிருந்து தஞ்சைக்கு தனது பேரனின் உடலை ரதத்தில் ஊர்வலமாக கொண்டு வருகிறார். அந்த மாவீரனின் உடலுக்கு சோழநாட்டு மக்கள் வழியெங்கிலும் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறார்கள்.
இறந்த பின்னும் ஆதித்த கரிகாலரின் முகத்தில் பொதிந்திருக்கும் வீரக்களை கண்டு ஆச்சரியமுற்று அழுது புலம்பியபடி வருகிறார் மலையமான்.
கோழைகள்! மறைந்திருந்து கொன்ற கோழைகள்!
மாவீரனுக்கு மரியாதை செலுத்தும் விதமாக ரதம் செல்வதற்கு இரு கரையிலும் மக்கள் நின்று கை கூப்பி வணங்குகின்றனர். சிலர் அழுதும் புரண்டும் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்துகிறார்கள்.


என் குலத்துக்கு என்னால் இப்படி ஒரு இழுக்கா வந்து சேர வேண்டும்!
எவ்வளவு முயற்சித்தும் ஆதித்த கரிகாலரை காப்பாற்ற முடியாமல் போயிற்றே!
ஆடி பதினெட்டு அன்று கடம்பூர் இளவரசர் கந்தமாறனின் பேரைச் சொல்லி கோட்டைக்குள் நுழைந்தவனாயிற்றே இவன்!
ஆதித்த கரிகாலருக்கு மிக்காரும் இல்லை, ஒப்பாரும் இல்லை என்றல்லவா எண்ணி இறுமாந்திருந்தோமே!
இப்படி மக்கள் கரிகாலரின் வீரத்தை போற்றியபடி அழுதுபுலம்புகிறார்கள்.



இளைய பிராட்டி குந்தவையின் அரண்மனை.
தலைநகர் தஞ்சையில் பட்டத்து இளவரசர் கரிகாலருக்கு ஈமச் சடங்குகள் நடைபெறுகின்றன. அதில் லட்சோப லட்ச மக்கள் கலந்து கொள்கின்றனர். சிறிது நாட்களுக்கு பிறகு, கரிகாலர் எழுதிய மடலை மணிமேகலை கொண்டு வந்து இளைய பிராட்டியிடம் கொடுக்கிறாள்.
என் அருமை சகோதரியார்! சக்கரவர்த்தி திருமகளார்! இளைய பிராட்டியார் குந்தவை தேவிக்கு....



என் அருமை சகோதரியார்! சக்கரவர்த்தி திருமகளார்! இளைய பிராட்டியார் குந்தவை தேவிக்கு ஆதித்த கரிகாலன் எழுதுவது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கொடிய பாவம் செய்தேன். சரணாகதி அடைந்த பகைவனைக் கொன்றேன். அவனும் அவனுக்காக உயிர் பிச்சை கேட்டவளும் என்னை வருத்திக் கொண்டிருக்கிறார்கள். என்னை நிம்மதியாக தூங்க விடுவதில்லை.

இன்று அதிகாலையில் தூக்கமில்லாமல் வெளியே வந்த போது, தூமகேது விழுந்து மறைவதைக் கண்டேன். என் உடம்பிலிருந்து ஏதோ அச்சமயம் போய்விட்டது. இப்போது இருப்பது வெறும் கூடு மாத்திரமே. சகோதரி! இந்த துர்நிமித்தம் என்னோடு போகட்டும். நம் அருமை தந்தைக்கும், அருள்மொழிக்கும் ஒன்றும் நேராமல் ஏகாம்பரநாதர் காப்பாற்றட்டும்.

இங்கே எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால். அதற்கு என் விதியும் என் பிடிவாதமும்தான் பொறுப்பே தவிர வந்தியத்தேவன் பொறுப்பு அல்ல. நீ சொல்லி அனுப்பியபடி அவன் என்னை இந்த கடம்பூர் மாளிகைக்கு வராமல் தடுக்க எவ்வளவோ முயன்றான்.

படம் எடுத்து ஆடும் நாக சர்ப்பத்தின் மோகன சக்தியினால் கவரப்பட்ட சிறிய பிராணிகள், தாங்களே வலிய சென்று அந்த சர்ப்பத்திற்கு இரையாகி மடியும்.

அம்மாதிரியே நானும் நந்தினியிடம் போகிறேன். அவள் நம் சகோதரி என்று எனக்கு எச்சரிக்கை அனுப்பியிருக்கிறாய். அதை என்னால் நம்ப முடியவில்லை. ஆயினும் அவள் விஷயமான மர்மம் ஏதோ ஒன்று இருக்கிறது. அதை அறிந்து கொள்வதற்காகவே போகிறேன். எப்படியும் இன்று உண்மையை அறிந்து கொள்வேன்.

என் விதி என்ன ஆனாலும் வந்தியத்தேவன் பேரில் குற்றம் யாதுமில்லை. அவன் உன் கட்டளையைச் சரிவர நிறைவேற்றி வருகிறான்.


ஓலையை படிக்கும் போது குந்தவையின் கண்களில் கண்ணீர் ததும்புகிறது.


அந்த மாயமோகினி நந்தினியின் வலையில் கந்தமாறனும், பார்த்திபேந்திரனும் அடியோடு விழுந்து விட்டார்கள். அப்படி விழாமல் தப்பிப் பிழைத்தவன் வந்தியத்தேவன் ஒருவன்தான்.
அவனுக்கு என்ன பரிசு கொடுப்பது என்று எனக்குத் தெரியவில்லை. இந்த வீட்டில் மிகச் சூடிகையான பெண் ஒருத்தி இருக்கிறாள். என் உடன் பிறந்த சகோதரியைப் போல் அவள் பேரில் எனக்கு பிரியம் உண்டாகிவிட்டது. மணிமேகலையை வந்தியத்தேவனுக்கு திருமணம் செய்வித்தால் அவனுக்கு நல்ல பரிசாக இருக்கும். ஆனால் சகோதரி உனக்கு இது சம்மதமாக இருக்குமோ என்னமோ தெரியாது. என் அருமைத் தங்காய்! இந்த ஓலையை அந்த பெண்ணிடம்தான் ஒப்புவிக்கப் போகிறேன்.
நல்ல வேளையாக அவளுக்குப் படிக்க தெரியாது. அவளை குறித்து உன் விருப்பம் எப்படியோ அப்படிச் செய். நம் குடும்பத்தில் நீயே மிகச் சிறந்த அறிவாளி. உன் வார்த்தையை நான் தட்டி நடந்தேன். அதன் பலனை அனுபவிக்கப் போகிறேன். தம்பி அருள்மொழியாவது உன் யோசனைப்படி நடந்து சோழ சாம்ராஜ்யத்தை மகோந்நத நிலைக்கு கொண்டு வருவானாக.


அக்கா! அந்த மடலை இப்படிக் கொடு. (அருள்)
இளவரசர் அந்த மடலை படிக்கிறார். படித்துவிட்டு அழுது கொண்டிருக்கும் மணிமேகலையை பார்த்து...
பெண்ணே! இந்த ஓலை உன்னிடம் எப்படி வந்தது?
ஐயா! இளவரசரே என்னிடம் கொடுத்தார். அவரைப் பற்றி நந்தினி என்னவெல்லாமோ தவறாகச் சொல்லியிருந்தாள். அவர் எனக்குத்தான் காதல் ஓலை எழுதியிருக்கிறார் என்று முதலில் நினைத்துக் கொண்டேன். அதனால் இதை தீயில் போட்டுப் பொசுக்கிவிடலாம் என்று எண்ணினேன்.


பிறகு என்னதான் எழுதியிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள என் தோழி சந்திரமதியிடம் கொடுத்து படித்து காட்டச் சொன்னேன். ஆனால், என்னை தம் உடன் பிறந்த சகோதரி என்று எழுதியிருக்கும் என் சகோதரனை இந்த கையினாலேயே கொன்றுவிட்டேன்.
என்று கூறியபடி கதறி, கதறி அழுகிறாள்.
படுகொலை செய்த இந்த பாவியை சிறையில் அடைத்துவிட்டு, நிரபராதியான வந்தியத்தேவரை விடுதலை செய்யுங்கள்.
பெண்ணே! இந்த பேச்சை இதோடு விட்டுவிடு. (குந்தவை)
வீராதி வீரனாகிய ஆதித்த கரிகாலனை ஓர் அபலை பெண் கொன்றாள் என்பதை நான் நம்பினாலும் உலகம் நம்பவே நம்பாது.


நீ இப்படி சொல்வதினால் இறந்து போன என் தமையனுக்கு அபகீர்த்தி உண்டாக்குகிறாய்!
மணிமேகலை கூறியதை கேட்ட அருள்மொழி வர்மன் திகைப்புடன் குந்தவையை பார்த்து
என்ன? என்னுடைய அருமை நண்பர் வந்தியத்தேவர் பாதாள சிறையில் இருக்கிறாரா! எதற்காக? யார் அவரை சிறையில் அடைத்தது?
கரிகாலரை கொன்ற பழி வல்லத்து இளவரசர் மேல் விழுந்திருக்கிறது. காலமும் சூழ்நிலையும் அவருக்கு சாதகமாக இல்லை தம்பி!


அக்கா! நம் தமையனிடம் அவருக்கு எவ்வளவு பக்தி உண்டு என்பதை நான் அறிவேன். கரிகாலரின் மரணத்துக்கு அவரை பொறுப்பாளியாகத் துணிந்தவர் யார்? இது என்ன மூடத்தனம்! அவரை தப்புவிப்பதற்காக இந்த பெண் தன் பேரில் குற்றம் சுமத்திக் கொள்வது நமக்கெல்லாம் ஒரு பாடம் கற்பிப்பது போல் இருக்கிறது. நான் இப்போதே பாதாள சிறைக்கு சென்று வந்தியத்தேவரை விடுவித்துக் கொண்டு வருகிறேன்.


என்று கூறிவிட்டு புறப்படுகிறார். அவரை பெரிய வேளாரும், மலையமானும் தடுக்கின்றனர்.
தாங்கள் எந்த அதிகாரத்தை கொண்டு பாதாள சிறையில் உள்ளவனை விடுதலை செய்யப் போகிறீர்கள்?
தாங்கள் எந்த அதிகாரத்தை கொண்டு என்னை தடை செய்கிறீர்கள்?
இளவரசே! இன்று நான் இந்த கோட்டையின் தளபதி. ஆகையால் பாதாள சிறைக்கு நான்தான் காவலன்.


சேனாதிபதி! அப்படியென்றால் எனக்கு எந்த அதிகாரமும் இல்லையா? நான் யார் என்பதை மறந்துவிட்டீர்களா?
ஐயா! தாங்கள் சக்கரவர்த்தியின் திருக்குமாரர் பொன்னியின் செல்வர். இருப்பினும் தாங்கள் சோழ நாட்டின் பட்டத்து இளவரசனை கொன்றதாக குற்றஞ்சாட்டி, சிறையில் அடைக்கப்பட்டவனை விடுதலை செய்யும் அதிகாரம் தங்களுக்கு கிடையாது.
குழந்தாய்! வேளார் கூறியது உண்மை. வயது சென்ற இந்த கிழவர்கள் சொல்வதை கேள்.


ஏற்கனவே யாரோ சில பாதகர்கள் ஒரு பொய்யான வதந்தியை கிளப்பி விட்டிருக்கிறார்கள். அதை சொல்லவும் வாய் கூசுகிறது.
பொன்னியின் செல்வர், தாம் இராஜ்யம் ஆளும் ஆசையால் வந்தியத்தேவனை அனுப்பி கரிகாலனைக் கொன்றார் என்று... (வேளார்)
தெய்வமே! இது என்ன பயங்கரமான அபவாதம். (குந்தவை)


இத்தகைய கொடூரமான வதந்தியை பரப்புவது யார்?
வடவாற்றில் நம் வீரர்கள் வதந்தி பரப்பியவர்களை பிடித்து முழுக்கி முழுக்கி எடுத்து உண்மையை கேட்டதில், சம்புவரையர் மகன் கந்தமாறன்தான் இவ்விதம் சொல்லி அனுப்பியதாக கூறினார்கள்.
தாயே! இளவரசர் மட்டும் பட்டத்தை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தால் ஒரு தொல்லையும் இல்லை.


அக்கா எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நாம் எல்லோருமே பாதாள சிறைக்கு போய், வல்லத்து இளவரசரை சந்தித்தால் அதிலிருந்து நமக்கு ஏதாவது உண்மை புலப்படலாம். கரிகாலர் இறந்த அன்றிரவு அதே இடத்தில் அவருடன் இருந்தவர் வல்லத்து இளவரசர், உடன் கடம்பூர் இளவரசியையும் அழைத்துச் செல்வது நல்லது.


ஐயா சேனாதிபதி! தங்கள் குமாரியின் யோசனையைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்.
என் குமாரியும் புத்திசாலித்தனமாக பேசக் கூடும் என்று தெரிகிறது!


பொன்னார் மேனியனே! புலித் தோலை அரைக்கசைத்து
அவன் பாடும் போது இனிமையாக இருந்தது! இவன் பாடுவது நாராசமாக அல்லவா இருக்கிறது.
அப்பா! பைத்தியக்காரா உன் பாட்டை கொஞ்சம் நிறுத்து.
ஏன் என்னுடைய பாட்டு உனக்கு பிடிக்கவில்லையா?


பிடிக்காமல் என்ன? சரி! இந்த பாட்டை யார் உனக்கு சொல்லிக் கொடுத்தது?
நீ இப்போது இருக்கும் அறையில் ஒரு வாலிபன் இருந்தான் அவன்தான்.
அந்த வாலிபனின் பெயர் என்னவென்று உனக்கு தெரியுமா?
தெரியாமல் என்ன? அவன் பெயர் சேந்தன் அமுதன்.


உண்மையில் அவன் யார் என்பது மட்டும் உலகத்துக்குத் தெரிந்தால்...
உலகமே தலைகீழாகப் போய்விடும்!
உலகம் தலைகீழானால் என்ன? நமக்கு இந்த பாதாளச் சிறையிலிருந்து விடுதலை கிடைக்குமா?
நிச்சயமாக கிடைக்கும்.
அப்படியென்றால் அவன் யார் என்றுதான் சொல்லேன்.
அவ்வளவு சுலபமாக உன்னிடம் சொல்லிவிடுவேனா? அதை சோழ சக்கரவர்த்தியின் காதிலே மட்டும்தான் சொல்லுவேன்.
(பைத்தியக்காரன்)


ஆமாம்! எதற்காக உன்னை எல்லோரும் பைத்தியக்காரன் என்று சொல்லுகிறார்கள்?
அதுவா, ஈழத்தில் பாண்டிய வம்சத்து மணி மகுடமும், தேவேந்திரன் அளித்த இரத்தின ஹாரமும் இருக்கும் இடம் எனக்கு தெரியும். என்னை விடுதலை செய்தால் அவை இருக்குமிடம் சொல்வேன் என்று இங்கு வந்தவர்களிடமெல்லாம் நான் சொல்வதுண்டு. அதற்காக என்னை பைத்தியக்காரன் என்று சொல்லுகிறார்கள்.
அப்போது அங்கு பினகாபாணி வருகிறான். பினகாபாணி வந்தியத்தேவனை கண்டதும்...


ஏனப்பா, வீராதி வீரா! உன் காதல் லீலைகள் எல்லாம் எப்படி போய் கொண்டிருக்கிறது?
இந்த துரோகி கிட்ட நமக்கென்ன பேச்சு?
வந்தியத்தேவன் முகத்தை கோபமாக வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறான்.
என்னால் உனக்கு விடுதலை வாங்கி தர முடியும். அதற்கு அந்த பாண்டிய நாட்டு மணி மகுடமும், இரத்தின ஹாரமும் எங்கிருக்கிறது என்பதை மட்டும் என்னிடம் சொல்ல வேண்டும்.


நிச்சயமாக சொல்கிறேன். உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன். ஆனால், அதற்கு முதலில் எனக்கு விடுதலை உத்தரவு வாங்கி வா. நிச்சயமாக உன்னை கையோடு அந்த இடத்திற்கே அழைத்துச் செல்கிறேன்.
என்னிடம் உனக்கு நம்பிக்கை இல்லையா? என்னை யார் என்று நினைத்தாய்? முதன் மந்திரியிடம் எனக்கு இருக்கும் செல்வாக்கை நீ அறியமாட்டாய்! இதோ இப்போதே உனக்கான விடுதலை உத்திரவை வாங்கி வருகிறேன்.
உனக்கு நாற்சந்தி மூலையில் கழுமரத்தின் மேலேதான் விடுதலை!


பார்க்க பைத்தியக்காரனை போல் தெரியும் இவன் யார்? இவன் பெயர் கருத்திருமன். இவன் சோழ குலத்தின் அரசியலையே புரட்டிப் போடக் கூடிய முக்கிய ரகசியங்களை அறிந்தவன். ஊமை பெண் மந்தாகினியை கடலில் இருந்து காப்பாற்றியவன். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கை போரை முடிவுக்கு கொண்டு வரக் கூடிய ரகசியமான பாண்டிய நாட்டு புராதன மணி மகுடமும், தேவேந்திரன் பாண்டிய மன்னனுக்கு அளித்ததாக கூறும் இரத்தின ஹாரமும் எங்கிருக்கிறது என்று அறிந்தவன். நந்தினியின் உண்மையான தந்தை யார்? நந்தினியின் உடன் பிறந்த சகோதரன் யார்? என்பதையும் அறிந்தவன்.
இவன் மந்தாகினியின் தங்கை வாணி அம்மையை மணக்க விரும்புகிறான். இவன் பாண்டிய நாட்டுக்கு ஒரு முக்கிய காரணமாக போய்விட்டு வரும்போது... வாணி அம்மை குழந்தை ஒன்றை இறந்துவிட்டதாக எண்ணி புதைக்க முற்படுகிறாள். அந்நேரத்தில் அங்கு வந்த கருத்திருமன் குழந்தை உயிரோடு இருப்பதை பார்த்து பதறியடித்து அக்குழந்தையை காப்பாற்றுகிறான். அக்குழந்தைதான் சேந்தன் அமுதன். வாணி அம்மை வீட்டில் வளர்பவன்.
கருத்திருமன் செம்பியன் மாதேவியின் அரண்மனையை சுற்றி வருவதை கண்ட சின்ன பழுவேட்டரையர் சந்தேகத்தின் பேரில் அவனை சிறையில் அடைக்கிறார்.


அநிருத்தரின் மாளிகை.
அந்த பைத்தியக்காரனை ரகசியமாக என்னிடம் அழைத்து வர வேண்டும். புரிந்ததா?
பைத்தியக்காரனின் விடுதலை உத்திரவை முதன் மந்திரியிடம் பெற்றுக் கொள்கிறான் பினகாபாணி.


சிறைச்சாலை காவலனிடம் விடுதலை உத்தரவை காண்பிக்கிறான்.
காவலனிடமிருந்து பைத்தியக்காரன் இருக்கும் அறைக்கான சாவியை பெற்றுக் கொண்டு வந்து, பைத்தியக்காரனை விடுதலை செய்கிறான்.
கழுமரத்தின் மேலா எனக்கு விடுதலை? இதோ வரேன்!


நீ முதன் மந்திரி வீட்டுக்கு போகப் போகிறாயா? இல்லை என்னுடன் வருகிறாயா?
முதன் மந்திரி வீட்டுக்கு போனால் மீண்டும் பாதாள சிறைதான். (பைத்திய)
அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்!
ஆ..!
ஏப்பா, பைத்தியக்காரா! தஞ்சைக்குள் போகும்போது குறிப்பிட்ட இடம் வந்ததும் நான் உன் தோளை தொடுவேன். உடனே நீ என்னை பின் தொடர்ந்து ஓடி வர வேண்டும். ஞாபகத்தில் வைத்துக் கொள்.


நீங்கள்தானே முதன் மந்திரியின் ஆட்கள்?
என்ன தம்பி! அதற்குள்ளேயே எங்களை மறந்துவிட்டாயா?
சரி வாருங்கள் போகலாம்.
அவர்களை அழைத்துக் கொண்டு அநிருத்தரின் அரண்மனை நோக்கி செல்கின்றனர் காவலர்கள்.
தப்பி செல்வதற்கான நல்ல சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தபடியே வருகிறான் வந்தியத்தேவன்.


இவர்கள் வரும் நேரம் அவ்வழியாக அரச குடும்பத்தினர்கள் செல்கின்றனர்.
அப்போது வந்தியத்தேவன், தான் ஏற்கனவே கூறி வைத்தபடி பைத்தியக்காரனின் தோளைத் தொட்டுவிட்டு ஓடுகிறான்.
இந்த காவலர்கள் செய்வதை பார்த்தால் வேண்டுமென்றே தப்பிக்கவிட்டா மாதிரி அல்லவா தெரிகிறது! அதே சமயத்தில் காவலர்களில் ஒருவனை பார்த்தால் ஆழ்வார்க்கடியானோ என்று சந்தேகம் வருகிறது.
பிடியுங்கள்! பிடியுங்கள்!!


வந்தியத்தேவனும், பைத்தியக்காரனும் காவலர்களிடமிருந்து தப்பி நிலவறைக்கு வந்து சேருகிறார்கள். வந்தியத்தேவன் ஏற்கனவே ஒருமுறை இவ்வழியாக தப்பி சென்றிருக்கிறான் அல்லவா!
இலங்கையில் இருப்பதாக நீ கூறும் ரோஹண நாட்டு மலைக் குகையில் இவ்வளவு செல்வங்கள் இருக்குமா?


இதைவிட நூறு மடங்கு செல்வம் உண்டு!


வடவாற்றை எப்படி கடப்பது?


அதோ! அந்த மரத்தின் அடியில் படகு.
இவர்கள் தப்பி இவ்வழியாகத்தான் வர வேண்டும் என்று முன் கூட்டியே அங்கு படகுடன் வந்து இவர்களுக்காக காத்திருக்கிறான் ஆழ்வார்க்கடியான். (மாறுவேடமிட்டு)


சேந்தன் அமுதனின் வீடு.
அமுதா! உன் மனதில் என்ன கவலை என்பதைச் சொன்னால்தான் பாடுவேன். (பூங்குழலி)
உண்மையை சொல்லட்டுமா? (சேந்தன்)


என் உடம்பு குணமாகிவிட்டால் நீ என்னை விட்டு போய் விடுவாய் அல்லவா? அதை எண்ணித்தான் கவலைப்படுகிறேன்.
அமுதா! உன் அன்பை எண்ணி என் நெஞ்சு உருகுகிறது. உன்னை விட்டு போகவும் மனம் வரவில்லை, போகாதிருக்கவும் முடியவில்லை.
புவி ஆளும் மன்னனை மணந்து அவனுடன் சிங்காதனத்தில் அமர வேண்டும் என்பது என் மனோரதம். அது முடியாவிட்டால் கன்னி பெண்ணாகவே இருந்து காலங் கழிப்பதாக சபதம் செய்திருக்கிறேன்.


உனக்கு அந்த ஆசை ஏற்பட்டது என்னுடைய பாக்கியக் குறைவினால்தான்.
உன்னை மணக்கும் பாக்கியம் எனக்கில்லை அவ்வளவுதான்.
அப்படி ஏன் நீ நிராசை அடைய வேண்டும். அரச குலத்தில் பிறந்தவர்தான் அரசர்களாயிருக்க வேண்டும் என்று விதி ஒன்றும் இல்லை. உன்னை போல் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்கள் தங்களுடைய வீர பராக்கிரமச் செயல்களினால் இராஜ்யங்களை ஸ்தாபித்து சிங்காதனம் ஏறியிருக்கிறார்கள்.
பூங்குழலி! நான் அத்தகைய காரியங்களுக்கு பிறக்கவில்லை. என் மனம் கத்தி எடுத்து போர் செய்வதில் ஈடுபடவில்லை. சிவ வழிபாட்டில் காலம் கழிக்க என் மனம் விரும்புகிறது. பூங்குழலி உன்னை இங்கே தாமதிக்க சொல்வதில் பயனில்லை. நீ போய் விடு! என் உடம்பு துணையாகுவதற்கு காத்திராதே!


ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனுக்கு உதவி செய்ய வந்தானோ அல்லது உளவு அறிய வந்தானோ? யாருக்கு தெரியும். அங்கே காட்டில் அவனை தாக்கி படகில் கட்டிப்போட்டு விட்டு கருத்திருமனும், வந்தியத்தேவனும் சேந்தன் அமுதனின் வீடு நோக்கி வருகிறார்கள்.
ஆழ்வார்க்கடியான் இவர்கள் தப்பி செல்ல வேண்டும் என்பதற்காக, சேந்தன் அமுதனின் வீட்டின் பின்னால் குதிரைகள் கட்டிப்போட்டிருப்பதை குறிப்பாக கூறுகிறான்.
முக்கியமாக கருத்திருமனிடம் அவன் தெரிந்து கொள்ள வேண்டிய ரகசியத்தை அறிந்து கொண்டான் வந்தியத்தேவன். இளவரசர் கரிகாலரை கொன்றிருக்க மாட்டான் என்ற நம்பிக்கையில் அவனுக்கு உதவி செய்கிறான்.
பல்லக்கும், பரிவாரமும் வருவதை கண்டதும் இருவரும் வெவ்வேறு திசையில் சென்று மறைந்து கொள்கிறார்கள்.


பல்லக்கை முன்னதாக விட்டு விட்டு, குதிரையிலிருந்து விழுந்து அடிபட்டிருக்கும் சேந்தன் அமுதனை காண அன்னை செம்பியன் மாதேவியும், உடன் மதுராந்தகரும் வருகிறார்கள்.
அமுதா! இன்னொரு தடவை சொல்கிறேன் கேள். நீ என் வழிக்கு வர மறுப்பதால், நான் உன்னுடைய வழிக்கு வர தீர்மானித்து விட்டேன்... (பூங்)
செம்பியன் மாதேவி கதவை தட்ட வருகிறார். உள்ளிருந்து பேச்சுக்குரல் வர, கதவை தட்டும் எண்ணத்தை விடுகிறார்.
நான் உன்னையே மணந்து கொள்கிறேன். (பூங்)


அப்போது காவலன் கதவை நெருங்க அவனை கை அசைவில் வேண்டாம் என்று கூறுகிறார் செம்பியன் மாதேவி. பிறகு சிரித்த முகத்துடன் அவர்கள் பேசிக் கொண்டிருப்பதை கேட்டுக் கொண்டிருந்தார்.
ஈழ நாட்டின் ஓரத்தில் இனிய தீவுகள் எத்தனையோ இருக்கின்றன. (பூங்)
அந்த தீவுகளில் ஒன்றுக்கு செல்வோம். அங்கே நீ ராஜாவாகவும், நான் ராணியாகவும் இருப்போம். அந்த ராஜ்யத்துக்கு யாரும் போட்டிக்கு வர மாட்டார்கள்.
இதையெல்லாம் நீ உண்மையாகத்தானே சொல்கிறாய்? பிறகு பெரிய ஏமாற்றத்துக்கு என்னை உள்ளாக்குவதற்காக சொல்லவில்லையே? அப்படியென்றால் நாம் இப்போதே கோடிக்கரைக்கு புறப்படலாம்.
உனக்கு உடம்பு சரியான உடனே புறப்படலாம்.


செம்பியன் மாதேவியுடன் வந்த சேவகன் குடிசையின் கதவை தட்டுகிறான்.
'டப்..
'டப்..
'டப்..
பூங்குழலி கதவை திறக்க, வெளியில் செம்பியன் மாதேவியும், அவருக்கு பின்னால் மதுராந்தகத் தேவரும் மற்றும் உடன் வந்த காவலர்களும் நிற்கிறார்கள்.
தாயே! வர வேண்டும், வர வேண்டும்!
உன் அத்தை வாணி எங்கே?
என்று கேட்டபடியே குடிசைக்குள் பிரவேசிக்கிறார்.


மழவரையன் மகளாகிய முதிய எம்பெருமாட்டியை கண்டதும் சேந்தன் அமுதன் எழுந்து நிற்கிறான்.
அப்போது வாணி அம்மை அங்கு வருகிறாள்.
தாயே! நல்ல சமயத்தில் வந்தீர்கள்.
முதன் முதலில், சந்தோசமான செய்தியை தங்களிடம் தெரிவித்து ஆசி பெறும் பாக்கியம் எங்களுக்கு கிடைத்திருக்கிறது.
இத்தனை காலம் கழித்து பூங்குழலி மனமிறங்கி என்னை மணம் புரிந்து கொள்ள இசைந்திருக்கிறாள்.


எங்களை தாங்கள் ஆசிர்வதிக்க வேண்டுகிறேன். (சேந்தன்)
குழந்தைகளே! இறைவன் அருளால் உங்கள் இல்வாழ்க்கை இன்பமயமாக இருக்கட்டும்.
என்று செம்பியன் மாதேவி கண்களில் ஆனந்த கண்ணீர் பெருக ஆசி கூறினார்.


பிறகு செம்பியன் மாதேவி குடிசையை விட்டு வெளியே வந்து மதுராந்தகனை அழைத்துக் கொண்டு பல்லக்கை நோக்கி செல்கிறார்.
ஒரு மரத்தடியில் இருவரும் நிற்கின்றனர். யாரும் அருகில் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு மதுராந்தகனிடம், செம்பியன் மாதேவி பேசத் தொடங்குகிறார்.


பார்த்தாயா மதுராந்தகா! என் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மகன் அந்த குடிசையில் வாழ்கிறான். அவன் எட்டு நாள் குழந்தையாக இருந்த போது மூச்சு பேச்சற்று கிடந்ததை பார்த்து இறந்து விட்டதாக எண்ணி அவனை கொண்டு போய் புதைத்து விடச் சொன்னேன்.


இவனை எடுத்து போன வாணி வெகு காலம் திரும்பி வரவே இல்லை. ஐந்து ஆண்டுகள் கழிந்த பிறகு அவளையும், அப்பிள்ளையையும் பார்த்து தெரிந்து கொண்டேன். ஆயினும் நான் உன்னை கைவிடவில்லை. உன்னை என் குழந்தையாக ஏற்றுக் கொண்டேன்.
அவன் என் வயிற்றில் பிறந்த குழந்தை என்பதற்காக அவனை அரண்மனைக்கு வரவழைத்துக் கொள்ளவும் இல்லை. எல்லாம் இறைவனின் திருவிளையாடல்.
இதையெல்லாம் இவர்களுக்கு பின்னால் உள்ள மரத்தின் மறைவிலிருந்து கருத்திருமன் (பைத்தியக்காரன்) கேட்டுக் கொண்டிருக்கிறான்.
குழந்தாய்! ஏன் இப்படியே நின்று விட்டாய்? வா போகலாம். அரண்மனைக்கு போய் நன்றாக யோசித்து நாளைக்கு பதில் சொல்.
மதுராந்தகன் அதையெல்லாம் கேட்டு பேய் அறைந்த மாதிரி விரக்தியாக நின்றான்.


தாயே! யோசிப்பதற்கு இனி என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. தாங்கள் செல்லுங்கள்.
என்னுடைய இடத்தில் அரண்மனையில் வளர்ந்திருக்க வேண்டிய தாங்கள் குமாரனிடம் பேசி விட்டு வருகிறேன்.
அப்படியே செய்! வரும் போது பல்லக்கின் திரைகளை நன்றாக மூடிக் கொண்டு வா.
என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்று விடுகிறார்.
மதுராந்தகன் மீண்டும் குடிசையை நோக்கி செல்கிறான்.


மதுராந்தகனை திடீரென்று பைத்தியக்காரன் இடைமறிக்கிறான். அடுத்த கணம் தனது இடுப்பிலிருந்து கூரிய குத்துவாளை எடுத்து தாக்க முற்படுகிறான் மதுராந்தகன்.
ஐயா! வாளை ஓங்க வேண்டாம். அதை தாங்கள் பகைவர்கள் எதிர்படும் போது உபயோகிப்பதற்கு தீட்டி வையுங்கள்.
ஐயா! உலகத்தில் தாங்களுக்கு யாரும் செய்ய முடியாத உதவியை நான் செய்ய வந்திருக்கிறேன்.
மதுராந்தகன் ஆச்சரியமும், அருவருப்பும் கலந்த ஒரு பார்வை பார்க்கிறான்.
மகாராணி தாங்களிடம் சொன்ன செய்தி எனக்கு முன்பே தெரியும். (கரு)


என்ன தெரியும்? (கோபமாக)
தங்கள் பிறப்பை குறித்த ரகசியம் எனக்கு தெரியும். ஆம்! தங்கள் அந்த மாதரசியின் வயிற்றில் பிறக்கவில்லை என்பதும், கண்டராதித்தர் தங்கள் தந்தை இல்லை என்பதையும் நான் அறிவேன்.
ஆகா! ஒட்டுக் கேட்டு இரகசியத்தை அறிந்து கொண்டாயா?
மகாராணி தங்களிடம், தங்கள் தாய் யார் என்று சொல்லியிருப்பார். ஆனால் தந்தை யார் என்று சொல்லியிருக்க மாட்டார்.
நான்தான் உன் தந்தை என்று உரிமை கொண்டாட போகிறானா? என்று நினைத்து ஆத்திரம் அடைந்த குரலில்,
உனக்கு என் தந்தை யார் என்று தெரியுமா?


ஆம்! தெரியும்.நான், தாங்கள் தந்தையின் ஊழியன்.
பைத்தியக்காரன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு அவனது காதருகில் சென்று ரகசியமாக ஏதோ சொல்கிறான்.
மதுராந்தகன் பைத்தியக்காரனின் தோளை பிடித்து...
நீ கூறியது உண்மைதானா? உண்மையாகவே நான் இராஜ குமாரன்தானா!
தாங்கள் பிறப்பை குறித்த உண்மையை அறிந்த பிறகும் தஞ்சை அரண்மனைக்கு திரும்பி போக விரும்புகிறீர்களா?
தஞ்சை அரண்மனைக்கு போக எனக்கும் விருப்பமில்லைதான். நீ என்ன யோசனை சொல்லுகிறாய்.


மதுராந்தகரும், கருத்திருமனும் பேசிக் கொண்டே ஒரு பக்கம் செல்ல, வந்தியத்தேவனையும், கருத்திருமனையும் தேடி பினகாபாணி வருகிறான்.
குடிசைக்குள் ஒரு பெண்ணின் பேச்சுக்குரல் கேட்கிறது...
பூங்குழலியா...! என்னை வேண்டாம் என்று இவள் கூறுவதற்கு இவன்தான் காரணமா?
அத்தான் சற்று ஓய்வு எடுங்கள். உடம்பு சரியானதும் கோடிக்கரைக்கு புறப்படலாம்.


கோடிக்கரைக்கா போகப் போகிறீர்கள்! இவனை கைலாசத்துக்கு நான் அனுப்புகிறேனா இல்லையா என்று பார்.
என்று எண்ணியபடி சேந்தன் அமுதனுக்கு குறி வைக்கிறான்.
கருத்திருமனை தேடுகிறான் வந்தியத்தேவன்.
இந்த பைத்தியக்காரன் எங்கு போய் தொலைந்தான்.
நம் நண்பன் சேந்தன் அமுதனின் வீட்டின் சன்னல் அருகில் நிற்பது யார்?


வந்தியத்தேவனின் காலடி சத்தம் கேட்டு பினகாபாணி
யாரோ நம்மை பார்த்து விட்டார்கள்.
வருவது யாராக இருந்தால் என்ன? அவர்களை வேலை தீர்த்துவிட வேண்டியதுதான்.
என்று எண்ணி இருட்டில் ஓடிவரும் மனிதன் மீது ஈட்டியை வீசுகிறான்.


ஈட்டி சரியாக வந்தியத்தேவனின் விலாவில் சென்று பாய்கிறது.
ஆ...
அய்யோ! நாம் ஒன்று நினைத்தால் விதி ஒன்று செய்கிறதே...


அவ்வளவு எளிதில் இந்த பினகாபாணியிடமிருந்து நீங்கள் தப்பி செல்ல முடியாது!
ஐயா, சேனாதிபதி! அந்த பைத்தியக்காரனும், இளவரசனை கொன்றவனும் இரண்டு குதிரையில் தப்பி செல்கிறார்கள். குதிரையையும் சில வீரர்களையும் என்னுடன் அனுப்பினால் அவர்களை நிச்சயம் நான் பிடித்துக் கொண்டு வருவேன்.
இந்த மூடனை யார் அனுமதித்தது? இவனை முதலில் இங்கிருந்து வெளியேற்றுங்கள்.
நான் அப்படி என்ன தவறாக கூறிவிட்டேன்! தப்பி செல்லும் குற்றவாளிகளை பிடித்து வருவதாகத்தானே சொன்னேன்.


ஆனால் கந்தமாறன், வந்தியத்தேவனையும், பைத்தியக்காரனையும் பிடித்து வர பினாகபாணியுடன் வருகிறான்.
இதோ நீ கேட்ட குதிரைகள். புறப்படு என்னோடு!


இருவரும் வந்தியத்தேவனை எப்படியாவது பிடித்து விட வேண்டும் என்று தீவிரமாக குதிரையை விரட்டுகிறார்கள்.


இருவரும் வடவாற்று கரையை வந்து அடைகிறார்கள்.
அதோ அவர்கள்! அவர்கள் அந்த கரையை அடைந்துவிட்டால் அவர்களை பின் தொடர்ந்து சென்று பிடிப்பது முடியாத காரியம்.


மணிமேகலை பித்து பிடித்து அலைவதற்கு வந்தியத்தேவன்தான் காரணம் என்று கருதினான் கந்தமாறன். அதனால் சற்றும் தாமதிக்காமல் தனது ஈட்டியை எடுத்து குறி பார்த்து எறிகிறான்.
ஒழிந்தான் வந்தியத்தேவன்.
அந்த இருட்டு வேளையிலும் கந்தமாறனின் குறி தவறாமல் சென்று குதிரைமேல் இருந்தவனின் முதுகில் பாய்கிறது.

சபை கூடியிருக்கிறது. சக்கரவர்த்தி சபா மண்டபத்தில் உள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். அவரின் பக்கத்திலுள்ள ஆசனத்தில் முதன் மந்திரி அநிருத்தரும், மற்றொரு பக்கத்தில் சேந்தன் அமுதனும் இருக்கிறார்கள். மேலும், அங்கு மலையமான், பெரிய வேளார், பெரிய பழுவேட்டரையர், சின்ன பழுவேட்டரையர், பார்த்திபேந்திரன், கந்தமாறன், பொன்னியின் செல்வர் அனைவரும் அவரவர்க்கான ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். சபையில் பெண்கள் எல்லாம் ஒரு குழுவாக ஒரு பகுதியில் மேல் மாடத்திலிருந்து மந்திராலோசனை நடப்பதை பார்க்கிறார்கள்.






மூன்று ஆண்டு காலமாக அந்த வீரத் திருமகனை நம் அரசர் பார்க்கவில்லை.
காஞ்சியில் பொன் மாளிகை கட்டிவிட்டு, தந்தையை அங்கே வந்து தங்கியிருக்க வேண்டும் என்று கரிகாலர் செய்திக்கு மேல் செய்தி விடுத்தார். (அநிருத்தர்)
இங்கிருக்கும் ஒவ்வொருவருமே சோழ குலத்துக்கு உற்ற துணைவர்களாகவும், பரம்பரையாக சோழ குலத்துடன் உறவு பூண்டவர்களாகவும், இந்த பெரிய சோழ சாம்ராஜ்யத்தை தாங்கும் வைரத் தூண்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.


ஆனால், சில காலமாக எக்காரணத்தினாலோ உங்களுக்குள் மன வேற்றுமை ஏற்பட்டுவிட்டது. இரண்டு கட்சியாக பிரிந்து விட்டீர்கள். (அநிருத்தர்)
பிளவுக்கு காரணம், தமக்கு பிறகு அரசுரிமை யாருக்கு என்பது பற்றித்தான் என்பதை மன்னர் அறிந்தார். சிவஞான கண்டராதித்த பெருமானின் திருக்குமாரருக்கே இந்த சோழ சாம்ராஜ்யத்தை உரிமையாக்க எண்ணியிருந்தார். அதற்கு ஆதித்த கரிகாலரையும் ஒப்புக் கொள்ள செய்யலாம் என்று நம்பியிருந்தார். அதற்காகவே கரிகாலரையும் இங்கு வரும்படிச் சொல்லி செய்தி அனுப்பிக் கொண்டிருந்தார். உங்கள் எல்லோருடனும் கலந்து பேசி சமரசமாக தீர்த்து வைக்க விரும்பினார். அதற்கிடையில் எதிர்பாராத துயர சம்பவம் நிகழ்ந்துவிட்டது. வீரப் பெருமக்களே! நடந்தது நடந்து விட்டது. போனதைப் பற்றி கிளறிக் கொண்டிருக்க வேண்டாம் என்று சக்கரவர்த்தி கருதுகிறார்.


கரிகாலரின் மரணம் எப்படி நேர்ந்தது என்பதை கண்டறியப் போகிறோமா? இல்லையா? அதை முதலில் உறுதிபடுத்துங்கள்.
அது எப்படி முறையாகும்? சோழ குலத்தின் நீதி பரிபாலனம் உலகப் பிரசித்தமானது.
அப்படியிருக்க பட்டத்து இளவரசரின் அகால மரணத்தை எவ்வாறு விசாரிக்காமல் விடுவது? (வேளார்)
கொடும்பாளூர் மாமா! கேளுங்கள், என் மகன் அகால மரணம் அடைந்ததில் என்னை விடத் துயரம் வேறு யாருக்காவது இருக்க முடியுமா? நானே விசாரணை வேண்டாம் என்கிறேன். ஏனென்றால், இங்குள்ள யாரும் அதற்கு பொறுப்பாளி அல்ல என்று நிச்சயமாக அறிவேன். நான் செய்த பாவத்தின் பயனாக என் மகனை பறிகொடுத்தேன். வேறு காரணங்கள் தேட வேண்டாம்.


பிரபு! தாங்கள் இப்படிச் சொல்வதினால் குற்றத்துக்கு பொறுப்பாளியான யாரையோ காப்பாற்ற விரும்புகிறீர்கள் என்று ஏற்படும்.


அதனால் உண்மை குற்றவாளி யார் என்று கண்டுபிடித்து அதற்கு உரிய தண்டனையை அவர்களுக்கு கொடுப்பதுதான் நல்லது.


முதன்மந்திரி பாதாளச்
சிறையிலிருந்து தப்பி
ஓடியவனை, பிடித்துக் கொண்டு
வந்து ஒப்புவிக்கும் பொறுப்பை
ஏற்றுக் கொண்டுள்ளார்.
கந்தமாறன் அப்போது அந்த சபா மண்டபத்தினுள்
நுழைகிறான். எல்லோரும் அவனை பார்க்கிறார்கள்.
பெரியோர்களே! இதை
பற்றி ஏன் இவ்வளவு
யோசனையும், வாத
பிரதிவாதமும்?


நான் கூறுவது அதிக பிரசங்கமாக இருந்தால் மன்னித்துவிடுங்கள். குற்றவாளி தண்டிக்கப்பட்டான்.
இளவரசர் கரிகாலனைக் கொன்றவனும், என் சகோதரியின் வாழ்க்கையை பாழாக்கி, அவளை பைத்தியமாக செய்தவனுமான அந்த பாதகனை நானே என் கை வேலால் கொன்றுவிட்டேன். (கந்த)
மூடன்! நீர் மூடன்! சம்புவரையருக்கு இப்படி ஒரு பிள்ளை வந்து பிறந்தானே?! (பழு)
இளஞ்சம்புவரையரே! நீரே உம் கண்ணால் பார்த்தீரா? வந்தியத்தேவன் தான் இளவரசர் கரிகாலரை கொன்றதாக எப்படி அவ்வளவு தீர்க்கமாக சொல்கிறீர்?
ஐயா! *கை புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? இளவரசர் இறந்து கிடந்த இடத்தில் அவன் இருந்தான்.
*பழமொழி


அது மட்டும் இல்லாமல், அவன் முழியை பார்த்தாலே குற்றவாளி என்று எழுதி ஒட்டியிருந்தது.
அதனால் நீரே நீதிபதியாக இருந்து, குற்றவாளிக்கு தண்டனை வழங்கிவிட்டு வந்திருக்கிறீர்?
சரி! நீ ஏன் இறந்து போனவனுடைய உடலை கொண்டு வரவில்லை?
தாங்கள் இப்படி சந்தேகிப்பீர் என்று தெரிந்திருந்தால், வடவாற்று வெள்ளத்தில் இன்னும் கொஞ்ச தூரம் தேடிப் போயிருப்பேன்.
தம்பி! வந்தியத்தேவனை தேடிப்பிடிப்பதில் உனக்கு என்ன அவ்வளவு சிரத்தை?


இதை கேட்கவும் வேண்டுமா? என்னுடைய வீட்டில் அந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது. உண்மை குற்றவாளி அகப்படாவிட்டால், என் பேரிலும் என் தந்தை பேரிலும் நீங்கள் சந்தேகப்பட மாட்டீர்களா?
இந்த மூடன் பேசி மேலும் சிக்கலை ஏற்படுத்திவிடுவான் போலிருக்கிறதே!
பிள்ளாய் கந்தமாறா! அப்படியெல்லாம் வேறு யார் சந்தேகப்பட்டாலும் நான் சந்தேகப்பட மாட்டேன். உன் தந்தைக்கு என்னிடமுள்ள பக்தி விசுவாசத்தை நான் அறிவேன்! அது போகட்டும், உன் தந்தை சம்புவரையர் எங்கே?


இதோ சம்புவரையரே வந்துவிட்டாரே! (மலையமான்)


ஐயா! தங்கள் மாளிகையில் நடந்த விபரீத சம்பவத்தை பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அதனால் தங்கள் உள்ளம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பதையும் நாங்கள் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். ஆனாலும் நாடு நகரங்களில் நாலா விதமான வதந்திகள் பரவாமலிருக்கும் பொருட்டு, இளவரசரின் மரணம் எப்படி நடந்தது என்று நிச்சயமாக தெரிந்தால் நல்லது அல்லவா?


ங்உம்... (என்று சலித்தப்படி) நான் என்ன உதவி செய்ய முடியும்? என் மகன் ஒன்று சொல்கிறான், அதற்கு நேர்மாறாக என் மகள் இன்னொன்று சொல்கிறாள்.
உண்மையில் நடந்ததை அறிவதற்கு என்னைக் காட்டிலும் தனாதிகாரி உதவி செய்யக் கூடும்.
அவரை கேளுங்கள். அவர்தான் எல்லாவற்றுக்கும் மூலக் காரணம். அவர்தான் முதன் முதலில் மதுராந்தகத்தேவரை ரகசியமாக கடம்பூருக்கு அழைத்து வந்தார். (சம்புவரையர்)



போதும்! போதும்! நிறுத்துங்கள்! இதனால்தான் நடந்துவிட்ட காரியத்தை பற்றி விசாரணை ஒன்றும் வேண்டாம் என்று நான் சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. ஏற்கனவே உங்களுக்குள் இருக்கும் வேற்றுமை போதாதா? புதிய பூசல்கள் வேறு வேண்டுமா?



என் வீரப் புதல்வன் அகால மரணம் அடைந்ததற்கு என்னுடைய பழைய பாவங்களேதான் காரணம். உங்கள் யார் பேரிலும் குற்றம் இல்லை. நீங்கள் அதை பற்றி ஒன்றும் சொல்ல வேண்டாம். பழுவேட்டரையரும் எதுவும் சொல்ல வேண்டியது இல்லை.


சக்கரவர்த்தி என்னை மன்னிக்க வேண்டும். நான் பேசாமலிருக்கலாகாது. என் மனதில் உள்ளதை கூறியே ஆக வேண்டும்.
மாமா! எதற்காக தாங்கள் நடந்து போனவற்றை பற்றி பேச வேண்டும்.
மூன்று ஆண்டுகளுக்கு முன் கட்டி வந்த அந்த சண்டாளியின் மோக வலையில் நான் விழுந்து கிடந்தேன்.
பாண்டிய நாட்டு சதிகாரர்களுக்கு நம்முடைய பொக்கிஷத்திலிருந்து, நமக்கெதிராக சதி செய்வதற்கு வேண்டிய பொருள் கொண்டு போக இடம் கொடுத்தேன்.


நந்தினியின் தூண்டுதலினாலேயே கண்டராதித்தரின் புதல்வர் மதுராந்தக தேவருக்கு சாம்ராஜ்யத்தை உரிமையாக்க எண்ணினேன். அதற்காக மதுராந்தகனை மூடு பல்லக்கில் கடம்பூர் அழைத்துச் சென்றேன். அதன் மூலம் தங்கள் புதல்வர்களுக்கு எதிராக சிற்றரசர்களை கூட்டி சதி செய்தேன்.


மாமா! இது என்ன வார்த்தை? தாங்கள் மனம் அறிந்து சோழ குலத்துக்கு எந்த தீங்கும் செய்திருக்க மாட்டீர்கள்.


என்னுடைய குமாரர்களுக்குப் பதிலாக என் பெரியப்பாவின் குமாரரை சிங்காசனத்தில் அமர்த்த எண்ணினீர்கள். அது சோழ குலத்துக்கு எப்படி துரோகம் செய்வதாகும். என் புதல்வர்களைக் காட்டிலும் என் பெரியப்பாவின் குமாரனுக்கு சோழ குலத்து மணி மகுடம் புனைய அதிக உரிமை உண்டல்லவா?


இருந்தபோதிலும் பழுவேட்டரையர் இப்படி செய்திருக்க கூடாது. சக்கரவர்த்தியிடம் இவ்வளவு நெருக்கம் இருக்கும் போது, அவரிடமே இது பற்றி பேசி இருக்க வேண்டாமா!


இந்த மூன்று ஆண்டுகள் காமக் குரோத மத மாச்சரியங்களுக்கு இடம் கொடுத்துவிட்டேன். அந்த மாய மோகினியின் வலையிலிருந்து விடுபட என் தம்பி எவ்வளவோ எடுத்துக் கூறியும் கேட்கவில்லை.
பலமுறை எடுத்து கூறியபோது எல்லாம் கேட்காமல், இப்போது வருத்தப்பட்டு என்ன பயன்! குலப் பெருமைக்கு அல்லவா இழுக்கு ஏற்பட்டுவிட்டது.
மாமா! யோசியுங்கள், எதற்காக தாங்கள் நடந்து போன காரியத்தைப் பற்றி பேச வேண்டும்? இறந்தவர்களின் உயிர் திரும்பி வரப் போவதில்லை. தாங்கள் மனமறிந்து எந்தவித துரோகமும் செய்திருக்க மாட்டீர்கள்.
ஆகையால் நடந்து போனதை மறந்துவிட்டு இனி நடக்க வேண்டியதை பற்றி பேசுவோம்.


சம்புவரையரே! முதலில் தாங்களும், தங்கள் குமாரனும் தங்கள் ஆசனத்தில் அமருங்கள்.
சக்கரவர்த்தி ஆசனத்தில் அமரும்படி கூறியதும் கந்தமாறன் முதலில் அமருகிறான்.
சம்புவராயர் தயங்கியபடி அவருக்கான ஆசனத்தில் அமருகிறார்.


இல்லை, இல்லை! சக்கரவர்த்தி கடைசியாக நான் ஒருமுறை என் உள்ளத்தில் உள்ளதை பேசிதான் ஆக வேண்டும்.
இந்த மாவீரர் மனம் கலங்கும்படி நேர்ந்து விட்டதே!
ஒரு காலத்தில் நான் வேளக்காரப் படைக்கு தலைவனாயிருந்தேன். சோழர் குலத்தை சேர்ந்தவர்களுக்கு ஆபத்து வரும் காலங்களில் காப்பாற்ற முடியாவிட்டால்....



என் தலையை நானே வெட்டிக் கொண்டு உயிர்விடுவேன் என்று சத்தியம் செய்திருக்கிறேன். ஆனால், என்னால் ஆதித்த கரிகாலரை காப்பாற்ற முடியவில்லை.
ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது. அவரை தடுத்தாக வேண்டும்.
என்று கூறி தன் உறைவாளை உருவி எடுத்து தனது தலையை தானே வெட்டிக் கொள்ள முற்படுகிறார்.
நான் செய்த சத்தியத்தை நிறைவேற்றியே தீருவேன்.
அப்போது பொன்னியின் செல்வர் பாய்ந்து அவரின் கரத்தை இறுக பிடித்துக் கொள்கிறார்.
பொன்னியின் செல்வா! என்னை விடுங்கள். நான் சோழ குலத்துக்கு துரோகியாக போய்விட்டேன். என்னை விடுங்கள்.


ஐயா, பொறுங்கள்! வழி வழியாக சோழர் குலத்து மன்னர்களின் முடிசூட்டு விழாவின் போது பழுவேட்டரையர்கள்தான் கிரீடத்தை எடுத்து தலையில் வைப்பது வழக்கம்.
என் பட்டாபிஷேகத்தின் போதும் தாங்கள் ஆசிர்வதித்து தங்கள் திருகரத்தினால்தான் முடிசூட்ட வேண்டும். அதுவரையில் பொறுத்திருங்கள். (அருள்)
என்று பொன்னியின் செல்வர் பெரிய பழுவேட்டரையரை பார்த்து கூறியதும், அனைவருடைய உள்ளத்திலும் மகிழ்ச்சி உண்டானது.


ஆனால், குந்தவை தேவியின் முகம் மாற்றம் அடைந்து.
என்ன ஆனது? ஏன் அருள்மொழி இப்படி திடீரென்று, தானே முடிசூட்டிக் கொள்ளப் போவதாக கூறுகிறான். நேற்று வரை இராஜ்யம் வேண்டாம் என்று கூறியவன்... (என்று யோசிக்கிறாள்.)
இளவரசரின் திடீர் மன மாற்றத்திற்கு காரணம் என்னவாக இருக்கும்?
அனைவரும் திகைப்பும், மகிழ்ச்சியும் அடைகிறார்கள்.
இளவரசரின் இரு கைகளையும் பிடித்து......
சோழ குலத் தோன்றலே! பொன்னியின் செல்வா! தங்களுடைய சொற்கள் எனக்கு அளவிலான மகிழ்ச்சியை அளித்தன. தங்களை முடிசூட்டிக் கொள்ள வேண்டும் என்று நான் தங்களை வேண்டிக் கொள்ள எண்ணினேன்.


ஆனால், சோழ குலத்துக்கே துரோகியாய் போய்விட்ட எனக்கு அந்த வேண்டுகோள் விடுக்கவே தகுதி இல்லை என்று யோசித்து பேசாதிருந்தேன்.
தாங்கள் சின்னஞ்சிறு குழந்தையாக இருந்த போது என் மார்பிலும் தோளிலும் ஏந்தி சீராட்டியிருக்கிறேன்.
அப்போதெல்லாம் தாங்கள் கரங்களில் ஓடும் ரேகைகளைப் பார்த்து இந்த உலகின் மன்னாதி மன்னனாக ஆகப்போகிறீர்கள் என்று பூரித்தது உண்டு. பொன்னியின் செல்வா! தாங்கள் சோழ சிங்காதனம் ஏறி மணி மகுடம் புனைவது முறையானது, தகுதியானது. ஆனால் அந்த மணி மகுடத்தை எடுத்து தாங்கள் சிரசில் சூடும் தகுதியை நான் இழந்துவிட்டேன். என் கரங்களும் இழந்துவிட்டன. (பெரிய பழுவேட்டரையர்)
என்று கூறி இளவரசரை இரு கை கூப்பி வணங்குகிறார்.


அன்னையே! தாங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசக் கூடியவர் இங்கு எவரும் இல்லை. பழுவூர் மாமா நம் குலத்துக்கு துரோகம் செய்துவிட்டதாக கூறி தம் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்புவது....


தாங்கள் திருக்குமாரருக்கு முடிசூட்ட வேண்டும் என்று அவர் எண்ணியது எப்படி சோழ குலத்துக்கு செய்த துரோகமாகும். தாங்கள்தான் பழுவூர் மாமாவிடம், அவர் எந்த குற்றமும் புரியவில்லை என்று எடுத்துக் கூற வேண்டும்.


ஐயா! கேளுங்கள், என்னுடைய முயற்சி மட்டும் பலிதமாயிருந்தால் எவ்வளவு பயங்கரமான விபரீதம் நடந்திருக்கும் என்பதைக் கேளுங்கள். சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மையைத் தவிர வேறு எதையும் கனவிலும் கருதாதவனான என் சகோதரனின் மனதை புண்படுத்த தயங்கினேன்.
ஆனாலும் இப்போது என் மனதை கல்லாக்கிக் கொண்டு உண்மையை சொல்ல தீர்மானித்துவிட்டேன்.
நாங்கள், மகான் கண்டராதித்தரின் குமாரர் என்று எண்ணி சோழ சிங்காசனத்தில் ஏற்றி வைப்பதற்கு இருந்தவன் சோழ குலத்துக்கு பரம்பரை பகைவன்.
உங்களுக்கு நம்புவது கஷ்டமாகத்தான் இருக்கும். என் காதினாலே நான் கேட்டிராவிட்டால் நானும் நம்பியிருக்க மாட்டேன்.
அப்படியென்றால் நம் மருமகப்பிள்ளை யார்? யாருடைய மகன்?
கெட்ட நேரத்திலும் நமக்கு ஒரு நல்ல நேரம்! மணிமேகலையை அவனுக்கு மணம் முடிக்கவில்லை.
அனைவரும் அதிர்ச்சி அடைகின்றனர். இது என்ன புது கதை? என்பது போல்..


அவன் வீர பாண்டியனின் மகன்! அந்த சண்டாளியின் வாயினாலேயே இதை ஆதித்த கரிகாலரிடம் சொல்லியதை நான் கேட்டேன்.
என் தலையிலா இந்த இடி வந்து விழவேண்டும்.
எவளை என் அரண்மனையில் சர்வாதிகாரியாக்கி வைத்திருந்தேனோ அவள் வீர பாண்டியனுடைய மகள்.
வீர பாண்டியனை, ஆதித்த கரிகாலர் கொன்றதற்கு பழிக்கு பழி வாங்கவே பழுவூர் அரண்மனைக்கு அவள் வந்திருக்கிறாள். வீர பாண்டியனுடைய குமாரனை சோழ சிங்காசனத்தில் ஏற்றி வைக்க திட்டமிட்டிருந்தாள். நம் குல தெய்வமான துர்கா தேவிதான் அந்த வாணர் குலத்து வீரனை அனுப்பி என் கண்களை திறந்தாள்.


இன்னும் சில செய்திகளை அவனிடம் நான் கேட்டறிய வேண்டும் என்று இருந்தேன். அதற்குள் இந்த மூடன்...
நம் செயலுக்கு பாராட்டு கிடைக்கும் என்றல்லவா எண்ணினேன்.
சபையில் ஒரே சலசலப்பு. எல்லோரும் அந்த சபையில் திடீரென்று வந்தவனை பார்க்கின்றனர்.
இப்பதான் இவனை கந்தமாறன் வேல் எறிந்து கொன்று விட்டு வந்ததாக சொன்னான்.
இவனோட உயிர் கெட்டிதான்!


இந்த பிள்ளையா என் மகனை கொன்றதாக சொல்கிறீர்கள்? என்னால் நம்ப முடியவில்லையே!
வந்தியத்தேவன், தனது விலாவில் அடிபட்டு சொட்ட சொட்ட நனைந்து வந்திருக்கிறான்.



தந்தையே! இவன் என்
உயிருக்குயிரான நண்பர்.
இலங்கையிலும்,
நடுக்கடலிலும் எனக்கு
நேர்ந்த அபாயங்களிலிருந்து
என்னை காப்பாற்றியவர்.
இவர் உயிர் பிழைத்து வந்தது
பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன்.
இவர் மீது குற்றம் சுமத்துவது என்
மீது குற்றம் சுமத்துவது போலாகும்.
இவன் முதுகில்தானே
வேல் எறிந்தோம். எப்படி
இவன் தப்பி வந்தான்?!
அப்படியென்றால் நாம் வேல்
எறிந்து கொன்றது யாரை?


எங்கே போகிறோம் என்பது தெரியாமல் இவன் ஓடிவந்து இங்கு சிக்கிக் கொண்டான். இந்த துரோகியை இனி ஒருமுறை தப்பித்துச் செல்வதற்கு இடந்தரக் கூடாது. இவன்தான் ஆதித்த கரிகாலரை கொன்றவன்.
இளவரசே! அவர் மீது குற்றம் என்னமோ ஏற்கனவே சாட்டிவிட்டார்கள். ஆகையால் உண்மையை தெளிவாக விசாரித்து விடுவது நல்லது.
ஆம்! முதன் மந்திரி கூறுவதும் சரிதான். தாங்கள் நாளை சோழ சிம்மாசனத்தில் ஏறப்போகிறவர். எப்பேர்பட்ட குற்றவாளியானாலும் தண்டிக்கவோ, மன்னிக்கவோ தாங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், விசாரணையே வேண்டாம் என்று சொல்வது உசிதமா? அது வீண் சந்தேகங்களுக்கு இடம் தருமல்லவா?


இளவரசே! ஏற்கனவே தாங்கள்தான் சிங்காதனம் ஏறுவதற்காக இந்த வந்தியத்தேவனை அனுப்பி தாங்கள் தமையனை கொல்ல சதி செய்ததாக ஒரு வதந்தி நாடெங்கும் பரவி வருகிறது. மேலும் தாங்கள்.....
அடே மூடா! சமய சந்தர்ப்பம் தெரியாமல் உளறுவதில் உனக்கு நிகர் வேறு யாரும் இல்லை.
அப்படி என்ன நான் சொல்லிவிட்டேன்! இவர் சொல்ல சொன்னதைத்தானே சொன்னேன்.
எல்லாம் என் தலை எழுத்து!


சம்புவரையரே! உமது மகனுடைய தவறுகளையெல்லாம் மன்னித்துவிடுங்கள். உமது மகன் செய்த மூடத்தனமான காரியத்துக்கெல்லாம் பிராயசித்தம் செய்துவிட்டான். சோழ சாம்ராஜ்யத்துக்கு அவன் மகத்தான சேவை செய்திருக்கிறான்!
நீ இந்த வந்தியத்தேவன் மீது வேல் எறிந்து கொன்றதாக சொன்னாய் அல்லவா?
இவன்தான் அப்போது குதிரை மேல் ஆற்றை கடந்தவன் என்று சொல்ல முடியுமா? உன்னால்...
அப்படி கேட்டதும் கந்தமாறன் திரு திருவென முழிக்கிறான்.


ஐயா! இது பற்றி என் சீடன் ஒரு வார்த்தை சொல்ல அனுமதிக்க வேண்டும்.
இதோ வந்துட்டேன்.
பிரபுக்களே! என் குற்றத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். அந்த வாணர் குலத்து இளவரசர் குதிரை மேலேறி ஓடவே இல்லை.
அனைவரும் அவனை ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர்.
நம் வேண்டுதலை ஏற்று கடம்பூர் சென்றதால் அல்லவா இந்த மனிதருக்கு இவ்வளவு இன்னல்கள்! (குந்தவை)
ஆமாம்! இவர் நமது உண்மையான மதுராந்தகத் தேவரை கொலைகாரனிடமிருந்து காப்பாற்றும் முயற்சியில் காயம் அடைந்தார். நானே இவரை காப்பாற்றி பல்லக்கில் ஏற்றி கோட்டைக்குள் கொண்டு வந்து சேர்த்தேன். நாலு நாளாக இங்கேதான் இவர் இருந்து வருகிறார். அப்படி இருக்கையில் சம்புவரையரின் மகன் இவர் முதுகில் எப்படி வேலெறிந்திருக்க முடியும்?


அட! இத்தனை நாள் கண்டராதித்தரின் மகன் என்று நாமெல்லாம் மதித்து வந்தவன் வீர பாண்டியனுடைய மகனா?
அப்படியென்றால் யார் உண்மையான கண்டராதித்தரின் மகன்?
சக்கரவர்த்தி! தூமகேது தன்னுடைய தீய காரியத்தை செய்துவிட்டு மறைந்து விட்டது. விதி வசத்தினால் ஆதித்த கரிகாலர் இறந்துவிட்டார்.


பிரபு! சக்கரவர்த்தி! பிரம்மராயரே! என் அருமை தோழர்களே! அடியேனுடைய கடைசி வார்த்தையை கேளுங்கள். சோழ சிங்காதனத்தில் அருள்மொழி வர்மரை ஏற்றி வைத்து முடி சூட்டுங்கள்! அவர் மூலமாக இந்த சாம்ராஜ்யம் மகோந்நதத்தை அடையப் போகிறது.
ஆனால், துர்கா பரமேஸ்வரியின் கருணையினால், சோழ சாம்ராஜ்யத்துக்கு நல்ல காலம் இருக்கிறது. இன்னும் நெடுநாள் இந்த சாம்ராஜ்யம் நிலைத்திருக்கப் போகிறது.


ஐயா! தங்கள் விருப்பம் நிறைவேறத்தான் போகிறது. அதற்கு முன் கரிகாலர் எப்படி இறந்தார் என்று தெரிந்தாக வேண்டுமல்லவா? அது தெரியாவிட்டால் இதோ குற்றம் சுமத்தப்பட்டு நிற்கும் இவரை கரிகாலன் மரணத்துக்காக தண்டிக்கும்படி நேரிடும்.
ஆகா! இவன் மீதா குற்றம் சுமத்துவது? யார் சுமத்துகிறார்கள்?
கந்தமாறனும், பார்த்திபேந்திரனும் சுமத்துகிறார்கள். (அநிருத்தர்)
ஆகா! முழு மூடர்கள்! கந்தமாறா, பார்த்திபேந்திரா நீங்கள் இவன் மீது குற்றம் சுமத்தக் காரணம் என்ன?
எதை கொண்டு இவன் ஆதித்த கரிகாலரை கொன்றதாக சொல்கிறீர்கள்? (பழு)


இவன் அச்சமயம் நந்தினி தேவியின் அந்தப்புரத்தில் ஒளிந்து கொண்டிருந்திருக்கிறான். மணிமேகலையும் அங்கே இருந்திருக்கிறாள். (அநிருத்)
மணிமேகலையோ, தான் கொன்றதாக சொல்லுகிறாள்.
ஆனால் அதை நம்புவதற்கு இல்லை. (அநிருத்)
ஏனென்றால் அவள் காட்டிய கத்தியில் ரத்தக் கறையில்லை. வந்தியத்தேவனை காப்பாற்றுவதற்காக அவள் அப்படி கூறியிருக்க வேண்டும். (அநிருத்)


மணிமேகலை கொல்லவில்லை என்றால், இவன் மட்டும் எப்படி கொன்றிருப்பான்? எந்த ஆயுதத்தை கொண்டு?
இதோ! இதை கொண்டுதான் கரிகாலரை கொன்றிருக்கிறான். (பார்தி)
எங்கே இப்படி அந்த கத்தியைக் கொடு. (பழு)


அதை நன்றாக உற்று பார்க்கிறார்.
இது இரும்பன்காரி கத்திதான்!
இந்த கத்தியை அவன் பயன்படுத்தியிருக்க வாய்ப்பில்லை. ஆதித்த கரிகாலரை அவன் கொல்லவும் இல்லை. (பழு)
எதை கொண்டு அவ்வளவு நிச்சயமாக சொல்கிறீர்கள்?
ஆம்! நிச்சயமாக எனக்கு தெரியும். எவன் இந்த கத்தியை எறிந்து கரிகாலரைக் கொன்றவன் என்று.


பழுவேட்டரையருக்கு தெரிந்தால் சொல்ல வேண்டியதுதானே! ஏன் தயங்குகிறார்?
முக்கிய பொறுப்புல இருந்துகிட்டு, பழுவேட்டரையர் நடந்துகிறது அவ்வளவு சரியாகப் படவில்லை.
ஆம்! அதை சொல்லி விட வேண்டியதுதான்.
சின்ன பழுவேட்டரையரின் முகத்தில் கோபம் கொப்பளிக்கிறது. தன் அண்ணனை எரித்து விடுவது போல் பார்க்கிறார்.


எல்லோரும் கேளுங்கள்! இந்த வாலிபன் யாழ் களஞ்சியத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். நான் அதன் வழியாக இறங்கி வந்தேன்.
இவன் என்னை பார்த்து சத்தமிட கூடாது என்பதற்காக பின்னாலிருந்து இவன் கழுத்தைப் பிடித்து நெருக்கினேன். இவன் விழி பிதுங்கி உணர்விழந்து அங்கேயே கீழே விழுந்துவிட்டான். அதனால் ஆதித்த கரிகாலரை கொன்றது யார் என்பது இவனுக்கு தெரிந்திருக்க முடியாது.
அப்படியென்றால் கொன்றது யார்?
யார்? யார் கொன்றது?
கொன்றது யார்?


இந்த திருகு கத்தியை நான்தான் இடும்பன்காரியிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்தேன். இதை வீசி எறிந்தவன் நானேதான்!
ஆனால், இளவரசர் கரிகாலர் மீது எறியும் எண்ணத்துடன் நான் இக்கத்தியை எறியவில்லை.
என்னை மோகவலையில் ஆழ்த்தி, துரோக படுகுழியில் வீழ்த்திய அந்த மாய பிசாசை கொன்றுவிட எண்ணி எறிந்தேன்.
நந்தினியின் பேரில்தான் எறிந்தேன்... குறி தவறி கரிகாலர் மீது பாய்ந்துவிட்டது.


நூறு ஆண்டு காலமாக பழுவூர் குலம் சோழ குலத்துக்கு செய்திருக்கும் தொண்டுகளுக்கெல்லாம் களங்கம் உண்டு பண்ணிவிட்டேன்.
அந்த களங்கத்தை எப்படி நீக்கப் போகிறேனோ தெரியவில்லை?
அண்ணா! இதோ அந்த களங்கத்தை நான் போக்குகிறேன்.


சோழ குலத்துக்கு துரோகம் செய்கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை பழி வாங்குவதாக நீயும் நானும் சபதம் ஏற்றிருக்கிறோம். அந்த சபதத்தை இப்போதே நானே நிறைவேற்றுகிறேன்.
உன்னை இந்த கணமே கொன்று நம் குலத்துக்கு நேர்ந்த பழியை துடைப்பேன்.
வேண்டாம், வேண்டாம்! இங்கே இரத்தம் சிந்த வேண்டாம்!


தம்பி! நம் குலத்துக்கு என்னால் நேர்ந்த பழியை துடைக்கும் வேலையை உனக்கு நான் வைக்க மாட்டேன். அத்துடன் தமையனை கொன்ற தம்பி என்ற பழியை உனக்கு ஏற்படுத்த மாட்டேன்.
இதோ துர்கா பரமேஸ்வரிக்கு என் சபதத்தை நிறைவேற்றிவிட்டேன்.
ஆ
என்று கூறியபடி தன் கையிலிருந்த திருகு கத்தியை தனது மார்பில் பாய்த்துக் கொண்டார்.


ஆ! அண்ணா, அண்ணா! (சின்ன பழு)
தம்பி! நீ கூறியதை கேட்டிருந்தால் இன்று எனக்கு இந்த நிலை வந்திருக்காது. விதியை என்னால் கூட வெல்ல முடியவில்லை. (பெரிய பழுவேட்டரையர்)


தேவதாரு மரம் வேருடன் பெயர்ந்து கப்பும் கிளையுமாக கீழே விழுவது போல தரையில் சாய்ந்தார் பழுவேட்டரையர்.
தூமகேது ஆதித்த கரிகாலரின் உயிரைத்தான் பறித்தது என்றால், மாவீரர் பழுவேட்டரையரின் உயிரையும் அல்லவா கேட்கிறது.


மாவீரர் பழுவேட்டரையர் தனது இறுதி மூச்சை எண்ணிக் கொண்டிருக்கிறார். பீஷ்மர் அம்பு படுக்கையில் படுத்திருப்பது போல் பெரிய பழுவேட்டரையர் படுத்திருக்கிறார். அரச குலத்தினர்களும், முக்கியஸ்தர்களும் ஒவ்வொருவராக பழுவேட்டரையரிடம் அவர் செய்த சாதனைகள் பற்றியும், பழைய சிறப்பான சம்பவங்கள் பற்றியும் அவருடன் பேசிவிட்டு செல்கின்றனர்.
ஐயா! நான் ஆழ்வார்க்கடியான் வந்திருக்கிறேன்.


என்ன வைஷ்ணவனே! நீ எதற்காக வந்திருக்கிறாய்? என்னை கையிலாசத்திற்கு போக வேண்டாம், வைகுண்டத்திற்கு செல்லுங்கள் என்று கூற வந்தாயா? (என்று கூறி சிரிக்கிறார்.)
ஐயா! நான் மகாவிஷ்ணுவின் தூதனாக இப்போது வரவில்லை. என் சகோதரியிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.
சகோதரியா! யார் இவனுடைய சகோதரி? (பழு)
என்னுடன் பல நாள் வளர்ந்த நந்தினியை சொல்லுகிறேன். அவள் தாங்களுக்கு அவளுடைய நன்றியை தெரியப்படுத்தும்படி என்னை அனுப்பினாள். கரிகாலரை கொன்ற பழி அவள் பேரில் விழாதிருக்கும் பொருட்டு தாங்கள் அதை ஏற்றுக் கொண்டதற்காக நன்றி தெரிவிக்கச் சொன்னாள். எத்தனை ஜென்மம் எடுத்தாலும் தாங்கள் அன்பை மறக்க முடியாது என்று தெரிவிக்கும்படி சொன்னாள். (ஆழ்வார்)


ஆகா! இன்னும் அப்படி நினைக்கிறாளா? நினைத்துக் கொண்டு சந்தோஷபடட்டும். எவ்வளவுதான் அவள் வஞ்சனை செய்து எனக்கு தீங்கு புரிந்திருந்தாலும், அவளை என்னால் மறக்க முடியவில்லை. தன் உயிரை கொடுத்து சக்கரவர்த்தியை காப்பாற்றிய உத்தமியின் புதல்வி அல்லவா அவள்! உண்மையாகவே அடுத்த பிறவியிலும் என்னை தேடிக் கொண்டு வந்து விடுவாளோ என்னவோ!


வைஷ்ணவனே! யாராவது ஒருவரிடம் உண்மையைச் சொல்ல வேண்டும். அதை உன்னிடமே சொல்கிறேன். நான் எறிந்த கத்தி இளவரசர் பேரில் படவில்லை. அதற்கு முன்பே அவர் விழுந்துவிட்டார். நானே இளவரசரை கொன்றதாக ஒப்புக் கொண்டதற்கு காரணம் நந்தினியின் பேரில் பழி விழாமல் தடுப்பதற்காக மட்டுமல்ல, அதைவிட நூறு மடங்கு முக்கிய காரணம் உண்டு. அருகில் வா சொல்லுகிறேன். உன் சிநேகிதன் வந்தியத்தேவன் இருக்கிறானே, அவன் அருமையான பிள்ளை! அவனுக்கு சோழ குலம் ரொம்ப கடமைப்பட்டிருக்கிறது. இளைய பிராட்டியின் உள்ளத்தை அவன் கவர்ந்துவிட்டான்.


இளைய பிராட்டியிடம் நான் அநாவசியமாக துரோகம் பாராட்டினேன். அதற்கெல்லாம் பரிகாரமாக குற்றத்தை ஒப்புக் கொண்டேன்.
நான் அப்படி பகிரங்கமாக ஒப்புக் கொண்டு என்னையும் கொடுத்திராவிட்டால், வந்தியத்தேவன் பேரில் யாராவது களங்கம் கற்பித்துக் கொண்டே இருப்பார்கள். இனி ஒருவரும் அவ்வாறு பேசத் துணியமாட்டார்கள். (பழு)
வைஷ்ணவனே! என்றாவது ஒருநாள் இளைய பிராட்டியிடம் அவரை நான் துவேஷித்ததற்காக என்னை தயைகூர்ந்து மன்னிக்கும்படி சொல். (பழு)


ஆகா! பாட்டனின் மென்மையான மனம் அறிந்துதான், அந்த நந்தினி இவரை பாடாய் படுத்தியிருக்கிறாள். *சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பதை பாட்டன் நிரூபித்துவிட்டார்.
*பழமொழி
என்று எண்ணியபடி கண்ணில் வழியும் கண்ணீரை துடைக்கிறாள்.


வைஷ்ணவனே! இன்னும் ஒரு விஷயம் முதன் மந்திரியிடம் சொல்லு.
இலங்கையிலிருந்து பாண்டியன் கீரிடத்தையும், ரத்தின ஹாரத்தையும் எப்படியாவது கொண்டு வர வேண்டும். அதற்கு தகுந்தவன் வல்லத்து இளவரசன்தான்! அவனும், நீயும் கொண்டு வாருங்கள். பிறகு மதுரைக்கு சென்று அங்கே ஒரு தடவை பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் நடத்த வேண்டும். தெரிகிறதா!


இன்னும் ஒன்று. எனக்காக பொன்னியின் செல்வனிடம் வேண்டிக் கொள்.
என் பேரில் ஏற்படும் பழியை என் சகோதரன் மீது சுமத்த வேண்டாம். அவனை போல் சோழ குலத்துக்கு உற்ற துணைவன் வேறு யாரும் இல்லை என்று சொல்லு.


தேவி துர்கா பரமேஸ்வரி!
என் சபதத்தை
நிறைவேற்றிவிட்டேன்.
இதோ வருகிறேன்.


மாவீரர் பழுவேட்டரையர் இந்த மண்ணுலகத்தை விட்டு
மறைந்துவிட்டார். ஆனால், சோழ நாட்டு மக்கள் மனதிலும்,
நம் மனதிலும் என்றென்றும் நிலைத்திருப்பார்.


சில மாதங்களுக்கு பிறகு....
முடிசூட்டு விழாவிற்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே சோழநாட்டின் நாலா திசைகளிலிருந்தும் மக்கள் தஞ்சையை நோக்கி வரத் தொடங்கிவிட்டார்கள்.
அப்பா! இப்போது நாம் எங்கே செல்கிறோம்?
இன்றைக்கு பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் அல்லவா! அதற்காக போகிறோம்.


கோட்டையின் வாயிற்கதவு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மக்கள் கோட்டைக்குள் வரிசையாக செல்கின்றனர்.
ஆமாம்! இப்படி திரள் திரளா மக்கள் வந்தா எந்த அரண்மனையும் கொள்ளாது.


இளவரசருடன் சரி சமமா ரதத்திலே வருவது யாரு?
அவர்தான் வல்லவரையன் வந்தியத்தேவர்.
மக்கள் பேசிக் கொண்டிருக்கும் வேளையிலே இளவரசரும், வந்தியத்தேவனும் மகுடாபிஷேக மண்டபத்திற்கு சென்று விடுகிறார்கள்.
நம்ம இளைய பிராட்டி மணக்க போகும் அதிஷ்டக்காரர்னு சொல்லு.
அழாமல் வா! யாராவது பார்த்துவிட போகிறார்கள்.
ரவிதாசனும், இடும்பன்காரியும் ரகசியமாக சின்ன பழுவேட்டரையரின் மகளை அழைத்துச் செல்கின்றனர்.


இப்படி எல்லோரையும் ஏமாற்றலாமா?
ஸ்ரீ இராமபிரான் அயோத்தி மக்களை ஏமாற்றிவிட்டு இரவுக்கிரவே காட்டுக்கு போகவில்லையா!


இதை பற்றி இளைய பிராட்டியிடம் கலந்து பேசி விட்டீர்களா?
இல்லை! முதன் முதலாக தன்னிச்சையாக ஒரு முடிவு எடுத்து அதை நிறைவேற்றலாம் என்று எண்ணியிருக்கிறேன். அதற்கு உங்களுடைய உதவி தேவை.


மதுபாபிஷேக மண்டபம்.



நல்லன் சாத்தனார் எழுந்து நின்று...
உலகத்துக்கெல்லாம் ஒளி கொடுக்கும் சூரிய பகவானை கூட மாரி காலத்து மேகங்கள் மறைத்துவிடுவது போல், சூரியனுடைய பரம்பரையில் வந்த சோழர் குலத்தை சில காலம் பல்லவ, பாண்டிய பகை மேகங்கள் மறைத்திருந்தன. அந்த மேகங்களை சிதறடிக்கும் வஜ்ராயுதம் ஏந்திய தேவேந்திரனுக்கு இணையாக விஜயாலயச் சோழர் தோன்றினார்.
விஜயாலய சோழரின் திருக்குமாரர் ஆதித்த சோழர், மாற்றாங்களுடைய சேனா மேகங்களை சிதறி ஓடச் செய்யும் மற்றொரு கதிரவனாகவே விளங்கினார். அவர் தமது முன்னோனாகிய கோச்செங்கணானை பின்பற்றி, காவேரி நதி உற்பத்தியாகும் ஸையபர்வதத்திலிருந்து பூம்புகார் நகரம் வரையில் எண்பத்திரண்டு சிவாலயங்களை ஏற்படுத்தினார்.
ஆதித்த சோழரின் புதல்வர் பராந்தக சோழர் பிறக்கும் போதே தம்முடைய இருதோள்களிலும் வீர லட்சுமியை சுமந்து கொண்டு பிறந்தார். வடக்கே துங்கபத்திரை நதிக்கு அப்பால் இருந்த சாளுக்கர்களும், வேங்கி மண்டலத்தாரும் பராந்தக சோழருடைய பெயரை கேட்டு சிம்ம சொப்பனம் கண்டவர்கள் போல் நடு நடுங்கினார்கள்.


இந்த புலவர்களுக்கு நேரங்காலமே தெரியாது? முகூர்த்தம் போய்விட்டால் என்ன செய்வது? இவர்களை சுருக்கமாக பாட எப்படியாவது சொல்ல வேண்டும்.
அவரின் மகன் இராஜாதித்த தேவர் குருஷேத்திரத்தையொத்திருந்த தக்கோல போர் களத்தில் கன்னர தேவனை முறியடித்துச் சின்னாபின்னம் செய்த பிறகு, ஆனை மேல் துஞ்சி வீர சொர்க்கம் எய்தினார். பராந்தக சோழர் தில்லை சிற்றம்பலத்துக்கு பொன்கூரை வேய்ந்தார். (நல்லன்)
இப்படி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வீரப் புகழ் பெற்று விளங்கும் குலத்தில் வந்த பொன்னியின் செல்வரை எம் மொழிகளால் யாம் போற்ற முடியும்?
கலைமகளே பிறந்து வந்தால் ஒரு வேளை சாத்தியமாகக் கூடும். எம்மை போன்ற மிக சாதாரண புலவர்களால் பாட முடியுமா!?


ஆழ்வார்க்கடியான் சின்ன பழுவேட்டரையரிடம் ஏதோ ரகசியம் கூற, அவர் பதற்றம் அடைந்து சபையிலிருந்து புறப்பட்டு அவசர அவசரமாக செல்கிறார்.
என்ன !?
என் மகள் சோழ குலத்தின் பரம்பரை பகைவர்களான பாண்டிய குலத்து ஆபத்துதவிகளுடன் சேர்வதா? அதைவிட அவளை கொன்று விடுவதே மேல் !
பழுவேட்டரையர் அல்லவா பொன்னியின் செல்வனின் சிரசில் மணி மகுடத்தை சூட்ட வேண்டும். அவரை இந்த வைஷ்ணவன் அவசரமாக எங்கே அழைத்துச் செல்கிறான் !


ஐயா புலவரே! அவ்வாறு என்னுடைய புகழை பாடும்படி நான் இன்னமும் ஒரு காரியமும் செய்யவில்லை. இன்றுதான் தொடங்கப் போகிறேன்.
இத்தனை நேரமும் தாங்கள் கூறிவந்த புகழ் எல்லாம் என் முன்னோர்கள் பற்றியவை அல்லவா? (அருள்)
இளவரசர் நாம் கூறியதை தவறான அர்த்தம் கொண்டு விட்டாரா?!
இந்த புராதன பெருமை வாய்ந்த சிங்காதனத்தில் அமர்ந்து மணி மகுடம் சூட்டிக் கொள்வதற்கு நான் என்ன காரியம் செய்திருக்கிறேன்?
என் குலத்து முன்னோர்கள் அனைவரும் போர்க்களத்தில் புறமுதுகிடாத வீரர்கள் என்று புகழ் பெற்றது போலவே, அனைவரும் நீதி நெறியிலிருந்தும் தவறாதவர்கள் என்ற புகழையும் அடைந்து வந்திருக்கிறார்கள்.


புறாவின் உயிரை காப்பதற்கு சதையை அறிந்து கொடுத்த சிபி சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்தவன் நான். கன்றுக் குட்டியை இழந்த பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டு மகனுக்கு மரண தண்டனை விதித்த மனுநீதி சோழனின் வம்சத்தில் வந்தவன் நான். அதனால் நம் குலத்தவர் அனைவரையும் போல செம்பியன் என்ற குலப் பெயர் பெற்றிருக்கிறேன்.
குலப்பெருமை என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்!
அவர்களுடைய வழியில் வந்தவனாகிய நான் நீதி நெறிக்கு மாறாக நடக்கலாகுமா? இன்னொருவருக்கு நியாயமாக உரிய பொருளையோ பதவியையோ அபகரிக்கலாமா?
சபையில் உள்ளோர்கள் அதிர்ச்சியாக அருள்மொழி வர்மனை பார்க்கிறார்கள்.


நம் ஆஸ்தான புலவர் நம் குல முன்னோர்களை பற்றி அழகான சந்தகவியில் பாடி வந்தபோது அவர்கள் அனைவரும் என் மனக் கண் முன்னால் வந்து தரிசனம் அளித்தார்கள். பரகேசரிகளும், இராஜகேசரிகளும் வரிசை வரிசையாக நின்று காட்சி தந்தார்கள். நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும், பெருங்கிள்ளியும், கோச்செங்கணாரும் என்னை கருணை ததும்பும் கண்களால் நோக்கி எங்கள் குலத்தில் உதித்த மகனே! இந்த சிங்காதனம் உனக்கு உரியதா என்று சிந்தித்து பார்.


ராஜாதித்தர் வீரத் திருவிழிகளால் என்னை பார்த்து...
குமாரா! நீ இந்த சிங்காதனத்தில் ஏறுவதற்கு உரியவனா? என்ன வீரச் செயல் புரிந்தாய் சொல்?
என்று கேட்டார்.


நான் அவர்களுக்கு மறுமொழி சொல்லத் தயங்கினேன். அவர்களிடம் கை கூப்பி வணங்கி விண்ணப்பித்துக் கொண்டேன். சோழ குலத்து முதல்வர்களே! நீங்கள் செய்த அரும்பெரும் செயல்களில் ஆயிரத்தில் ஒன்று கூட நான் செய்யவில்லை. ஆனால், உங்கள் ஆசியுடன் இனிமேல்தான் அத்தகைய காரியங்களைச் செய்யப் போகிறேன்.


நீங்கள் நிலை நாட்டிய சோழ குலத்து புகழ் மேலும் வளர்ந்தோங்கி, நீடூழி நிலைத்திருக்கும் படியான காரியங்களைச் செய்யப் போகிறேன். உலகம் வியக்கும் செயல்கள் புரியப் போகிறேன். வீராதி வீரர்களாகிய நீங்களே பார்த்து மெச்சும்படியான தீரச் செயல்களை புரிந்து உங்கள் எல்லோருடைய வாழ்த்துகளையும் பெறப் போகிறேன்! என்று என்னுடைய குலத்து முன்னோர்களிடம் நான் தெரிவித்தேன்.


வெற்றிவேல் !
வீரவேல் !
வெற்றிவேல் !
வீரவேல் !
வெற்றிவேல் !
வீரவேல் !
ஐயா ! தாங்களை எல்லாம் ஒன்று கேட்கிறேன்.
சிபி சக்கரவர்த்தி முதல் சிவஞான
கண்டராதித்தர் வரையில் எங்கள் சோழ
குலத்து மன்னர்களின் புகழை தாங்கள்
எடுத்து பாடினீர்கள். அவையெல்லாம் இந்த
புராதன குலத்தில் பிறக்கும் பாக்கியம்
பெற்ற எனக்கு எவ்வளவு பொருந்துமோ,
அவ்வளவு என் சிறிய தந்தையும், மகான்
கண்டராதித்த சோழரின் உத்தம திரு
புதல்வருமான மதுராந்தக தேவருக்கு
பொருந்தும் அல்லவா? (அருள்)



தந்தையே! விஜயாலய சோழர் முதல் நம் முன்னோர்கள் அணிந்து வந்த இந்த மணிமகுடத்தை தாங்கள் எனக்கு அளிக்க உவந்தீர்கள். சாமந்தர்கள், தளபதிகள், கோட்டைத் தலைவர்கள், பொது மக்கள் அனைவரும் அதை அங்கீகரித்தார்கள்.
ஆகையால், இந்த கிரீடம் இப்போது என் உடைமை ஆகிவிட்டது. என் உடைமையை நான் என் இஷ்டம் போல் உபயோகிக்கும் உரிமையும் உண்டு அல்லவா!
தளபதி சின்ன பழுவேட்டரையர் இன்னும் திரும்பி வரவில்லை. அதனால் என்ன? குறிப்பிட்ட வேளையில் முடிசூட்டு விழாவை நானே நடத்தி விடுகிறேன்! (அருள்)
இதுதான் சரியான தருணம்!


சட்டென்று பாய்ந்து வந்து, சேந்தன் அமுதனின் தோளை பிடித்து கொள்கிறான் வந்தியத்தேவன்.
நண்பா! சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய முதல் தேவாரத்தின் முதல் அடி என்ன?
"பித்தா! பிறைசூடி!" பிறை சூடியா இல்லை முடி சூடியா?
தேவாரப் பாடல் தெரியவில்லை என்றால் அத்தோடு விடும். அதற்காக நீரே ஏதாவது சேர்த்து பாட வேண்டாம்.


பொன்னியின் செல்வர் எதற்காக மணி மகுடத்தை எடுத்துக் கொண்டு நம்மிடம் வருகிறார்.


பொன்னியின் செல்வர் வாழ்க!
கண்டராதித்தர் புதல்வர் மதுராந்தகர் வாழ்க!


பொன்னியின் செல்வர் மணிமகுடத்தை சூட்டியதும்..
சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தி உத்தமச் சோழர் வாழ்க! வாழ்க!


கோப்பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழதேவர் வாழ்க!
வாழ்க!
வாழ்க!


கோப்பரகேசரி
உத்தம சோழர்
வாழ்க!



கண்டராதித்தர் புதல்வர் மதுராந்தகர் வாழ்க!




பூங்குழலி அம்மையாரும், சேந்தன் அமுதனாரும் மிக சீரும் சிறப்புமாக சோழநாட்டை ஆட்சி செய்கிறார்கள். பொன்னியின் செல்வர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, உத்தம சோழர் (சேந்தன் அமுதன்) மறைவுக்கு பின்பு சிங்காதனம் ஏறுகிறார்.
நீ சிங்காதனம் ஏற மாட்டேன் என்று சபதம் ஏற்று ஒரு வகையில் எனக்கு உதவி புரிந்தாய்.
தங்களுக்கு உதவி செய்வதற்காக ஒன்றும் நான் அப்படி சபதம் செய்யவில்லை. தங்கள் மேல் நான் வைத்திருக்கும் அன்புக்கு களங்கம் வந்ததால் அப்படிச் செய்தேன். (வானதி)


அதோ பறக்கிறதே, அந்த பறவையில் முன்னே பறப்பது ஆண் பறவையா? அல்லது பின்னே தொடர்ந்து செல்வது ஆண் பறவையா?
இதில் என்ன சந்தேகம்? பறப்பதில், ஒரு பறவை பெண், ஒரு பறவை ஆண் என்றால், முன்னே செல்வது பெண் பறவை. அதை தொடர்ந்து செல்வது ஆண் பறவை. அதுதானே உலக இயல்பு!
ஆடி 18 அன்று ஆதித்த கரிகாலரின் நண்பனாய், தூதுவனாய் தஞ்சையை நோக்கி வந்த நம் வந்தியத்தேவன், காற்று, சூறாவளி காற்று, இடி, மின்னல், மழை, கடல் கொந்தளிப்பு, சூழ்ச்சி இப்படி பல சவாலான நிகழ்வுகளை கடந்து, வசந்த காலத்தில் பொன்னி நதியில் சோழ நாட்டு இளவரசியுடன் பயணம் செய்கிறான்.

பொன்னியின் செல்வன் என்ற நாவலின் படக்கதையை மதுராந்தகரின் பட்டாபிஷேகத்துடன் நாங்கள் நிறைவு செய்கிறோம்.

இளையராணி நந்தினியும், ரவிதாசனும் அவனது கூட்டத்தாரும் இடையில் என்ன ஆனார்கள் என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் அல்லவா? காளாமுகன் வேடம் பூண்டு கடம்பூர் மாளிகை வந்த பழுவேட்டரையர் எப்படி அங்கிருந்து வெளியே வந்தார்.

வீர பாண்டியனின் மரணத்துக்கு பழிவாங்கிய பின் கடம்பூர் அரண்மனையிலிருந்து தப்பி கொல்லிமலை காட்டுப் பகுதிக்கு ரவிதாசன் கூட்டத்தாரும் செல்கின்றனர். காளாமுக வேடம் தரித்து நந்தினியை கொல்ல வரும் பழுவேட்டரையர் ஒரு கட்டத்தில் மயங்கி விழுகிறார். அவரையும் தூக்கி வரும்படி ரவிதாசனின் ஆட்களுக்கு நந்தினி கட்டளையிட்டு பழுவேட்டரையரையும் தங்களுடன் கொண்டு சென்று விடுகின்றனர். அடிபட்டு மயங்கியிருக்கும் பழுவேட்டரையருக்கு பணி விடை செய்து அவரைக் காப்பாற்றுகிறாள் நந்தினி. பூங்குழலி தன் அத்தை மந்தாகினியைக் கொன்றவனைத் தேடி அங்கு கொல்லி மலை காட்டு பகுதிக்கு வருகிறாள். அதே இடத்திற்கு, ஆழ்வார்க்கடியானும் வருகிறான். அவன் நந்தினி மற்றும் பழுவேட்டரையரின் இடையிலான உரையாடலை மறைவிலிருந்து கேட்கிறான்.

அதற்குள் சின்னப்பழுவேட்டரையர் தன் அண்ணனைத் தேடி அங்கு வருகிறார். இவர்கள் வருவதை அறிந்து நந்தினியும் அவளது ஆட்களும் அங்கிருந்து தப்பி, காட்டு பகுதியில் சென்று மறைந்து விடுகின்றனர். தன் அண்ணனை அழைத்துக் கொண்டு தலைநகர் திரும்புகிறார் சின்ன பழுவேட்டரையர்.

பட்டாபிஷேகத்தின் இடையில் ஆழ்வார்க்கடியான் வந்து சின்னப் பழுவேட்டரையரின் மகளை ரவிதாசனின் ஆட்கள் அழைத்து செல்வதாக கூற, அவர்களை பின் தொடர்ந்து அங்கிருந்து செல்கிறார் சின்ன பழுவேட்டரையர்.

ரவிதாசனின் கூட்டத்தால் சின்ன பழுவேட்டரையருக்கு ஏதும் ஆபத்து வந்து விட கூடாது என்று பட்டாபிஷேகம் முடிந்தவுடன் ஆழ்வார்க்கடியானையும், வந்தியத்தேவனையும் அனுப்பி வைக்கிறார் பொன்னியின் செல்வர். அவர்கள் சின்ன பழுவேட்டரையர் சென்ற பாதையில் பின் தொடர்ந்து செல்ல அப்பாதை அவர்களை அடர்ந்த காட்டு பகுதிக்கு அழைத்துச் செல்கிறது.

இறுதியில் சின்ன பழுவேட்டரையர் தன் மருமகன் பழைய மதுராந்தகனிடம் வாள் போர் புரிய நேருகிறது. மன குழப்பத்தில் யுத்தம் செய்த சின்ன பழுவேட்டரையர் தன் மகளின் மாங்கல்யத்தை நினைத்து, மனமின்றி பின் வாங்கியபடியே வர, மலைசரிவில் (நீர் வீழ்ச்சி) கால் இடறி விழுகிறார்.

பழைய மதுராந்தகன் அமர புஜங்கன் என்ற புதிய பெயர் இட்டு அழைக்கப்படுகிறான்.

காமிக்ஸ் வாசகர்கள் அறிந்து கொள்ள விரும்பும் விவரங்களைக் கேள்விகளின் ரூபத்தில் இதோ கோர்வைபடுத்தித் தந்திருக்கிறோம்.

1. வந்தியத்தேவர் இளவரசி குந்தவைப் பிராட்டியை மணந்தாரா?

2. கோட்டைத் தளபதி சின்னப்பழுவேட்டரையர் என்ன ஆனார்?

3. வீர வைஷ்ணவனான ஆழ்வார்க்கடியான் என்ன செய்தான்?

4. பொன்னியின் செல்வரின் பிரயாணம் என்ன ஆயிற்று?

5. பழைய மதுராந்தகரும், சின்ன பழுவேட்டரையரின் மருமகபிள்ளையான பாண்டியனைப் பற்றியும் விவரம் என்ன?

6. நந்தினியினால் முடி சூட்டப்பட்ட இளம் பாண்டியனைப் பற்றிய விவரம் என்ன?

7. நந்தினியின் கதி என்ன?

8. வானதியின் சம்பந்தமாக குடந்தை சோதிடர் கூறியவை பலித்தனவா?

9. ஆபத்துதவிகள் என்ன செய்தார்கள்?

மேற்கூறிய கேள்விகள் பலவற்றுக்கு பதில்களை, தமிழ் நாட்டுச் சரித்திரம் படித்தவர்கள் தாங்களே அறிந்து கொள்வார்கள். ஆயினும் அனைவருக்கும் திருப்தி அளிக்கும் பொருட்டு மேற்கண்ட கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் தந்துவிடுகிறோம்.

1. மேலும் பல இடையூறுகளைத் தாண்டிய பிறகு குந்தவையும் வந்தியத்தேவனும் திருமணம் செய்து கொள்கிறார்கள். இருவரும் சோழ சாம்ராஜ்யத்தில் மிகவும் மதிக்கப்படுகிறார்கள்.

தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில், "இராஜராஜ தேவரின் திருத்தமக்கையார், வல்லவரையர் வந்தியத்தேவரின் மகாதேவியார், ஆழ்வார் பராந்தகர் குந்தவையார்" என்று பொறிக்கப்பட்டு விளங்குகிறது.

2. இரும்பு மனிதராகிய சின்னப்பழுவேட்டரையர் உயிர் பிழைத்தும் பல கஷ்டங்களை அனுபவித்த பிறகு ஊருக்குத் திரும்பி வருகிறார். சோழ சாம்ராஜ்யத்துக்குப் பல அரிய சேவைகள் புரிகிறார்.

3. வீர வைஷ்ணவன் ஆழ்வார்க்கடியான் தனது ஒற்றறியும் வேலையை மேலும் நடத்திக்
கொண்டிருக்கிறான். நந்தினியும், பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளும் செய்யும் சதித்திட்டங்களை அறிந்து வந்து சொல்கிறான்.

4. பொன்னியின் செல்வர் வந்தியத்தேவருடன் பெரிய கடற்படை தயாரித்துக் கொண்டு கடற்கொள்ளைக்காரர்களை அடக்கி சோழ சாம்ராஜ்யத்தைக் கடல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளில் நிலைநாட்டுகிறார்.

உத்தம சோழருக்குப் பட்டம் கட்டிப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர் இறந்ததும், பொன்னியின் செல்வர் சிங்காதனம் ஏறுகிறார். "இராஜ ராஜ சோழன்" என்ற பட்டத்துடன் நீண்ட காலம் சோழ சாம்ராஜ்யத்தை ஆளுகிறார்.

5. பழைய மதுராந்தகன் ஆபத்துதவிகளின் தூண்டுதலாலும், ஈழ மன்னன், சேர மன்னன் உதவி கொண்டும் பாண்டிய நாட்டைக் கவர்ந்து முடிசூட்டிக் கொள்ள முயல்கிறான். அவனுடைய முயற்சி பெரிதும் பலம் பெறுகிறது. இராஜராஜ சோழர் பட்டத்துக்கு வந்த பிறகு அமரபுஜங்கன் நெடுஞ்செழியனைப் போரில் வெல்கிறார். அவன் வீர சொர்க்கம் எய்துகிறான். (அமரபுஜங்கன் பழைய மதுராந்தகரின் புதிய பெயர்.)

6. திருப்புறம்பியம் காட்டில் முடிசூட்டப்பட்ட இளம் பாண்டியனும், பாண்டிய ராஜ்யத்துக்கு உரிமை கொண்டாடுகிறான். அவன் போர்களத்திலிருந்து தப்பிச் சென்று மறுபடியும் நாட்டைப் பெற சதி செய்கிறான். இவன் பிற்காலத்தில் இராஜேந்திர சோழனால் போரில் முறியடிக்கப்படுகிறான்.

7. நந்தினி அமரபுஜங்கன் இறந்த பிறகு தானும் உயிர் துறக்கிறாள். அதற்கு முன்னால் அவளை இராஜராஜ சோழர் சந்திக்கிறார். அவரிடம் தன் பிறப்பை குறித்த உண்மையையும், கரிகாலனின் மரணத்தைப் பற்றிய உண்மையையும் கூறி விட்டு இறக்கிறாள்.

8. குடந்தை சோதிடரின் கூற்றுகள் வானதியின் விஷயத்தில் பலிக்கின்றன. (சோதிடர் சாஸ்திரம் பார்த்துச் சொன்னாரா? ஊகத்தினால் சொன்னாரா? நாம் அறியோம்.) வானதிக்குப் பிறக்கும் குழந்தையான இராஜேந்திரன் "கங்கையும் கடாரமும் கொண்ட சோழன்" என்று பிற்காலத்தில் சரித்திரத்தில் புகழ் பெறுகிறான்.

ஆனால் வானதி தன் சபதத்தை நிறைவேற்றிவிட்டு உயிர் துறக்கிறாள். இராஜராஜனுடன் சோழ சிங்காதனம் ஏறுகிறவள் "உலகமகாதேவி" என்னும் திருநாமம் கொண்ட இன்னொரு ராணியாவாள்.

9. ஆபத்துதவிகள் பாண்டிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் முயற்சிகளில் மேலும் ஈடுபட்டு வருகிறார்கள். நந்தினி உயிரோடு இருந்த வரையில் ஆதித்த கரிகாலனுடைய அகால மரண இரகசியம் பற்றி விசாரிக்கப்படவில்லை. அதில் நந்தினியின் பெயரும் வரும் என்ற காரணத்தினால்தான். நந்தினியின் மரணத்துக்குப் பிறகு, இராஜராஜசோழன், ரவிதாசன் முதலிய ஆபத்துதவிகளுக்கு தண்டனை விதித்து அவர்களுடைய சொத்துக்களை பறிமுதல் செய்யவும் கட்டளை பிறப்பிக்கிறான்.

நேயர்கள் அவ்வளவாகக் கவலைப்படாத இன்னும் சில கதாபாத்திரங்களைப் பற்றிய விவரங்களையும் கூறிவிடுகிறேன்.

சுந்தர சோழர் காஞ்சி பொன்மாளிகையில் மூன்று ஆண்டு காலம் வசித்துவிட்டு அங்கேயே உயிர் துறந்து "பொன் மாளிகை துஞ்சிய தேவர்" என்று பெயர் பெறுகிறார்.

அவருடைய அருமை மனைவி வானமாதேவி - மலையமானுடைய மகள், அவருடன் உடன்கட்டை ஏறி சொர்க்கம் அடைகிறாள்.

பார்த்திபேந்திரன் குந்தவை தன்னை நிராகரித்துவிட்ட கோபத்தினால் காஞ்சியில் சுதந்திர பல்லவ ராஜ்யத்தை நிலை நிறுத்தப் பார்க்கிறான். அதில் தோல்வியடைந்து சந்ததியில்லாமல் மாண்டு போகிறான்.

கந்தமாறன் பாலாற்றின் வடமேற்கில் புதிய மாளிகை கட்டிக் கொண்டு சோழ சாம்ராஜ்யத்துக்குத் தொண்டு செய்து வாழ்கிறான். அவனுக்குப் பின்னால் சம்புவரையர் குலம் மிகப் பிரசித்தி அடைகிறது.

நேயர்களைத் திருப்திபடுத்துவதற்காகவே மேலே சொன்னவற்றை எழுதினேன். உண்மையில், இவையெல்லாம் இன்னும் ஒரு பெரிய சரித்திரக் கதைக்கு ஆதாரமாகக் கூடிய முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

உத்தமசோழருக்குப் பின்னால் சிங்காதனம் ஏறிய இராஜராஜன், இராஜேந்திரன், இராஜாதிராஜன், வீர ராஜேந்திரன், குலோத்துங்க சோழன் முதலிய சோழப் பேரரசர்களின் காலத்திய மகோந்நத நிகழ்ச்சிகள் "பொன்னியின் செல்வன்" கதையைப் போல் பல சரித்திரக் கதைகள் புனைவதற்கு ஆதாரமாகக் கூடியவை.

நன்றி,

வணக்கம்!

மீண்டும் ஒரு வரலாற்று நாவல் சார்ந்த படக்கதையுடன் சந்திக்கிறோம்.

நிலா காமிக்ஸ் குழுவினர்.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| கோட்டான் | - | ஆந்தை இனத்தை சேர்ந்த ஒரு வகை பறவை |
| காலாந்தகன் | - | சின்ன பழுவேட்டரையரின் பெயர் |
| வலைஞன் | - | கடலில் வலை போட்டு மீன் பிடிப்பவன் |
| சுரம் | - | காய்ச்சல் |
| ஆனை | - | யானை |
| கோப்பரகேசரி | - | அரசனுக்கு மற்றொரு பெயர் |
| சைன்யம் | - | போர்ப்படை |
| மதியூகி | - | அறிவாளி |
| கங்கணம் | - | உறுதியாக |
| தூமகேது | - | அரிதாக தோன்றும் நட்சத்திரம் (Star) |
| தமையன் | - | உடன் பிறந்தவன் (Brother) |
| தங்காய் | - | தங்கை (Sister) |
| யாழ் களஞ்சியம் | - | விதவிதமான யாழ் (இசை கருவி) சேகரித்து வைத்துள்ள இடம் |
| மிக்காரும் | - | பெரியவர் |
| ஒப்பாரும் | - | சமமானவர் |

## அருஞ்சொற்பொருள்

துர்நிமித்தம் - கெட்ட சகுனம்

ஏகாம்பரநாதர் - சிவன் கடவுளின் மற்றொரு பெயர்

பலிதமாயிருந்தால் - நடந்திருந்தால்

சர்பம் - நாகம் (Snake)

மகோந்நத - உயர்ந்த நிலை

அபகீர்த்தி - கெட்ட பெயர்

அபவாதம் - தவறான பேச்சு

வடவாற்று - ஓர் நதியின் பெயர்

நிராசை - நிறைவேறாத ஆசை

மழவரையன் - ஓர் குறுநில மன்னன்

தேவதாரு - ஓர் வகை மரம்

மகுடாபிஷேகம் - முடிசூட்டு விழா

சாத்தனார் - புலவர்

துங்கபத்திரை நதி - வற்றாத ஓர் நதி

# அருஞ்சொற்பொருள்

| | |
|---|---|
| சாளுக்கர்கள் | ஓர் அரச குலம் |
| வேங்கி | தற்போதைய ஆந்திரத்தின் ஒரு பகுதி |
| பராந்தகன் | சோழ மன்னனின் பெயர் |
| குருக்ஷேத்திரம் | மகாபாரத இறுதிப்போர் நடந்த இடம் |
| தக்கோலம் | சோழ வரலாற்றில் மிக முக்கிய போர் நடந்த இடம் |
| தில்லை | சிதம்பரம் எனும் ஊரின் மற்றொரு பெயர் |
| சிரசில் | தலையில் |
| நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருங்கிள்ளி, கோச்செங்கணார் | சோழ மன்னர்கள் |
| சகோதரஹத்தி | உடன் பிறந்த சகோதரனை கொலை செய்வதால் வரும் தோஷம் |